
கல்கி
காணக் கிடைக்காத தங்கம்
12.4.1970 புத்தாண்டு மலரில் ஆரம்பம்
KALKI 29.3.1970
40 காசு


பொழுதெல்லாம்
புதுப்பொலிவுடன் திகழ...
லக்ஷ்மீஸ்
ஸ்ரீ பாலஸ்ரீ
வாயில்கள்
அன்றாடம் உடுப்பதற்கும்
எல்லா விசேஷ சந்தர்ப்பங்களுக்கும்
உகந்த துணி, கவர்ச்சியான அணி
இலேசான து-கருங்காதது
நேர்த்திமிக்க டிசைன்கள்
பாலஸ்ரீ-வாயில்களுள்
மேம்பட்டது
ஸ்ரீ
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்
சில்லரை ஷோரூம்: 17/93 ஒப்பணக்கார வீதி கோயமுத்தூர்.
387, மெயின் ரோடு, கோவில்பட்டி.
விற்பனை ஏஜண்டுகள்:- ராம்கோ சுதேசிஸ் கோயம்புத்தூர்.
வெங்கடேஷ் வஸ்திராலயா சென்னை-1.
vSK-LM-163



* விலை
எக்சைஸ் வரி உள்பட.
இதர வரிகள் தனி.

மர்பி முஸாபிர்

- இந்த 3-பாண்டு டிரான்ஸிஸ்டர் அழகானது; மனங்கவருவது; உலக நிலையங்களை விரைவாகவும், தெளிவாகவும், இன்னொலியுடனும் தரும் ஆற்றல் படைத்தது.
- அழகிய தோற்றம், மதுரமான ஒலி, நியாயமான விலை.
- எங்குமே எளிதில் கிடைக்கின்ற பெரிய சைஸ் டார்ச் செல்களில் இயங்குகிறது.


ரேடியோ உற்பத்தித் துறையில் 21 வருட ஆராய்ச்சி, திறமை மற்றும் தொழில்நுட்ப அறிவை பின்பலமாகக் கொண்ட அதிநவீன, இந்தியாவின் மிகப் பெரிய பாக்டரியில் மர்பி டிரான்ஸிஸ்டர்கள் தயாரிக்கப்படுகின்றன.



மர்பி இல்லத்தை மகிழ்விக்கிறது!

MAS 307

பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்ப் ஏன் வாங்க வேண்டும்? இதோ 5 சிறந்த காரணங்கள்



1. எல்லா ப்ளூரஸன்ட் லாம்புகளும் வாங்கும் போது பிரகாசமாகவே இருக்கும். ஆனால் உபயோகிக்க உபயோகிக்க அவை ஒளி குன்றிவிடும். உபயோகிக்கும் காலம் முழுவதும் நிறைந்த ஒளி தருபவையே சிறந்த லாம்புகள். பிலிப்ஸ் லாம்புகளில் பிரகாசம் குன்றுவது மிகச் சிறிதளவே. அதோடு ஆரம்பத்திலும் பிலிப்ஸ் லாம்புகள் அதிக ஒளியைத் தருபவை. உதாரணமாக ஒரு 40 வாட் பிலிப்ஸ் லாம்ப் பிரதி வாட்டிற்கு 70 லூமன்களுக்கும் மேலாக ஒளி தருகிறது.

2. ஒரு ப்ளூரஸன்ட் லாம்பின் பிரகாசம் அதிகரிக்க அதிகரிக்க, நிறங்களை மாறுதலின்றிக் காட்டும் அதன் சக்தி குறைந்துவிடும் என்பது விஞ்ஞான ரீதியிலான உண்மை. பிலிப்ஸ் "கூல் டேலைட்" லாம்புகள், சிறந்த ஒளி, நிறங்களை மாறுதலின்றிக் காட்டும் சக்தி இரண்டையுமே பெற்றிருக்கும்படி பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டவை. அதிகப் பிரகாசமான லாம்ப் தேவையென்றால் பிலிப்ஸின் 'வொயிட் லாம்ப்' வாங்குங்கள்.

3. பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்புகளினால் ரேடியோ பாதிக்கப்படாது. ஏனெனில் இவற்றை டிசைன் செய்யும் பொழுதே இப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் பிலிப்ஸ் ஸ்டார்ட்டர்களில் உள்ள ஒரு விசேஷ அமைப்பு எல்லா ஓசைகளையும் சப்தங்களையும் நீக்கி விடுகிறது.

4. பிலிப்ஸ் லாம்புகள் இந்தியாவின் மிகச் சிறந்த, தன்னிறைவு பெற்ற தொழிற்சாலையில், உலகின் உயர்ந்த தரங்களுக்கேற்பத் தயாரிக்கப்படுகின்றன. அவை பெரிய அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே அவற்றின் உயர்தரம் உத்திரவாதம் நிறைந்தது.

5. ப்ளூரஸன்ட் லாம்புகளுடன் பிலிப்ஸ் TL ஸ்டார்ட்டர்களையும் சோக்குகளையும் உபயோகித்தால் நீடித்த உழைப்பும் நிறைந்த ஒளியும் பெறலாம்

பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்புகள்

சீரான ஒளிக்கு இவற்றைவிடச் சிறந்தவை கிடையாது

பிலிப்ஸ் PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-9173

கல்கி பொருளடக்கம்

சௌமிய, பங்குனி, 16 — 1970, மார்ச் 29

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



கால் ஊன்றுமா?



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 29 □ இதழ் 35

சுதந்திரம் அழிய அனுமதிப்போமா?

ஜவாஹர்லால் நேருவின் புதல்வி வெற்றிகரமான பிரதமராக விளங்க வேண்டுமென நாம் எல்லோரும் தீவிரமாக விரும்பலாம். ஆனால் வெறும் விருப்பம் பயன் அளிக்காது. ஒன்றை விரும்புவது வேறு, அதை அடைவதற்கான தகுதியைப் பெறுவது வேறு. ஐம்பது கோடி மக்களின் க்ஷேமத்துக்காக அரசாங்கம் திட்டமிடுவது சிரமம். புது தில்லியில் உள்ள மத்திய சர்க்கார் காரியாலயத்தில் இருந்து கொண்டு அதற்கு வழி செய்வது கஷ்டம். பதவியில் விருப்பம் மட்டும் போதாது. அதற்கான தகுதியும், ராஜ நீதியறிவும் தேவை. மக்களின் அபிமானம் மட்டும் போதாது. நம் பிரதமர் தகுதியுள்ள நல்ல சகாயத்தைத் துச்சமாக மதித்து, தூக்கியெறிந்து விட்டார். இதை மன்னிக்கவே முடியாது. அவரது பிரமையும் பேராசையும் சேர்ந்து கொண்டு இந்தியாவை இரண்டு பெரிய பிரிவுகளாக்கிவிட்டன. இதனால் எல்லாக் கட்சிகளுக்குமே பல சங்கடங்கள் விளைந்துள்ளன. தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எல்லா மாநிலங்களிலும் வகைதொகையற்ற செயல் முறைகளை அவர் ஊக்கி வந்திருக்கிறார்.

இவ்வித கட்சி அரசியல் குழப்பங்களிடையே எல்லா முக்கியமான பிரச்னைகள் குறித்தும் முடிவெடுக்காமல் காலம் கடத்துவது சகஜமாகி விட்டது. காலம் வீணாகிறது என்பது மட்டுமல்ல; ஒவ்வொரு வாரமும் பிரச்னைகள் மேலும் மேலும் சிக்கலாகின்றன. அபாயமான வகையில் உணர்ச்சி வேகத்தை எழுப்பாமல் எதற்கும் தீர்வு காண முடியாது என்ற நிலைமை வந்து விட்டது.

என்றுமே மாறாத ஓர் உண்மையை ஸ்ரீமத் பகவத்கீதை எடுத்துரைக்கிறது. அதாவது, ஒன்றிடம் ஆசை வைத்து அதையே இடையறாது சிந்தித்தால் கட்டுக்கடங்காத பற்று உண்டாகி, இது ஆசாபங்கத்திலும் கோபத்திலும் கொண்டு போய் விடுகிறது. இதனால் உண்டாகும் மனக் குழப்பத்தில் சரியான முடிவு காண்பதற்கு வேண்டிய தெளிந்த அறிவு அழிந்து போகிறது. பலவேறுபாடுள்ள மக்கட் பகுதிகளைக் கொண்ட இந்திய நாட்டை ஆளும் பொறுப்பை வகிப்பவர்களுக்குச் சரியான முடிவு காண்கின்ற தெளிந்த அறிவு மிக மிகத் தேவை. பலதரப்பட்டோரைக் கொண்ட பெரிய சமுதாயத்தை ஆளும் நம் ஆட்சியாளரிடம் இந்தத் தகுதியைக் காணவே முடியவில்லை. அரசியல்வாதிகளின் சுய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பிராந்திய அடிப்படையில் பல வகைச் சுயநலங்கள் சிருஷ்டிக்கப்படுவதையே பார்க்கிறோம்.

இந்தியா பல சிறு கூறுகளாகத் துண்டிக்கப்பட்டுள்ளது போன்ற நிலைக்கு ஸ்ரீமதி காந்தியே பொறுப்பு என்று பலர் கருதுகிறார்கள். ஒன்றாக இருக்க வேண்டிய தேசம், ஒன்றுக்கொன்று விரோதமுள்ள பல சுதந்திர நாடுகளாகத் துண்டாடப்படும் மோசமான நிலைக்கு ஸ்ரீமதி இந்திரா காந்தியின் ஆட்சி நம்மைக் கொண்டு விட்டிருக்கிறது. மொழி வழிப் பிரிவினையால் விளைந்துள்ள சீர்கேடுகளை ஸ்ரீமதி காந்தி குறைக்க முற்படவில்லை. நிலைமையை அவரது ஆசைகள் மேலும் மோசமாக்கி விட்டன. நாடு அனைத்தும் தமது ஆதிக்கத்தில் இருக்க வேண்டும் என்பதே அவரது ஆசை. அதற்கு வேண்டிய தகுதி அவருக்கில்லை. அவர் நாடுவது சொந்தப் பெருமையைத்தான். எப்படியாவது மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் எல்லாம் சரியாக நடந்து விடும் என்று அவர் நினைக்கிறார் போலும். இப்படி நம்பிக்கையுடன் நினைப்பது சரியே. எனினும் அவரது நம்பிக்கை ஆதாரமற்றது. பிராந்திய உணர்வில் பிறந்துள்ள ஜனநாயகம் பல சுயநல உரிமைகளைச் சிருஷ்டித்துள்ளது. நமது மக்கள் நல்லவர்கள்,

ஆனால் எதையும் பரம கபடத்தில் நம்பிவிடக் கூடிய ஏமாளிகள். பார்லிமெண்டுடன் கூடிய ஜனநாயக ஆட்சி முறை சிக்கலானது. அதை வெற்றிகரமாக நடத்தி வைப்பதற்கான முழு தகுதியை இன்னும் மக்கள் சம்பாதித்துக் கொள்ளவில்லை.

உண்மை நிலை எது, வெறும் ஆசை எது என்பதைப் பாகுபாடு செய்து, தம்மை விடச் சிறப்பாகப் பணியாற்றக் கூடியவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு ஸ்ரீமதி காந்தி விலக வேண்டிய தருணம் வந்துவிட்டது. அவரது துரதிருஷ்டகரமான தகுதியின்மையை பட்ஜெட் தெளிவாகப் புலப்படுத்துகிறது. பட்ஜெட்டுக்கு அவரே முற்றிலும் பொறுப்பாளி என்று சொல்வதற்கில்லை. தமது கொள்கை எது என்பதைப் பிரதமர் கூறிச் சித்தாந்த அடிப்படையில் சில பிரமைகளைப் பிரகடனம் செய்திருக்கிறார். அவற்றுக்கு இசைவாக விசுவாசத்துடன் கணக்குப் போட்டு ஒரு பட்ஜெட்டை அதிகாரிகள் தயாரித்திருக்கிறார்கள். அந்தப் பட்ஜெட், வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது; பித்தலாட்டத்தை வளர்க்கிறது. எல்லாப் பண்டங்களின் விலைவாசிகளும் இதனால் பொதுவாக உயருமாதலால் புதிய பட்ஜெட் ஏழைகளைப் பாதிக்கிறது. உற்பத்தியாளர்மீது விதிக்கப்படும் வரிப் பளுவையும் இறுதியில் தாங்க வேண்டியவர் பொது மக்களே.

தொழில்களுக்கான பெர்மிட்டுகளையும் லைசென்சுகளையும் வழங்கும் அதிகாரம் பதவி வகிக்கும் கட்சியின் கையில் இருக்கும் வரையில் சாதாரண ஜனநாயக நடைமுறைப்படி சர்க்காரைத் தோல்வியுறச் செய்து இன்னொரு சர்க்காரைப் பதவியில் அமர்த்த இயலாது. இது எனது திடமான கருத்து. இத்தகைய பொருளாதார ஆதிக்கத்தின் மூலம் தனது ஆட்சியை நிரந்தரமாக்கிக் கொள்வதற்குப் பயன்படுகின்ற அதிகாரம் எந்தக் கட்சிக்கும் இருக்கக் கூடாது. ஆகையால்தான் கட்சிகளுக்கு அப்பாற்பட்டதும், சுதந்திரமாகச் செயலாற்றக் கூடியதுமான ஓர் அமைப்பினிடம் பெர்மிட் — லைசென்ஸ் நிர்வாகம் அனைத்தும் இருந்தாக வேண்டும் என்ற கொள்கையை உறுதியாக வலியுறுத்துமாறு ஸ்தாபன காங்கிரஸை நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இதைச் செய்யாவிடில் இந்தியா ஜனநாயக நாடாகச் சிறந்து விளங்கும் என்று நம்புவதற்கே இல்லை.


ஸ்ரீமதி இந்திரா காந்தி பதவியைத் தொடர்ந்து வகித்து, ராஜீயவாதிகளும் ராஜதந்திரிகளும் ஒன்றும் செய்யாமல் சும்மா பார்த்துக் கொண்டிருக்கும் நிலைமை நீடித்தால், இந்தியாவானது கம்யூனிஸ்ட் ஏகாதிபத்தியத்தில் ஓர் உறுப்பு ஆக வேண்டியது தான். சுதந்திர வாழ்க்கையை நடத்துவதற்கான வாய்ப்புப் போய்விடும். காந்திஜி சம்பாதித்துக் கொடுத்த சுதந்திர வாழ்க்கை முறை நிரந்தரமாக நஷ்டமாகிவிடும். இந்த நிலைக்கு நாடு செல்வதை நாம் தடுக்காமல் இருக்கலாமா?

(''ஸ்வராஜ்யா''வில் ராஜாஜி எழுதியது)

பொறிஇயல் சங்கத் தலைவர்

பிரபல சென்னைத் தொழிலதிபர் திரு கே. ஈசுவரனுக்கு, அவருடைய தொழில் துறைக்கு நெருங்கிய சம்பந்தமுள்ள, புதிய கௌரவப் பதவி கிட்டியிருக்கிறது. இந்திய என்ஜினீரிங் (தொழில்களின்) சங்கத்தின் தென் பிராந்தியக் கிளைக்கு 1970—71ம் ஆண்டுக்கு அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

பொறி இயல் தொழில்களின் பல்வேறு பிரச்னைகளை ஆராய்வதும், குறைகளை எடுத்துச் சொல்லி, அதிகார வர்க்கத்திடமிருந்து கஷ்ட நிவாரணம் பெறுவதும் இந்தச் சங்கத்தின் முக்கிய வேலைகள். என்ஜினீரிங் தொழில்கள் எல்லாவற்றிலுமே இப்போது காணப்படும் முக்கியமான குறை போதிய அளவு எஃகுச் சாமான்கள் குறித்த தரத்திலும் காலத்திலும் தேவைப்படி கிடைக்காமை.



தமிழகத்தில் மற்றொரு குறை தொழில்களுக்கு மின்சாரக் கட்டணம் மிக அதிகம் என்பது. இந்தியாவிலேயே தமிழ் நாட்டு மின்சாரக் கட்டண விகிதம்தான் மிக உயர்ந்தது. மோட்டார், லாரிகள் செலுத்தும் வரி விகிதங்களும் உயர்வாகவே இருக்கின்றன.

தமிழ் நாட்டிலிருந்து ஆண்டுக்குச் சுமார் ஏழு கோடி ரூபாய் மதிப்புள்ள என்ஜினீரிங் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நியச் செலாவணி சம்பாதித்து வருகிறது. அடுத்த ஆண்டில் இது எட்டுக் கோடிக்காவது பெருக வேண்டும் என்று தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தாக்கீது கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக இத்தொழில்களின் பிரச்னைகளும் திட்டங்களும் பலவாறானவை.

ஈசன் கம்பெனிகளின் நிர்வாகப் பொறுப்பை வகித்து நடத்தும் திரு கே. ஈசுவரன் மின் உபகரண விநியோக சாதன உற்பத்தித் துறையில் பிரமிக்கத் தக்க சாதனைகளைப் புரிந்து கொண்டிருப்பதுடன், ஏற்றுமதித் துறையிலும் அற்புத முன்னேற்றம் கண்டிருக்கிறார். அவருடைய அநுபவமும், ஆற்றலும் சுறுசுறுப்பும் இந்திய என்ஜினீரிங் சங்கத்துக்குப் பெரிதும் பயன்படும் என்பது உறுதி.

ராஜாஜியின் கருத்துக்கள்

தேர்தலுக்குப் பெருத்த செலவு தேவைப் படுவது பற்றி நான் குறைகூறி வருகிறேன். தேர்தலுக்காக வேட்பாளர்கள் நிறையச் செலவிட வேண்டியுள்ளதன் இயற்கை விளைவு இப்போது வெளியாகியுள்ளது. தேர்தல் செலவை ஒரு முதலீடு போலக் கருதி, ஒரு சட்டசபை அங்கத்தினர் காலமானால் அவரது குடும்பத்துக்குப் பென்ஷன் தந்து, மேற்படி ''முதலீட்டுக்கு'' நஷ்டஈடு தருவது பற்றி யோசிக்கப்படுகிறது. அங்கத்தினரின் பதவி காலம் முடிவு முன்பே காலமாகிவிடும் சட்ட சபையாளரின் குடும்பங்களுக்குப் பென்ஷன் வழங்கச் சில ராஜ்யங்களின் சர்க்கார்கள் முடிவு செய்துள்ளன. நான் அறிந்த மட்டில் இது உலகில் வேறெங்குமே கண்டிராத அசாதாரண ஏற்பாடாகும். விஷமத்தின் வேரையே கல்லியாக வேண்டும் — அதாவது தேர்தலுக்காக அபேட்சகர்கள் தாங்க வேண்டியிருக்கும் தேவையற்ற செலவுச் சுமையைக் குறைக்க வேண்டும்.

★

நிலமற்றோருக்கு நிலம் வழங்குவதால் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்பது வெறும் பேச்சால் மக்களைக் கவரும் போக்கில் விளையும் அனர்த்தமேயாகும். நியாயமான உரிமையாளரிடம் உள்ள நிலத்தைச் சர்க்காரின் பணச் செலவு கொண்டு ஆர்ஜிதம் செய்து விவசாய முதலீட்டுக்கு வசதியில்லாதவர்களுக்கு விநியோகிப்பதால் தேசத்தின் விவசாயப் பிரச்னை தீர்ந்துவிடாது.

விவசாயம் என்பது ஏழை மக்கள் மேற்கொள்ள முடியாத அளவுக்குச் செலவு மிகுந்த தொழிலாகும். நிலமற்ற ஒருவர் நிலம் பெற்ற பின், அதற்கான செலவை ஏற்க முடியாமல் நிலத்தை ஒரு பாரமாகக் கருதி வேறொருவருக்கு விற்றுவிடுவதை ஆதரித்தாலன்றி இவ்வித விநியோகத்துக்குப் பொருள் இல்லை.

நில உடைமைகளின் வரம்பைக் குறைப்பது குறித்து அரசியல் சாஸனப்படியும், சட்டப்படியும் எழுப்பப்படும் ஆட்சேபங்கள் ஒரு புறமிருக்க, பொதுவாகவே இந்த நடவடிக்கை கண்டனத்துக்கு ஆளாகியுள்ளது. எனவே தமிழ் நாட்டு அரசாங்கம் இவ்விஷயமாக மேலும் யோசனை செய்தால் நல்லது. நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு அரசாங்கம் செலவு செய்ய வேண்டியிருப்பது மட்டுமின்றி, புதிதாக நிலத்தைப் பெறுபவர்கள் விவசாயத்தை நல்லபடியாக நடத்த வேண்டுமாயின் அவர்களுக்காகவும் நிறையச் செலவு மேற்கொள்ள வேண்டும். மொத்தத்தில் அரசாங்க பட்ஜெட்டில் ஏராளமான தொகை இந்த நடவடிக்கைக்காக ஒதுக்க வேண்டியதாகும். தனிமனிதருக்கு உடைமையுரிமை தருகின்ற அடிப்படையில் விவசாயத்துக்காக அரசாங்கம் செலவிட்டு நில ஆர்ஜிதம் செய்யும் இத்திட்டம் செலவு ரீதியில் ஒரு மலைவிழுங்கியாகி விடும். ஸ்டாலின் செய்த முயற்சியால் ஏற்பட்டதை விடக் கடுமையான விளைவையே இது உண்டாக்கும்.

★

உச்ச வரம்பு குறைக்கப்படுவதை முன்னிட்டு, புது வரம்பினால் பாதிக்கப்படாதவாறு சில நில உடைமைகள் உரிமையாளரால் பகிர்ந்தளிக்கப்படுவதாகச் செய்திகள் வருகின்றன. இது சட்டத்துக்குப் புறம்பான 'பினாமி' நடவடிக்கை என்று திரு மதியழகன் கூறியிருக்கிறார். ஒரு நில உரிமையாளர் தமது மக்களிடையே நிலத்தைப் பகிர்ந்து தந்தாலோ, அல்லது இயற்கையான பாசத்தின் மீது நிலத்தை வழங்கினாலோ இதை 'பினாமி' என்றும் சட்டம் மீறுவது என்றும் கூறுவதற்கில்லை. திரு மதியழகன் இதைக் கவனிப்பாராக! சட்டம் அறிந்த அட்வகேட் ஜெனரலிடம் இவ்விஷயமாக அவர் கேட்டறிவாராக!

★


லாட்டரித் திட்டங்களினால் ராஜ்ய சர்க்கார்களுக்கு நிறைய வருமானம் கிடைக்கிறது என்பது பாராட்டுக்குரிய விஷயமல்ல. மாறாக, மக்களை உழைப்பு மனப்பான்மையிலிருந்து சூதாட்டத்துக்குத் திருப்பும் திட்டம் இவ்வளவு வெற்றி காண்கிறதே என வருந்தவே வேண்டும்.

★

தமிழக மேல் சட்டசபையில் பட்டதாரிகள் தொகுதிக்கு அபேட்சகரை நிறுத்திவைக்கச் சுதந்திரக் கட்சிக்கு உரிமை கிடையாது என அந்த ஸ்தானத்துக்குப் போட்டியிடும் ஸ்ரீ வஸந்த பாய் நினைக்கிறார். இது சட்டத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதால் எழுந்த கருத்து. ஸ்ரீ வஸந்த பாய் நினைப்பது போல் பட்டதாரி தொகுதிக்கு எந்த ஓர் அரசியல் கட்சியும் அபேட்சகரை நிறுத்தி வைப்பதையோ ஆதரிப்பதையோ சட்டம் எவ்விதத்திலும் தடுக்கவில்லை.

★

கடைசியில் புது தில்லி சர்க்கார் வங்கத்தில் ராஷ்டிரபதி ஆட்சியைப் பிரகடனம் செய்தே விட்டது. ராஷ்டிரபதி ஆட்சி என்பது நிரந்தரமான உத்தியோகஸ்தர் மூலம் நிர்வாகம் நடத்துவதேயாகும். இந்த நிர்வாகம் சற்றும் கட்சிச் சார்பு இல்லாதிருக்க வேண்டும். ஸ்தாபன காங்கிரஸுக்கு எதிராக ஸ்ரீமதி இந்திரா காந்தியின் திட்டங்களையும் பெரும் ஆசைகளையும் பிரகடனப்படுத்துவதற்கு இந்த நிர்வாகத்தை உபயோகப்படுத்திக்கொள்ள நினைக்கலாகாது. வங்கத்தில் பயங்கர முறைகளும் அச்சுறுத்தல்களும் அழிந்து, கம்யூனிஸத்திலிருந்து விடுதலை ஏற்பட்டு ஜனநாயகம் மீண்டும் நிலைநிறுத்தப்படும் என நம்புகிறேன். அவ்விதம் நிகழப் பிரார்த்திக்கிறேன்.



இருமலும் ஜலதோஷமும் உங்களை பலவீனப் படுத்தும்—இதர நோய்கள் பாதிக்கவும் இடமளிக்கும்.

வாடர்பரீஸ் காம்பவுண்ட் அருந்தி ஆரோக்கியமாகவும் சக்தியுடனும் திகழுங்கள்



இருமலும் ஜலதோஷமும் உங்களை பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைப்பதால், இதர நோய்கள் உங்களைப்பாதிக்கக்கூடும். எனவே தவறாது வாடர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிட்டு வாருங்கள். பசியைத் தூண்டி, இழந்த சக்தியை மீட்டு, உடலுக்கு நோய்த்தடுப்புச்சக்தியை அளிக்கும் ஊட்டப்பொருள்கள் அடங்கியது வாடர்பரீஸ் காம்பவுண்ட். அதிலுள்ள க்ரியோஸோட் மற்றும் க்வையாகால் இருமலிலிருந்தும் ஜலதோஷத்திலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றன.

வாடர்பரீஸ் காம்பவுண்ட்—மிகவும் நம்பகமான டானிக்

வார்னர்-ஹிந்துஸ்தான் லிமிடெட்

WH 8075 TM



முப்பத்துநான்காம் அத்தியாயம்

தீவர்த்தி அணைந்தது!

அமாவாசை முன்னிரவு. நன்றாக இருள் சூழ்ந்து விட்டது. வடதிசையில் தோன்றி மேலே வந்த கரிய மேகங்கள் இப்போது வானவெளி முழுதும் பரவி மறைத்து விட்டன. ஆகாசத்தில் ஒரு நட்சத்திரம்கூடக் கண் சிமிட்டவில்லை. மரங்களின் மீதும் புதர்களின் மீதும் பறந்த மின்மினிப் பூச்சிகள் சிறிது வெளிச்சம் அளித்தன. அதன் உதவி கொண்டு வந்தியத்தேவன் குதிரையைச் செலுத்திக் கொண்டு போனான். எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம், போவதினால் பயன் ஏதேனும் ஏற்படுமா என்பது ஒன்றும் தெளிவாகவில்லை. குந்தவைப் பிராட்டியின் அருமைத் தோழிக்கு ஆபத்து வந்திருக்கிறது. அவளைக் காப்பாற்ற முயலுவது தன் கடமை. அப்புறம் கடவுள் இருக்கிறார்!

ஒரு நாழிகை நேரம் குதிரை ஓடிய பிறகும் பல்லக்கைக் கண்டுபிடிக்க முடியவில்லை. வெறும் பைத்தியக்கார வேலையில் இறங்கி விட்டோமோ என்ற யோசனை வந்தியத்தேவன் மனத்தில் உதித்தது. குதிரையை நிறுத்தினான். அச்சமயம் சற்றுத் தூரத்தில் ஏதோ சத்தம் கேட்டது. கூர்ந்து கவனித்தான். குதிரைக் காலடிச் சத்தம் போலிருந்தது. ஆம், குதிரைதான்! ஒரு குதிரையா, பல குதிரைகளா என்று தெரியவில்லை. பல்லக்கைக் காவல் புரிந்து கொண்டு போகும் குதிரை வீரர்களாயிருக்கலாம். இனி ஜாக்கிரதையாகப் போக வேண்டும். திடீரென்று பெருங் கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. அதனால் வானதி தேவிக்கும் பயனில்லை; இல்லை தன் காரியமும் கெட்டுப்போகும்.

மெள்ள மெள்ள, நின்று நின்று, குதிரையை விட்டுக்கொண்டு போனான். முன்னால் போவது ஒரே குதிரைதான் என்று ஒருவாறு நிச்சயித்துக் கொண்டான். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தக் குதிரை ஒரு மேட்டுப் பாங்கான கரையின் மீது ஏறுவதுபோல் தோன்றியது. தான் பின்தொடர்வது தெரியாமல் மறைந்து நிற்க விரும்பினான். சுற்றுமுற்றும் கூர்ந்து பார்த்தான்.

பாழடைந்த மண்டபம் ஒன்று இடிந்த சுவர்களுடன் பக்கத்தில் காணப்பட்டது. அதன் அருகே சென்று மொட்டைச் சுவர் ஒன்றின் மறைவில் குதிரையை நிறுத்திக் கொண்டான். முன்னால் சென்று மேட்டில் ஏறிய குதிரையைக் கண்கள் வலிக்கும்படியாக இருட்டில் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''யார் அங்கே?'' என்ற குரல் வந்தியத் தேவனைத் திடுக்கிடச் செய்தது. அது அவனுக்குப் பழக்கப்பட்ட மனிதரின் குரலாகத் தோன்றியது.



'' மகாராஜா ! அடிமை, நான் தான்!'' என்ற மறு குரலும் கேட்டது.

ஒருநிமிட நேரத்துக்கெல்லாம் குரல்கள் கேட்ட இடத்தில் ஒரு தீவர்த்தி வெளிச்சம் தோன்றியது. மரத்தின் மறைவிலிருந்து கையில் தீவர்த்தியுடன் ஒருவன் வெளிவந்தான். அதன் வெளிச்சத்தில் குதிரை தெரிந்தது. குதிரையின் மேல் ஓர் ஆள் வீற்றிருப்பதும் தெரிந்தது. குதிரை மேலிருந்தவர் மதுராந்தகர்தான் என்பது உறுதியாயிற்று.

தரையில் நின்றவன் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தபோது இளவரசர் ஏறியிருந்த குதிரை மிரண்டது. முன்னங்கால்களை அது மேலே தூக்கி ஒரு தடவை சுழன்றது. பின்னர் சடால் என்று பாய்ந்து ஓடத் தொடங்கியது.

அந்தக் குதிரை நின்ற இடம் ஓர் அகன்ற வாய்க்காலின் கரை. அந்த மேட்டுக் கரையிலிருந்து குதிரை வாய்க்காலின் வெள்ளத்தில் பாய்ந்தது.

தீவர்த்தி பிடித்த மனிதன், ''மகாராஜா! மகாராஜா!'' என்று கூவிக்கொண்டே குதிரையைப் பின் தொடர்ந்து வாய்க்காலில் குதித்தான். குதித்தவன் இடறி விழுந்தான். தீவர்த்தி வாய்க்காலின் வெள்ளத்தில் அமிழ்ந்தது.


மறுகணம் முன்னைவிடப் பன்மடங்கு கனாந்தகாரம் சூழ்ந்தது.

அதே சமயத்தில் இலேசாகத் தூற்றல் போடத் தொடங்கியது.

காற்றினால் மரங்கள் ஆடிய சத்தத்துக்கும் மழைத் தூறலின் சத்தத்துக்கும் மண்டூகங்களின் வறட்டுக் கத்தல்களுக்கும் இடையே மனிதர்களின் அபயக் குரல்களும் குதிரைகளின் காலடிச் சத்தமும் குழப்பமாகக் கேட்டன.

இளவரசர் மதுராந்தகர் அவ்வளவாகத் தைரியத்துக்குப் பெயர் போன மனிதர் அல்ல என்பதை வந்தியத் தேவன் அறிந்திருந்தான்.

மிரண்ட குதிரையின் மேலிருந்த மதுராந்தகருக்கு என்ன ஆபத்து விளையுமோ என்று அவன் உள்ளம் திடுக்கிட்டது. குதிரை அவரைச் சுமந்து கொண்டே தெறி கெட்டு ஓடினாலும் ஓடலாம். அல்லது அவரை வாய்க்கால்



வெள்ளத்திலேயே தள்ளி யிருந்தாலும் தள்ளியிருக்கலாம். அல்லது சற்றுத் தூரம் அவரைச் சுமந்து கொண்டு சென்று வேறு எங்கேயாவது தள்ளி விட்டுப் போயிருக்கவும் கூடும்.

தீவர்த்தியுடன் வந்த மனிதனால் குதிரையைத் தொடர்ந்து போய் அவரைக் காப்பாற்ற முடியுமா? அவனே தான் வாய்க்கால் வெள்ளத்தில் தடுமாறி விழுந்து விட்டானே ?

அச்சமயம் தான் செய்ய வேண்டியது என்ன? வானதியைத் தேடிப் போவதா? மதுராந்தகரின் உதவிக்குச் செல்லுவதா என்ற போராட்டம் ஒரு நிமிடம் அவன் உள்ளத்தில் நிகழ்ந்தது.

வானதி தேவி போன இடமே தெரியவில்லை. ஆனால் மதுராந்தகர் தன் கண் முன்னால் ஆபத்துக்கு உள்ளானார். அவருக்கு உதவி செய்வது எளிது. அவரைத் தேடிப் பிடித்து அபாயம் ஒன்றுமில்லை

என்று கண்டால், பிறகு வானதியைத் தேடிப் போவது இருக்கவே இருக்கிறது! கடவுளே! சம்பந்தமில்லாத வேறு எந்தக் காரியத்திலும் தலையிடுவதில்லை என்று தான் சற்று முன்னால் தீர்மானித்துக் கொண்டு கிளம்பியது என்ன? இப்போது நடப்பது என்ன?

மண்டபச் சுவரின் மறைவிலிருந்து குதிரையை வெளியில் கொண்டு வந்தான் வந்தியத்தேவன். இருட்டிலும் தூற்றலிலும் உள்ளுணர்ச்சியினால் வழி கண்டு பிடித்து வாய்க்காலில் இளவரசரின் குதிரை இறங்கிய இடத்தை நோக்கிச் சென்றான். வாய்க்காலில் அவனும் இறங்கினான். சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்தான். ஒன்றும் தென்படவில்லை. எங்கேயோ தூரத்தில் 'ஆ-ஆ-ஆ' 'ஓஓஓ!', 'ஊஊ!', 'டடபடா டடபடா' 'கடகட கடகடா!' என்பவைபோன்ற விவரம் தெரியாத சத்தங்கள் கேட்டன.

வாய்க்காலின் அக்கரையில் ஏறினான். கரை மேட்டுக்கு அப்பால் உற்றுப் பார்த்தான். நெடு



லும் நெல் வயல்களாகக் காணப் பட்டன. வயல்களில் சேற்றிலும் பச்சைப் பயிரிலும் குதிரையை நடத்திச் செல்வது இயலாத காரியம். கரையோடு போய்த்தான் தேடிப் பார்க்க வேண்டும்.

வாய்க்காலின் கரையிலோ செடி கொடிகளும் முட் புதர்களும் அடர்ந்திருந்தன. அவற்றின் நடுவே சென்ற குறுகிய ஒற்றையடிப் பாதை வழியாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டு சென்றான். மேலே மழை; கீழே சறுக்கும் சேற்றுத் தரை; ஒரு பக்கத்தில் வாய்க்கால்; இன்னொரு பக்கத்தில் நெல் வயல்கள்; சுற்றிலும் முட்புதர்கள்.

குதிரை மெள்ள மெள்ளச் சென்றது.

நேரமோ ஒரு நிமிஷம் ஒரு யுகமாகச் சென்றது!

தூற்றல் மழையாக வலுத்துக் கொண்டிருந்தது!

இருட்டு மேலும் இருண்டு கொண்டிருந்தது!

வந்தியத்தேவனுடைய உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது.

மதுராந்தகத் தேவர் தனியாகக் குதிரை மீது ஏன் வந்தார்? எங்கே செல்வதற்காகப் புறப்பட்டு வந்தார்? அவரை எதிர்கொண்டு வந்த மனிதன் யார்?

வானதியைச் சிலர் பிடித்துக்கொண்டு சென்றதற்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா?

வானதியின் கதி இப்போது என்ன ஆகியிருக்கும்?

நாம் எதற்காக இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கவேண்டும்? நம்முடைய காரியத்தை நாம் பார்க்கலாமே? இராஜ பாட்டையைத் தேடிப் பிடித்து அடைந்து, காஞ்சியை நோக்கிப் போகலாமே?

அதுதான் இந்த மழைக்கால இருட்டில் எப்படிச் சாத்தியமாகும்?

இந்தக் காரியங்கள் எல்லாம் நமக்குச் சம்பந்தம் இல்லை என்று எப்படித் தீர்மானிக்க முடியும்?

கடம்பூர் சம்புவரையர் அரண்மனையில் நமக்குச் சம்பந்தமில்லாத காரியத்தைக் கவனித்ததினால் பிற்பாடு எவ்வளவு உபயோகம் ஏற்பட்டது?

ஆனாலும் இன்றிரவு இந்த இருட்டில் இந்த வாய்க்காலின் கரையோடு போய்க் கொண்டிருப்பதினால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. சொட்ட நனைவது தான் பயன்! குதிரை எங்கேயாவது இடறி விழுந்து காலை ஒடித்துக் கொண்டால், பிரயாணமே தடைப்பட்டுவிடும்.

திரும்பிச் சென்று அந்தப் பாழும் மண்டபத்தை அடைய வேண்டியது தான். மழை விட்ட பிறகுதான் மறுபடியும் புறப்பட வேண்டும்.

பளிச்சென்று ஒரு மின்னல். அதன் கண நேர வெளிச்சத்தில், சிறிது தூரத்தில், களத்து மேடு ஒன்றில், குதிரை நின்றது போலத் தெரிந்தது.

வந்ததுதான் வந்தோம்; இன்னும் கொஞ்ச தூரம் சென்று, அதையும் பார்த்து விட்டுத்தான் போகலாமே! இளவரசர் மதுராந்தகருக்கு ஆபத்துச் சமயத்தில் கைகொடுத்து உதவினால், அதன் மூலம் பிற்பாடு எவ்வளவோ காரியங்களுக்குச் சாதகம் ஏற்படலாம்.

குதிரையை வாய்க்காலின் கரையிலிருந்து பக்கத்து வயல் வரப்பில் வந்தியத்தேவன் இறக்கினான். குதிரை நின்றதாகத் தோன்றிய களத்து மேட்டை நோக்கிச் செலுத்தினான்.

களத்து மேட்டின் சமீபத்தை அடைந்தபோது அது ஒரு பெரிய கரிய பூதத்தைப் போல் காட்சி அளித்தது.

இன்னொரு மின்னல்.

மேட்டின் மீது குதிரை நின்றது ஒரு கணம் தெரிந்தது. குதிரையின் பேரில் ஆள் இல்லை என்பதை வந்தியத்தேவன் கவனித்துக் கொண்டான்.

இடி இடித்தது!

இடிக்கும் மின்னலுக்கும் பயந்து தானோ என்னமோ அந்தக் குதிரை மறுபடியும் தெறி கெட்டுப் பாய்ந்து ஓடத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து போவதில் இனி ஒரு பயனுமில்லை.

பக்கத்தில் எங்கேயாவது குதிரை மேலிருந்து விழுந்த மதுராந்தகத்தேவர் ஒரு வேளை இருக்கக் கூடும்.

ஆகையால், வந்தியத் தேவன் பல முறை குரல் கொடுத்துப் பார்த்தான். ''ஜிம்ஜிம்'' ''ரிம்ரிம்'' என்னும் மழை இரைச்சலை மீறி அவனுடைய இடி முழக்கக் குரல், ''அங்கே யார்?'' ''அங்கே யார்?'' என்று எழுந்தது. நாலாபுறத்திலிருந்தும் 'அங்கே யார்?' 'அங்கே யார்?' என்ற எதிரொலிதான் கேட்டது.

மழை மேலும் வலுத்துக் கொண்டிருந்தது. வாடைக் காற்று விர் என்று அடித்தது. காற்றின் வேகத்தினால் மழைத் தாரைகள் பக்கவாட்டில் திரும்பித் தாக்கின. குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது. வந்தியத் தேவனுடைய உடம்பும் மழையினால் தாக்கப்பட்டுக் குளிரினால் நடுங்கத் தொடங்கியது.

இனி அங்கே நிற்பதில் ஒரு பயனுமில்லை. வந்தியத் தேவன் குதிரையை வந்த வழியே திருப்பினான். தன்னுடைய

அறிவீனத்தை எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டே வந்தான். இனிமேலாவது இத்தகைய அசட்டுக் காரியங்களில் இறங்காமல் இருக்க வேண்டும். நம்முடைய காரியம் உண்டு, நாம் உண்டு என்று பார்த்துக் கொண்டு போக வேண்டும்....

குதிரை தன்னுடைய உள்ளுணர்ச்சியைக் கொண்டு வழி கண்டு பிடித்து இடிந்த மண்டபத்துக்கு அருகில் வந்து நின்று ஒரு கனைப்புக் கனைத்தது: அப்போதுதான் வந்தியத்தேவன் சிந்தனை உலகத்திலிருந்து இந்த உலகத்துக்கு வந்தான். குதிரை மீதிருந்து இறங்கினான். அவன் உடுத்தியிருந்த துணிகள் சொட்ட நனைந்து போயிருந்தன. அவற்றை உலர்த்தியாக வேண்டும். அன்றிரவு அந்த இடிந்த மண்டபத்தில் தானும் குதிரையும் தங்கியிருப்பதற்கு இடியாத பகுதி ஏதேனும் இருக்கிறதா என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

வெட்டவெளியில் கொட்டுகின்ற மழையில் காலிலே நெருப்புச் சுட்டால் எப்படியிருக்கும்? அவ்வாறு வந்தியத்தேவன் துள்ளிக் குதிக்க நேர்ந்தது. அதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. பேயில்லை: பிசாசில்லை; ஒரு சின்னஞ்சிறு குழந்தையின் குரல்தான் !

''அம்மா ! அம்மா !''

பேயில்லை, பிசாசில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? அந்த வேளையில் அந்த மண்டபத்தில், குழந்தைக் குரல் எப்படிக் கேட்க முடியும்?

அது பேய் பிசாசின் குரல் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

சீச்சீ! பேயும் இல்லை; பிசாசும் இல்லை! பேயும் பிசாசும் பயப்பிராந்தி கொண்ட பேதைகளின் கற்பனை!

''அம்மா ! அம்மா! ஊம்! ஊம்!'' இது மனிதக் குழந்தையின் குரல்தான்! தாயைப் பிரிந்த சேயின் பயங் கலந்த அழுகைக் குரல்தான் !

இடிந்த மண்டபத்தின் இருளடைந்த பகுதியிலிருந்து வருகிறது.

குழந்தை மட்டுந்தான் இருக்கிறதா? வேறு யாரும் இல்லையா?

''அம்மா! அம்மா! ஊம்! ஊம்!''

குரல் வந்த இடத்துக்குச் சமீபத்தில் சென்று வந்தியத்தேவன், '' யார் அங்கே ?'' என்றான்.

''யார் அங்கே?'' என்று குழந்தையின் குரல் எதிரொலித்தது.

''நான்தான்! நீ யார்? இருட்டில் என்ன செய்கிறாய்! வெளியே வா!''

''வெளியில் மழை பெய்கிறதே!''

''மழை நின்றுவிட்டது: வா!''

''என் அம்மா எங்கே?''

''அம்மா உனக்குப் பால் வாங்கிக் கொண்டு வரப் போயிருக்கிறாள்.''

''இல்லை; நீ பொய் சொல்கிறாய்!''

''நீ வெளியில் வருகிறாயா? நான் உள்ளே வரட்டுமா !''

''உள்ளே வந்தால் என் கையிலே கத்தியிருக்கிறது ; குத்தி விடுவேன் !''

''அடே அப்பா ! பெரிய வீரனாயிருக்கிறாயே? வெளியில் வந்துதான் குத்தேன் !''

''நீ யார்? புலி இல்லையே?''

''நான் புலி இல்லை; குதிரை!'' என்றான் வந்தியத்தேவன்.

''நீ பொய் சொல்லுகிறாய்; குதிரை பேசுமா ?''

''புலியாயிருந்தால் பேசுமா?''

''வெளியில் வந்தால் புலி இருக்கும், ஒருவேளை மேலே பாய்ந்து விடும் என்று அம்மா சொன்னாள்.''

''நான் புலி இல்லை; உன் பேரில் பாயவும் மாட்டேன்; பயப்படாமல் வெளியே வா !''

''பயமா? எனக்கு என்ன பயம்?'' என்று சொல்லிக் கொண்டே ஒரு சின்னஞ் சிறு குழந்தை இருண்ட மண்டபத்திலிருந்து வெளியே வந்தது.

இதற்குள் மழை நன்றாக விட்டுப் போயிருந்தது. மேகங்கள் சிறிது விலகி நட்சத்திரங்களும் தெரிந்தன.

நட்சத்திர வெளிச்சத்தில் அக்குழந்தையை வந்தியத்தேவன் பார்த்தான்.

சுமார் நாலு வயது இருக்கும்.

தெரிந்த வெளிச்சத்தைக் கொண்டு வெகு இலட்சணமான குழந்தை என்று தெரிந்து கொண்டான்.

இடுப்பில் ஒரு சிறிய பட்டுத் துணி உடுத்தியிருந்தது. கழுத்தில் ஒரு ரத்தின மாலை அணிந்திருந்தது.

பெரிய குலத்துக் குழந்தையாகவே இருக்க வேண்டும். இதை இங்கே தனியாக விட்டு விட்டுப் போன தாய் யார்? இங்கே எதற்காக வந்தாள்? ஏன் குழந்தையை விட்டு விட்டுப் போனாள் ?

இதற்குள் குழந்தையும் வந்தியத்தேவனை உற்றுப் பார்த்து விட்டு, ''நீ குதிரை இல்லை; மனிதனைப் போல்தான் இருக்கிறாய்!'' என்றது.

''அதோ குதிரையும் இருக்கிறது, பார் !'' என்றான் வந்தியத்தேவன்.

குழந்தை குதிரையைப் பார்த்தது.

''ஓகோ! எனக்காகத்தான் கொண்டு வந்திருக்கிறாயா? பல்லக்கு வரும் என்றல்லவா சொன்னார்கள் ?''

சிறுவனின் மறுமொழி வந்தியத்தேவனுடைய மனத்தில் பற்பல முரண்பட்ட எண்ணங்களை உண்டாக்கின. இந்தக் குழந்தை யார்? இவன் ஏன் இங்கே

தனியாயிருக்கிறான்? இவ்வளவு சின்னஞ் சிறு பிள்ளை இப்படிச் சற்றும் பயப்படாமல் இருக்கிறானே, இது ஆச்சரியமல்லவா? இவனுக்காக யார் பல்லக்கு அனுப்புவதாகச் சொல்லியிருந்தார்கள்? அது ஏன் வரவில்லை? இவனை விட்டு விட்டுப் போன இவன் அம்மா யார்? அவள் எங்கே போயிருக்கிறாள்?

"குழந்தை! உன்னை ஏன் உன் அம்மா விட்டு விட்டுப் போய் விட்டான் ?" என்று கேட்டான்.

"அம்மா என்னை விட்டு விட்டுப் போகவில்லை; நான்தான் அவளை விட்டு விட்டு வந்து விட்டேன்!" என்றான் அந்தச் சிறுவன்.

"ஏன் விட்டு விட்டு வந்தாய்?"

"குதிரை ஒன்று ஓடி வந்தது. அதைப் பிடித்து அதன் மேல் ஏறிக்கொண்டு வரலாம் என்று நான் சொன்னேன். அம்மா கூடாது என்றாள். நான் அவளுக்குத் தெரியாமல் குதிரையைப் பிடிக்க ஓடி வந்தேன். அந்தக் குதிரைதானா இது?"

"இல்லை; இது வேறு குதிரை! அப்புறம், எப்படி வந்தாய்?"

"குதிரை அகப்படவில்லை. அம்மாவையும் காணவில்லை. மழை அதிகமாக வந்தது. அதற்காக இந்த மண்டபத்துக்குள் வந்தேன்."

"இருட்டில் தனியாக இருக்க உனக்குப் பயமாயில்லையா?"

"பயம் என்ன? தினம் தினம் இந்த மாதிரிதானே இருக்கிறேன்?"

"புலிக்குக்கூடப் பயமில்லையா?"

"அம்மாவுக்குத்தான் பயம். எனக்குப் பயம் இல்லை. நான் மீன். புலியை விழுங்கி விடுவேன்."

"அடே! மீன் புலியை விழுங்குமா?"

"நான் சாதாரண சின்னமீன் இல்லை! பெரிய மகர மீன்; திமிங்கிலம்! புலி, சிங்கம், யானை எல்லாவற்றையும் விழுங்கி விடுவேன்!...."

வந்தியத் தேவன் மனத்தில் என்னவெல்லாமோ எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்தன. புலியை விழுங்கும் மீன் அதிசயமான மீன் அல்லவா! இப்படி யார் இந்தப் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுத்திருப்பார்கள்?

"அதோ அங்கே என்ன சத்தம்?" என்று கேட்டான் சிறுவன்.

வந்தியத் தேவன் பார்த்தான். தூரத்தில் ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது. கூட்டத்தில் சிலர் தீவர்த்திப் பந்தங்களை வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் ஒரு பல்லக்கும் தெரிந்தது. எல்லாரும் பரபரப்புடன் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு பெண் பிள்ளையும் இருந்ததாகத் தோன்றியது. "அங்கே!" "இங்கே!" "அதோ!" "இதோ!" என்ற கலவரமான குரல்கள் கேட்டன.

இடிந்த மண்டபத்தைக் கூட்டத்தில் ஒருவன் பார்த்துச் சுட்டிக் காட்டினான். அவ்வளவுதான்; எல்லாரும் அம்மண்டபத்தை நோக்கி ஓட்டம் பிடித்து ஓடி வந்தார்கள்.

"அதோ வருகிறார்கள். பல்லக்கும் வருகிறது. எனக்குப் பல்லக்கில் ஏறப் பிடிக்கவில்லை. என்னை உன் குதிரையின் மேல் ஏற்றிக் கொண்டு போகப் போகிறாயா?" என்று சிறுவன் கேட்டான்.

அந்தக் குழந்தையின் முகமும் தோற்றமும் பேச்சுக்களும் வந்தியத் தேவனுடைய மனத்தைக் கவர்ந்தன. அவனைக் கட்டி அணைத்துத் தூக்கிக் கொள்ளலாம் என்று தோன்றியது. ஆனால், மனத்துக்குள் ஏதோ ஒரு தடங்கலும் கூடவே ஏற்பட்டது.

"எனக்கு வேறு அவசர வேலை இருக்கிறதே!" என்றான் வந்தியத்தேவன்.

"நீ எங்கே போகப் போகிறாய்?"

"காஞ்சிக்கு!"

"காஞ்சிக்கா! அங்கேதான் என்னுடைய முக்கிய சத்துரு இருக்கிறான்!"

வந்தியத்தேவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவ்விடம் அந்தப் பிள்ளையின் அருகில் தான் நிற்பதுகூடப் பிசகு என்று எண்ணினான். ஆனால் குதிரையின்மேல் ஏறிப்போவதற்கும் அவகாசம் இல்லை. கூட்டம் வெகு அருகில் வந்து விட்டது. ஓடினால் சந்தேகத்துக்கு இடமாகும். இவ்வளவுடன், என்னதான் நடக்கப் போகிறது என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் வந்தியத்தேவனைப் பற்றியிருந்தது. ஆகையால் சற்று ஒதுங்கிச் சென்று இடிந்த சுவர் ஓரமாக இருட்டில் நின்றான்.

"இதோ நான் இருக்கிறேன்" என்று முன்னால் போய் நின்றான் சிறுவன்.

வந்தவர்களிலெல்லாம் முதலில் வந்தவள் ஒரு பெண் பிள்ளை. அவளுக்கு ஓடி வந்ததினால் இரைத்துக் கொண்டிருந்தது. அதை அவள் பொருட்படுத்தாமல் தாவி வந்து குழந்தையை எடுத்து வாரி அணைத்துக் கொண்டு, "பாண்டியா! இப்படிச் செய்து விட்டாயே ?" என்றாள்.

அவளுக்கு அடுத்தபடியாக வந்தவன் ரவிதாஸன். அவன் சிறுவனின் பக்கத்தில் வந்து நின்று, "சக்கரவர்த்தி! இப்படி எங்களைப் பயமுறுத்தி விட்டீர்களே?" என்றான்.

சிறுவன் சிரித்தான். "அப்படித்தான் பயமுறுத்துவேன். நான் குதிரை வேண்டும் என்று கேட்டேன். பல்லக்குக்

கொண்டு வந்திருக்கிறீர்களே!'' என்றான்.

நாம் முன்னம் பார்த்திருக்கும் சோமன் சாம்பவன், இடும்பன்காரி, தேவராளன் முதலியவர்கள் சிறுவனை வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

''சக்கரவர்த்தி! ஒரு குதிரை என்ன, ஆயிரம் குதிரை, பதினாயிரம்குதிரை கொண்டு வருகிறோம். இன்றைக்கு இப்பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள்!'' என்றான் சோமன் சாம்பவன்.

''மாட்டேன்; நான் அந்தக் குதிரை மேலேதான் ஏறி வருவேன்'' என்று சிறுவன் கூறிச் சுவர் மறைவில் நின்ற குதிரையைச் சுட்டிக் காட்டினான்.

அப்போதுதான் குதிரையையும் அதன் அருகில் நின்ற வந்தியத்தேவனையும் அவர்கள் கவனித்தார்கள்.

ரவிதாஸன் முகத்தில், வியப்பும், இகழும் குரோதமும் கொழுந்து விட்டு எரிந்தன.

இரண்டு அடி முன்னால் சென்று ''அடா பாவி! நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்?'' என்று கேட்டான்.

''அடா பிசாசே! கோடிக்கரையிலிருந்து நீ எப்படி இங்கே வந்தாய்?'' என்று கேட்டான் வந்தியத்தேவன்.

ரவிதாஸன், 'ஹா ஹா ஹா' என்று சிரித்தான். ''நீ என்னை உண்மையாகவே பிசாசு என்று நினைத்துக் கொண்டாயா?'' என்று கேட்டான்.

''சிலர் செத்துப் போன பிறகு பிசாசு ஆவார்கள். நீ உயிரோடிருக்கும் பிசாசு!'' என்றான் வந்தியத்தேவன்.

இதற்குள் சிறுவன், ''அவனோடு சண்டை போடாதே! அவனை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. இருட்டில் அவன் எனக்குத் துணையாயிருந்தான். புலி வந்தால் கொன்று விடுவதாகச் சொன்னான். அவனும் நம்மோடு வரட்டும்'' என்றான்.

ரவிதாஸன் சிறுவன் அருகில் சென்று, ''சக்கரவர்த்தி! அவசியம் அவனையும் அழைத்துப் போகலாம். தாங்கள் இன்றைக்கு ஒரு நாள் பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள்!'' என்றான்.

சிறுவன் அவ்வாறே பல்லக்கை நோக்கிச் சென்றான்.

ரவிதாஸன் வந்தியத்தேவனை மறுபடியும் நெருங்கி, ''இப்போது என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான்.

''நீயல்லவா சொல்ல வேண்டும்?''

''எங்களுடன் வந்துவிடு! எங்களுடைய இரகசியம் உனக்கு முன்னமே அதிகம் தெரியும். இப்போது



சிட்னியிலே எழும் கீதம் ...

கர்நாடக சங்கீதமும் இந்துஸ்தானி இசையும் இப்பொழுது உலகுக்குச் சொந்தமாகிவிட்டன. ஆஸ்திரேலியாவிலும் இந்திய இசை பரவி வருகிறது. அண்மையில் சிட்னி பல்கலைக் கழகத்தில் கர்நாடக இந்துஸ்தானி இசை வகுப்புக்கள் நடத்தப்பட்டன. ஆஸ்திரேலியக் கலைக் கவுன்சில் ஏற்பாடு செய்த இந்த ஆசிய இசை வகுப்பில் அறுபது பேர் கலந்து கொண்டனர். இந்திய இசை வகுப்புக்களைச் சிறப்பாக நடத்தியவர் இந்தியக் கலைஞர் அல்ல. ஓர் ஆஸ்திரேலிய மாது. ஆனால் அவர் இதயத்தில் நிறைந்திருப்பதெல்லாம் இந்திய இசையும் கலையும்தான்!

இதற்குக் காரணம் இருக்கிறது. ஸ்ரீமதி பாட்ரீசியா ரோலிக் என்னும் அந்தப் பெண்மணி இந்தியாவில் பதினைந்து ஆண்டு காலம் தங்கியவர். இரண்டு வருடங்களுக்கு முன்புதான் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பினார். பதினைந்து வருடங்களில் அவர் இந்திய இசை நுணுக்கங்களை யெல்லாம் பெருமளவுக்குக் கற்றுக் கொண்டு விட்டார். அதனால் இன்று ஏராள மாணவர்களுக்குக் கற்பிக்கும் நிலையில் இருக்கிறார். இந்திய இசை மேதைகள் பலரிடம் முறையாக ஸ்ரீமதி பாட்ரீசியா ரோலிக் சங்கீதம் கற்றுக் கொண்டவர். கர்நாடக இசையில் எப்படியோ அப்படியே வட இந்திய சாஸ்திரிய சங்கீதத்திலும் புலமை உண்டு.

இந்திய இசைக் கருவிகளும் அவரிடம் நிறைய இருக்கின்றன. சிட்னி பல்கலைக் கழகத்தில் வகுப்பு நடத்திய போது இந்திய இசைக் கருவிகளை மாணவர்களுக்குக் காட்டி விளக்கினார். விலைமதிப்புள்ள வாத்தியங்கள் அவரிடம் இருக்கின்றன. இந்தியாவிலிருந்து திரட்டி வந்தவை அவை.

(படத்தில் ஸ்ரீமதி பாட்ரீசியா ரோலிக் தம்பூராவுடன் காணப்படுகிறார்.)

-ஜே. எம். சாலி

இன்னும் அதிகமாகத் தெரியும். உன்னை விட்டு விட்டு நாங்கள் போக முடியாது. வந்து விடு !''

''உங்களுடன் நான் வரமறுத்தால்?''

''முடியாத காரியம். நீ பெரிய சூரன் என்பதை அறிவேன். ஆயினும் நாங்கள் இருபது பேர் இருக்கிறோம். எங்களிடமிருந்து தப்பி நீ போக முடியாது.''

''உயிரோடு தப்ப முடியாது என்று தானே சொல்கிறாய்?''

''நீ இளம் பிராயத்தவன். உலகத்தின் சுகங்கள் ஒன்றையும் அநுபவியாதவன். எதற்காக வீணுக்கு உயிரை விட வேண்டும் ?''

''வீணுக்கு யார்தான் உயிரை விடுவார்கள்? உங்களுடன் வரச் சொல்கிறாயே? எங்கே கூப்பிடுகிறாய்? நீங்கள் எங்கே போகிறீர்கள்?''

''அப்படிக் கேள், சொல்கிறேன். பழுவூர் இளையராணியிடந்தான் !''

'' ஓகோ ! அப்படித்தான் நினைத்தேன். இளையராணி இன்று எங்கே இருக்கிறாள் ?''

''இளையராணி இத்தனை நேரம் திருப்புறம்பயத்துக்கு வந்திருப்பாள். நீ வருவாயா, மாட்டாயா?''

''நானும் அந்தப் பக்கந்தான் போக வேண்டும். வழிகாட்ட யாரும் இல்லையே என்று பார்த்தேன். நல்ல வேளையாக நீ வந்து சேர்ந்தாய்! போகலாம், வா!'' என்றான் வந்தியத்தேவன்.

இதற்குள் சிறுவன் பல்லக்கில் ஏறிக் கொண்டான். பல்லக்கு நகர்ந்தது. அதைச் சுற்றிலும் தீப்பந்தங்களைப் பிடித்துக் கொண்டும் பலவித கோஷங்களை எழுப்பிக் கொண்டும் ரவிதாஸனுடைய கோஷ்டியார் சென்றார்கள்.

வந்தியத்தேவனும் அவர்களைத் தொடர்ந்து சென்றான். அவன் உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் அலைபாய்ந்தன. வானதியின் கதி என்ன? தெரியவில்லை. மதுராந்தகர் என்ன ஆனார் ? தெரியவில்லை. தன்னுடைய கதி இன்றிரவு என்ன ஆகப் போகிறது? அதுவும் தெரியவில்லை.

கடம்பூர் மாளிகையில் அன்று கண்டறிந்த சதிச் செயலைவிடப் பன்மடங்கு பயங்கரமான சதிச் செயலைப் பற்றி இன்று நேர்முகமாக அறிந்து கொள்ளப் போகிறோம் என்பதில் சந்தேகமில்லை. அந்தவரையில் பிரயோஜனகரமானதுதான். ஆனால் அதற்குப் பிறகு என்ன நடக்கும்? தன்னை உயிரோடு தப்பிச் செல்ல இவர்கள் விடுவார்களா? இவர்களோடு சேர்ந்து விடும்படி தன்னையும் கட்டாயப்படுத்துவார்கள். மாட்டேன் என்று சொன்னால், பலியிடத்தான் பார்ப்பார்கள். ஒரு வேளை மறுபடியும் நந்தினியின் நயவினால்....

பழுவூர் இளையராணியின் பெயரை ரவிதாஸன் கூறியதும் அவர்களுடன் போகத் தான் இணங்கி விட்டதை வந்தியத்தேவன் நினைத்துப் பார்த்தான். அது அவனுக்கே வியப்பை அளித்தது. 'மாயை' என்றும், 'மோகம்' என்றும் பெரியோர்கள் சொல்வது இதைத்தான் போலும். அவள் எவ்வளவு பயங்கரமான சதிச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரிந்துதானிருந்தது. ஆயினும் அவளைச் சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்றால், அதைப் பயன்படுத்திக் கொள்ள அவன் மனத்தில் ஓர் ஆர்வம் எழுந்தது. அடக்க முடியாமல் தன்னை மீறி எழுந்தது. யோசித்துப் பார்ப்பதற்கு முன்னால் அவன் வாய் 'வருகிறேன்' என்று பதில் சொல்லிவிட்டது. ஆனால் வேறு வழிதான் என்ன? ரவிதாஸன் கூறியது போல் இத்தனை பேருடன் தன்னந் தனியாகச் சண்டையிடுவது சாத்தியமில்லை. சிறிது அவகாசம் கிடைத்தால், தப்பிச் செல்வதற்கு ஏதேனும் ஓர் உபாயம் தென்பட்டாலும் தென்படலாம். அத்துடன், இந்தச் சதிகாரக் கூட்டத்தைப் பற்றியும் இவர்களுடைய நோக்கங்களைப் பற்றியும் இன்னும் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

''காஞ்சிக்கா போகிறாய் ? அங்கே தான் என்னுடைய முக்கிய சத்துரு இருக்கிறான்!'' என்று அந்தச் சின்னஞ் சிறு குழந்தை மழலைமொழியில் கூறியது அடிக்கடி வந்தியத் தேவனுக்கு நினைவு வந்து கொண்டிருந்தது. அந்தச் சிறுவன் யார்? அவனைச் 'சக்கரவர்த்தி' என்று இவர்கள் அழைப்பதேன் ? ''முக்கிய சத்துரு'' என்று அச்சிறுவன் யாரைக் குறிப்பிட்டான்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவனுடைய மனத்தில் பதில்களும் தோன்றிக்கொண்டிருந்தன. நினைக்க நினைக்க, பயங்கரம் அதிகமாகிக்கொண்டிருந்தது. கடவுளே! இவற்றுக்கெல்லாம் முடிவு எப்போது? ''வெகு சீக்கிரத்தில்'' என்று அவனுக்குள் ஒரு குரல் சொல்லியது.

அந்த அதிசய ஊர்வலம் போய்க் கொண்டேயிருந்தது. வயல்கள் வாய்க்கால்கள், வரப்புகள், காடு மேடுகளைத் தாண்டி ஒருகணமும் நிற்காமல் போய்க் கொண்டிருந்தது. கடைசியாக, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிய மண்ணி நதியையும் தாண்டி அப்பால் திருப்புறம்பயம் எல்லையை அடைந்தது. பள்ளிப் படையைச் சுற்றிலும் மண்டியிருந்த காட்டுக்குள்ளும் பிரவேசித்தது. **(தொடரும்)**

ராமாயணம்

ராஜாஜி

“மூடனே! செல்வச் செருக்கிலும் கிராமிய போகத்திலும் மூழ்கிப் போயிருக்கிறாய். வரப் போகும் கஷ்டத்தை முன்பே தெரிந்து கொள்ள வேண்டிய ஸ்தானத்திலிருந்து கொண்டு கெடுதி வந்த பிறகும் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறாய். அற்ப சுகங்களில் மனத்தைப் பறி கொடுத்த அரசனைக் குடிகள் மதிக்க மாட்டார்கள். மரண பயமில்லாமலிருந்தால் மட்டும் போதுமா? செய்ய வேண்டிய காரியங்களைக் காலத்தில் கவனிக்காத அரசனுடைய ராஜ்யம் பாழாகப் போகும். சாரர்களைச் சரியாக உபயோகித்து ராஜ்யத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளாத அரசன் அழிந்து போவான். உன்னுடைய ராஜ்யத்தில் என்ன நடந்தது? ஜன ஸ்தானத்தில் உன்னுடைய பந்துக்களுக்கு என்ன ஆயிற்று? உன்னுடைய சேனைக்கு என்ன நேரிட்டது என்பதை நீ அறியாமல் சிங்காசனத்தில் அழகாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய். உன்னுடைய பகைவர்கள் உன்னை அழிப்பதற்குச் சமயம் எப்போது வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உனக்குத் தெரியும். ஆன போதிலும் நீ உன் சாரர்களைக் கேட்டு என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளாமல் கிடக்கிறாய். உன் மந்திரிகள் அறிவற்ற பாமரர்களாக இருக்கிறார்கள். ஜன ஸ்தானத்தில் உன்னைச் சேர்ந்தவர்கள்—நம்முடைய எதிரிகள் நடுங்கும்படியாக உன் ஆக்ஞையின்படி இவ்வளவு காலம் அரசு புரிந்து வந்தவர்கள்—இப்போது மாண்டு கிடக்கிறார்கள். இதை உணர்ந்தாயா? ஜன ஸ்தானத்துச் சேனை நிர்மூலமாயிற்று; ராமன் என்ற ஒரு மனிதப் பூச்சி தரை மேல் நின்று தேரும் யானையுமில்லாமல் அவ்வளவு பேரையும் கொன்று விட்டான்.

“உனக்கு இது அவமானமாகப் படவில்லையே! உன் தங்கைக்கு என்ன ஆயிற்று என்று பார்த்தாயா? விசாரித்தாயா? இது வரையில் உனக்கும் உன் ஆட்களுக்கும் பயந்து நடுங்கி வாழ்ந்த ரிஷிகளுக்கு இந்த ராமன் அபயம் கொடுத்து விட்டான். உன்னுடைய ஜன ஸ்தானம் பாழாயிற்று. தண்டகாரண்யத்தில் உன்னைப் பற்றியிருந்த பயம் முற்றிலும் தீர்ந்து போயிற்று. தன்னைத் தானே பாராட்டிக் கொண்டிருப்பதோடு திருப்திப்பட்டுக் கிடக்கும் உனக்கு ஆபத்து நெருங்கி விட்டது. உன்னை உன் குடிமக்கள் இனி மதிக்க மாட்டார்கள். ராஜ்யத்திலிருந்து துரத்தப்படுவாய் என்பது நிச்சயம். கட்டிக் கிழிந்துபோன துணியைப் போலத்தான் இனி உன்னை மக்கள் மதிப்பார்கள்.

“சாரர்கள் வழியாக ராஜ்யத்தில் நடப்பதை அறிந்துகொண்டு வேண்டியதைச் செய்பவனே அரசன். உன் ராஜ்யத்தில் உன் ஜனங்களுக்கு உண்டான கஷ்டத்தையாவது அவமானத்தையாவது நீ அறியவில்லை. நீ எப்படி அரசனாக மதிக்கப்படுவாய்? உனக்குக் கோபமில்லை. கோபமில்லாத அரசன் என்னத்துக்கு உதவுவான்?

“கரனையும் திரிசிரனையும் தூஷணனையும் கரனுடைய முழு சேனாபலத்தையும் கொன்று நிர்மூலமாக்கிவிட்ட ராமனுக்குச் சீதை என்ற ஒரு மனைவி இருக்கிறாள். காட்டில் அவனோடு தனியாக இருக்கிறாள். அவள் அழகை என்னென்று சொல்லுவேன்! தேவ கந்தர்வ யக்ஷ கின்னர மனுஷ்ய ஜாதிகளில் இந்த அழகை இது வரையில் நான் கண்டதில்லை. உனக்கேற்ற பார்யை. அவளைக் கண்டதும் அவள் உன்னுடைய பொருள் என்று நான் நிச்சயித்தேன். ராக்ஷச குலத்தைச் சேர்ந்த நான் ஓர் எண்ணம் கொண்டதும் அதை உடனே நிறைவேற்றுவது தானே என் சுபாவம். உனக்காக நான் அவளைத் தூக்கி எடுத்து வர முயற்சி செய்தேன். பக்கத்திலிருந்த அந்த ராமனுடைய தம்பி லக்ஷ்மணன் தடுத்து என் மேல் பாய்ந்து இப்படி என் அங்கங்களை அறுத்து அவமானப் படுத்தி விட்டான். உனக்காக நான் இந்நிலைமையை அடைந்தேன். இப்பழியைத் தீர்த்து உன் குலத்தின் மானத்தைக் காப்பாற்ற உனக்கு ஆசையிருந்தால் உடனே புறப்படு.

“என் பழி எப்படியாயினும், உனக்குத் தகுந்த அழகியைச் சம்பாதித்துக் கொள். சீதையைப் போன்ற அழகியை நீயன்றி வேறொருவன் அனுபவிக்க



லாமா? அவளை நீ அடைந்து ராமனை அவமானப் படுத்தினாயானால், அநியாயமாய் மாண்ட உன் வீரர்கள் திருப்தி அடைவார்கள். அவர்கள் எனக்குச் செய்த அவமானத்துக்குப் பழி தீரும். உன் சக்தி உனக்குத் தெரியாமல் கிடக்கிறது. சீதையை எளிதில் அடைந்து அநுபவிப்பாய். உன் குலத்துக்கு ஏற்பட்ட அவமானத்தைக் கவனிக்காமல் நீ இருக்கலாமா? ராமனை எதிர்த்த கரனும் தூஷணனும் ஜன ஸ்தானத்தில் மடிந்தார்கள். அதையும் நினைவில்



வைத்து யோசித்துச் செய்ய வேண்டியதைச் செய். உன் சகோதரி அடைந்த அவமானம் உன்னுடைய அவமானமாகும். நம்முடைய குலத்தில் உனக்குள்ள கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்'' என்றாள் சூர்ப்பனகை.

உடன்பிறந்தவள் இவ்வாறு திடீர் என்று பிரவேசித்துத் தன் முன் நின்று இடித்துச் சொன்ன பேச்சுக்களையும் சீதையைப் பற்றி ஆசை பொங்கும் பேச்சையும் கேட்டு, மந்திரிகளிடம் சபை முடிந்தது என்று சொல்லிவிட்டு, தனியாக யோசிக்கப் போனான். மாரீசன் சொன்னது நினைவிலிருந்தபடியால் யோசிக்கலானான். நன்மை தீமைகளை நன்றாக மனத்தில் சோதித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டான். விமானசாலைக்குச் சென்று தேரோட்டிக்குச் சொன்னான்: ''உடனே ரதம் தயாராகலாம். யாருக்கும் தெரிய வேண்டியதில்லை'' என்றான்.

பிசாச முகங்கள் கொண்ட பருத்த கோவேறு கழுதைகள் பூட்டிய அவனுடைய சுவர்ண ரதம் தயாராக நின்றது. அதில் ஏறி ஆகாய மார்க்கமாகக் கடலும் நாடும் நகரங்களும் வனங்களும் எல்லாவற்றையும் வெகு வேகமாகத் தாண்டிச் சென்றான். இஷ்டப்பட்ட இடம் செல்லும் மாய ரதம்: போகும்போது கீழே அவன் பார்த்த வசந்த காலக் காட்சிகளெல்லாம் அவனுடைய காமத்தை அதிகரித்தன.

மாரீசனுடைய ஆசிரமத்தை அடைந்தான். ஜடையும் மரவுரியும் தரித்து ஆசார நியமத்துடன் விரத வாழ்க்கை நடத்தி வந்த மாரீசனைக் கண்டான்.


ராக்ஷசேந்திரனும் தனக்குப் பந்துவான ராவணனைக் கண்டதும் முறைப்படி உபசாரம் செய்துவிட்டு, ''மறுபடியும் சொல்லாமல் இவ்வளவு தூரம் வந்த விசேஷமென்ன?'' என்று கேட்டான்.


பேச்சில் வல்லமை பெற்ற ராவணன் சொல்ல ஆரம்பித்தான் :

''நான் பெருந் துன்பத்தில் சிக்கித் துயரப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என் துயரத்தை நீதான் நீக்க முடியும். உன்னைச் சரண் புகுந்தேன். என் ஆக்ஞையின்படி என் உடன்பிறந்தவர்கள் ஜன ஸ்தானத்திலிருந்து கொண்டு என் காரியத்தை நடத்தி வந்தது உனக்குத் தெரிந்த விஷயம். அவர்களும் அவர்களுக்குச் சகாயமாக இருந்த வீரர்களும் இவ்வளவு காலம் ஜெயப்பிரதமாக அங்கே அரசு புரிந்து வந்தார்கள். இப்போது ராமன் என்பவன் அத்தனை வீரர்களையும் முழுச் சேனையையும் அநாயாசமாகக் கொன்று தொலைத்து விட்டான். தேராவது வேறு வாகனமாவது இல்லாமல் தரைமேல் நின்று அந்த மனிதன் நம்மவர்கள் அனைவரையும் பாணங்களைச் செலுத்திக் கொன்று விட்டான். தண்டகாரண்யத்தில் இப்போது ராக்ஷசர்களைப் பற்றிய பயமே இல்லாமல் ரிஷிகளுடைய கொண்டாட்டமாகவே இருக்கிறது. இந்த ராமனானவன் தகப்பனால் காட்டுக்குத் துரத்தப்பட்ட வகையில்லாத நீசன். மனைவியையும் அழைத்துக்கொண்டு காட்டில் நாடோடி வாழ்க்கை நடத்துகிறான். இந்தத் துஷ்டன் தவ வேஷம் போட்டுக் கொண்டு இந்திரியானுபவத்தில் ஈடுபட்டிருப்பவன். தரும மார்க்கத்தை விட்டவன். அற்பன். கொடுஞ் சுபாவம் கொண்டவன். எந்தக் காரணமுமின்றி மிருக பலத்தின் அகங்காரத்தால் என் உடன் பிறந்தவளுடைய மூக்கையும் காதையும் அறுத்து நம் குலத்துக்குப் பெருத்த அவமானம் இழைத்திருக்கிறான். கோரமான முறையில் துன்பமும் அவமானமுமடைந்த என் உடன் பிறந்தவள் இதைப் பற்றி முறையிடுகிறாள். நான் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தேனானால் அரசன் ஆவேனா? இந்தப் பழியைத் தீர்க்க இந்த ராமனுடைய மனைவியைத் தண்டகாரண்யத்திலிருந்து தூக்கிப் போவதாக நிச்சயித்து விட்டேன். இந்த ராமனைத் தண்டித்து அவமானப்படுத்துவது என் குலக் கடமை. இதற்கு உன் சகாயம் வேண்டும். நீயும் என் சகோதரர்களும் இருக்க எனக்கு என்ன பயம்? உன் உதவியைக் கோருகிறேன். சௌர்யம், பலம், யுக்தி, மாயைகள் இவற்றில் உன்னைப் போல் உலகத்தில் வேறு யார்? உன்னிடம் நான் இதற்காகத்தான் வந்திருக்கிறேன். நீ மறுக்கக் கூடாது. நான் சொல்லுவதைக் கேள். நீ ஒரு பொன் மானாக வேண்டும். சுவர்ணமும் வெள்ளிப் புள்ளிகளும் கண்ணைக் கவரும் விசித்திர வடிவமும் பொருந்திய மானாக உருவம் கொண்டு, ராமனுடைய ஆசிரமத்தண்டை வனத்தில் சீதைக்கெதிரில் நீ சஞ்சாரம் செய்ய வேண்டும். ஸ்திரீ சுபாவத்தின்படி அவள் நிச்சயமாக ராமனையும் லக்ஷ்மணனையும் 'இந்த மானைப் பிடித்துத் தர வேண்டும்' என்று வற்புறுத்துவாள். அவளை விட்டு அவர்கள் விலகி அவள் தனியாக இருக்கும் சமயத்தில் நான் சுலபமாக அவளைப் பிடித்துத் தூக்கிப் போய் விடுவேன்.

''சீதை மகாசௌந்தரியம் கொண்ட அழகி. மனைவியை இழந்த ராமன் மனம் உடைந்து பலவீனமடைவான். அந்த நிலையில் அவனைத் தாக்கி, பழி வாங்கித் திருப்தி அடைவேன்.'' (தொடரும்)








காற்றும் கடல் அலையும் வர வர அதிகரித்துக் கொண்டிருந்தன.
நம் டார்ச் விளக்கின் ஒளி அறிவிப்பை அவர்கள் பார்க்காவிட்டால், இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தக் காற்றால் நாம் தீவிலிருந்து எறியப் படுவோம் அக்கா.
இரையைத் தேடி..
26
கதை: வாண்டுமாமா
சித்திரம் ரமணி..
விசைப் படகில்...
அப்பா, இந்த முகத்துக்குப் போய்விட முடியுமா? காற்று பலமாகிக் கொண்டிருக்கிறதே. அப்பா!.. அதோ அந்தக் குன்றின் மேலே பாருங்கள்.
ஆமாம்.. யாரோ உதவி வேண்டி 'சிக்னல்' தருகிறார்கள். நாம் அவர்களுக்கு உதவத்தான் வேண்டும். கோபால், உன் டார்ச் விளக்கை எடுத்து அவர்களுக்குப் பதில் 'சிக்னல்' கொடுத்துப் பார்க்கலாம்.
ஹரிகரன் வர்மா விசைப் படகைத் திருப்பி அந்தக் குன்றின் அருகே கொண்டு போனார்.
அப்பா, அவர்கள் இரண்டு பேர் என்று தெரிகிறது. இறங்கி வருகிறார்கள். அவர்கள் யார்? ஏன் அங்கே போனார்கள்?..
அவர்களால் எப்படி இந்தச் சீறும் புயல் காற்றில் நம் படகை அடைய முடியும்? இதற்குமேல் இந்தக் கொந்தளிக்கும் கடலில் அந்த இடத்தை நெருங்க முடியாது. நான் நங்கூரமிடுகிறேன்.....
பளிச்சென்று ஒரு மின்னல் கொடி அந்தப் பிராந்திய முழுவதையும் ஒளி வெள்ளத்தில் மூழ்கடித்து மறைகிறது.
அது... அப்பா அவர்கள்... அந்த அக்காவும் தம்பியும் தான். நம் படகை நோக்கி நீந்தி வருகிறார்கள்...
நீந்தியா? முடியக் கூடிய காரியமா? நம் சிறு படகை இறக்கி அதில் போய் அவர்களை நான் மீட்டு வருகிறேன். நீ இஞ்சினைக் கவனித்துக் கொள்.
நெடிதுயர்ந்து நின்ற பாறையின் மறு பக்கத்தில் ஒரு விசைப் படகு கடல் நீரையும் புயல் காற்றையும் கிழித்துக் கொண்டு புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்த பாறையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அதில் நீதாவும் ஒரு சீனக் கம்யூனிஸ்டும் இருந்தனர்...
படாத பாடுபட்டுச் சிலையைக் கைப்பற்றி விட்டேன். அதோ நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.. இந்தப் புயல் என்ன செய்யும்?
அந்தத் தங்கச் சிலையை என் கண்ணால் காண வேண்டும்.







புனிதக் கல்வி; பூங்காக் கல்லூரி!



நூற்று இருபத்து ஐந்து வயதை அடைந்த நபரை நாம் சந்திக்க நேர்ந்தால், நமக்கு அதிசய உணர்ச்சி ஏற்படலாம். ஆனால் அதை அமுக்கி விட்டு அனுதாப உணர்ச்சி தான் மேலோங்கி நிற்கும். ''ஐயோ, பாவம்! முதுமை இன்னும் எவ்வளவு தூரம் வாட்டி எடுக்கப் போகிறதோ!'' என்று பெருமூச்சுக் கூட விடுவோம்.

ஆனால் அதே நூற்றி இருபத்தி ஐந்து வயதை அடைந்த ஒரு ஸ்தாபனத்தைப் பார்க்கும் போது, நாம் ஆச்சரியப்படுகிறோம். ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாக நம் நாட்டின் சரித்திரத்துடன் இணைந்து வளர்ந்து வந்திருக்கிறது என்று நினைத்துப் பார்த்துப் பெருமிதமடைகிறோம்! இன்னும் எவ்வளவோ ஆண்டுகள் இந்த இணைந்து வளரும் பணி நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

திருச்சிராப்பள்ளியில் உள்ள செயின்ட் ஜோசப் கல்லூரி இந்த ரகத்தைச் சேர்ந்த ஒரு ஸ்தாபனம். அதன் நூற்றி இருபத்தி ஐந்தாவது ஆண்டு விழா சமீபத்தில் சிறப்பாக நடந்தேறியது. அந்தக் கல்லூரியில் சேர்ந்து தங்கள் அறிவையும் பண்பையும் பெருக்கிக் கொண்ட எத்தனையோ ஆயிரக்கணக்கான நபர்கள், பாரதத்தின் பல்வேறு பாகங்களி லும் வசித்தாலும் தங்களுடைய அந்த நாளையக் கல்லூரி வாழ்க்கை நினைவுகளில் திளைக்க வைக்க இந்த விழாச் செய்தி நிச்சயம் உதவி யிருக்கும்.


சென்னை சர்வகலாசாலை தோன்றுவதற்கு முன்பேயே தோன்றிய கல்விக்கூடம் என்ற பெருமை இந்த செயின்ட் ஜோசப் கல் லூரிக்கு உண்டு. சென்னை சர்வகலாசாலையை விடப் பதினைந்து ஆண்டுகள் இந்தக் கல்லூரி 'ஸீனியர்'.

பாண்டிச்சேரி காரைக்கால் பிரதேசங் களில் வாழ்ந்த ஆங்கில, பிரஞ்சுக் குடும்பங் களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு பிரஞ்சு, ஜெர் மன், ஆங்கில மொழிகளில் பயிற்சியளிக்க, ஓலைக் கூரைக் கட்டடத்தில் 1844ம் ஆண்டில் நாகப்பட்டினத்தில் தொடங்கியது இந்தக் கல்லூரி. 1858ஆம் ஆண்டில் சென்னை சர்வ கலாசாலை தோன்றிய போது, இந்தக் கல்லூரியை அத்துடன் இணைக்கத் தயாரான கல்லூரியின் சந்நியாசிக நிர்வாகம், பாட போதனை முறைகளையும், இந்திய மாணவர் களுக்கும் ஏற்ற முறையில் மாற்றி அமைத் தது. 1883ம் ஆண்டு, நாகப்பட்டினத்தை விடத் தமிழகத்தின் நடுப் பகுதியில் இருக்கும் திருச்சிராப்பள்ளியே கல்விப் பணிக்கு ஏற்ற இடம் என்று தீர்மானித்துக் கல்லூரியைத் திருச்சிக்கு மாற்றினார்கள்.


கல்லூரிப் படிப்புக்கு ஹாஸ்டல் வாழ்க்கை அவசியமானது என்று உணர்ந்து முதன் முதலில் மாணவர் விடுதியைத் தோற்று வித்த பெருமை இந்தக் கல்லூரிக்குத்தான் உண்டு.

கல்லூரிக் காம்பௌண்டுக்குள் நுழையும் போதே நமக்குப் பிரமிப்பு ஏற்படுகிறது.

- ☐ பார்த்தாலே தெரிய வில்லையோ செயின்ட் ஜோசப் கல்லூரியின் மாதாகோயில் என்று!
- ☐ புதிய அரங்கைத் திறந்து வைக்க வந்த முதல்வருக்கு வரவேற்பு.
- ☐ நாகப்பட்டினத்தில் அந்நாளையக் கல்லூரிக் கட்டடம்.







- பிரசித்தி பெற்ற லாலிஹால்.
- முதல்வர் பூஜ்யர் சுவாமி.
- ஹாஸ்டல் கட்டடங்கள்.

கல்லூரிக்குள் தான் வந்திருக்கிறோமா அல்லது ஏதேனும் பூங்காவனத்துக்குள் புகுந்து விட்டோமா? அடடா, என்ன அழகான சூழ்நிலை! அடேயப்பா, எத்தனை கட்டடங்கள்!

சாரி சாரியாகச் சிறுவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். 'என்ன விசேஷம்?' என்ற கேள்விக்குக் காத்திருக்கும் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் பானுமூர்த்தி "கல்லூரியைச் சேர்ந்த கண்காட்சி சாலைக்கு இந்த வட்டாரத்துப் பள்ளிக்கூட மாணவ மாணவியர், வெளியூர் மாணவர்கள் எல்லோருமே வருவார்கள். நாமும் பிறகு பார்க்கலாம்" என்கிறார். மேலே நடந்து ஓர் அறைக்குள் சென்று அமர்கிறோம். அறை வாசலில் ஒரு நபர் வந்து நின்று வணக்கம் தெரிவிக்கிறார். எளிய உருவம். சன்னமான குரல். வெள்ளை அங்கி. சிவப்புப் பட்டை. "இவர்தான் கல்லூரி முதல்வர் ரெவரண்ட் ஃபாதர் வி. கே. ஸ்வாமி" என்று பானுமூர்த்தி அறிமுகப்படுத்தி வைக்கிறார்.

அடக்கமாகவும், எளிமையாகவும் கனிவுடனும் பழகும் பூஜ்யர் வி. கே. ஸ்வாமி இளைஞர் தான். செயின்ட் ஜோசப் கல்லூரியில் இண்டர்மீடியட்டை முடித்து விட்டு, சென்னை பச்சையப்பன் கல்லூரிக்குத் தமிழ் படிக்க வந்தார். பட்டம் பெற்றதோடு, நல்நடத்தை மாணவர் என்பதற்கான பரிசையும் பெற்றார். பிறகு லயோலா கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். திடீரென்று அவரைத் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிக்கு உதவி முதல்வராக அனுப்பி வைத்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்குமுன் முதல்வராக உயர்த்தப்பட்டார். ஒரு தமிழாசிரியர் இந்தக் கல்லூரிக்கு முதல்வராக வந்திருப்பது இதுதான் முதல் தடவை. அவர் கத்தோலிக்க மடத்தில் கர்த்தரின் சேவைக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு விட்டதற்காக அவர் தந்தை அவருடன் ஆறு ஆண்டுகள் பேசாமல் இருந்தாராம். குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய மூத்த மகனல்லவா? அதனாலென்ன? பூஜ்யர் சுவாமி இப்போது தம் பார்வையின் கீழ் கல்வி பெறும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பிள்ளைகளுடன் அன்புடன் அளவளாவும் பெரும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறாரே!

கல்லூரியைச் சுற்றிப் பார்க்கப் புறப்படுகிறோம். ஒவ்வொரு கட்டடமாகக் காட்டுகிறார் முதல்வர். இந்தக் கல்லூரியில் தொடர்ந்து இருபது வருடங்களாக முதல்வராகப் பணியாற்றிய பூஜ்யர் எர்ஹார்ட் ஓய்வு பெற்ற போது திருச்சிவாழ் பொது மக்கள், அவர் பெயரில் ஒரு கட்டடம் எழுப்பக் காணிக்கை சேர்த்து வழங்கியிருக்கிறார்கள். எர்ஹார்ட் மண்டபம் கம்பீரமாக விளங்குகிறது.

விளையாட்டு மைதானங்களைக் கடந்து மாணவர்களின் விடுதிப் பக்கம் வருகிறோம். சமீபத்திய சினிமா சங்கீதம் உயர்ந்த ஸ்தாயி

யில் ஒலிபரப்பிகள் மூலம் காற்றிலே மிதந்துவருகிறது. மாணவர் விடுதியில் அன்று ஏதும் விசேடமோ என்ற எண்ணம் எழுந்தபோது அதைப் புரிந்து கொண்டவர்போல முதல்வர், ''தினசரி மாலை வேளைகளில் ஒருமணி நேரம் அவர்கள் விருப்பம் போல் இந்த இசையை ரசிக்கலாம். ஆனால் இதே இடத்துக்கு இரவு எட்டு மணிக்கு வந்தீர்களானால் இந்த இடத்தில்தான் மாணவர் விடுதி இருக்கிறதா என்ற ஐயப்பாடு உங்களுக்கு எழும். அத்தனை நிசப்தம் நிலவும். படிப்பில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கிவிடுவார்கள்'' என்று விளக்குகிறார்.

எங்களைத் தாண்டி நடக்கும் மாணவர்கள் பலருடன் புன்முறுவலுடன் அவர்களில் ஒருவராகப் பேசுகிறார். இரண்டு மாணவர்கள் வற்புறுத்திக் கான்மனுக்கு அழைத்து அவர்கள் ருசிக்கும் காப்பியை எங்களையும் ருசி பார்க்கக் கோருகிறார்கள். முதல்வர் ஒப்புக்கொள்கிறார்.

கான்மன் வாயிலில் ஒரு மாணவர் மகிழ்ச்சி ததும்ப முன்னால் வந்து முதல்வர் பக்கத்தில் நிற்கிறார். ''எங்கள் கல்லூரியிலேயே பெரிய மனிதன்'' என்று அறிமுகப்படுத்தி வைக்கிறார். புகுமுக வகுப்பில் படிக்கும் புகழேந்தி என்ற அந்த மாணவர் பன்னிரண்டு வயதுப் பள்ளிச் சிறுவன்போல அரை நிஜாருடன் புன்முறுவல் பூக்கிறார்.

நூற்றி இருபத்து ஐந்தாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டுப் பொதுமக்கள், பழைய-புதிய மாணவர்கள், ஆசிரியர்கள் நன்கொடையின் மூலம் உருவாகியிருக்கும் ஓர் அரங்கத்தை முதல்வர் காட்டுகிறார். தமிழக முதல்வர் கருணாநிதிதான் இதைத் திறந்து வைத்திருக்கிறார். திருச்சிவாழ் பொதுமக்களுக்கும் பயன்பட வேண்டும் இந்த அரங்கம் என்ற நோக்கத்துடன் உருவாகியிருக்கிறது.

கண்காட்சி சாலைக்குள் நுழைகிறோம். எழுபது வயதை எட்டிக்கொண்டிருக்கும் பூஜ்யர் காயில் ஓர் இளைஞனின் உற்சாகத்துடன் எங்களை வரவேற்கிறார். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். 1924ம் ஆண்டில் பாரதத்துக்கு வந்தார். இரண்டாவது உலக யுத்தத்தின்போது வெளிநாடுகளில் யுத்த சேவை செய்து விட்டு மீண்டும் திரும்பியிருக்கிறார். உற்சாகமான மனிதர்!

அடேயப்பா! அந்தக் கண்காட்சி சாலையில்தான் எத்தனை அபூர்வப் பொருள்கள் இருக்கின்றன. கத்தோலிக்க மடத்தைச் சேர்ந்த பூஜ்யர்கள், உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் காட்சிப் பொருள்களைத் திரட்டி வந்து இங்கே வைத்திருக்கிறார்கள். எண்ணூற்றி அறுபத்தி ஒரு விதமான உலோகங்களின் தொகுப்பு இருக்கிறது. ஜெர்மானிய ஐந்து கோடி மார்க் கரன்சி நோட்டு இருக்கிறது. பாபிலோனிய நாட்டிலிருந்த செங்கல் இருக்கிறது. நூற்றுக் கணக்கான வண்ணத்திப் பூச்சிகள், வெட்டுக் கிளிகள்! 1880-ம் ஆண்டு கத்தோலிக்கக் குருமார்கள் பொழுது போக்காகச் சேர்க்க ஆரம்பித்தவை இவை. இன்றைக்கும் புதிது புதிதாகப் பழங்காலத்திய அபூர்வப் பொருள்கள் வந்து சேர்ந்த வண்ணம் இருக்கின்றன. எல்லாவற்றையும் வைக்க இடம் போதவில்லை.

இங்கே இல்லாத
சிக்கனம்
அங்கே உண்டு!



கலிபோர்னியா கவர்னராக இருக்கும் மாஜி ஹாலிவுட் நடிகர் ரொனல்ட் ரீகன் சிக்கனத்துக்காகத் தமக்கு முன்னால் கவர்னராக இருந்த பிரவுன் என்பவர் விட்டுச் சென்ற 'லெட்டர் ஹெட்' காகிதங்களையே பயன்படுத்தினார். அந்தப் பெயரை அடித்து விட்டுத் தம் பெயரை மேலே டைப் செய்து உபயோகித்து வந்தார். பழைய காகிதங்கள் தீர்ந்த பிறகுதான் அவர் பெயர் போட்டுப் புதிய 'லெட்டர் ஹெட்' அச்சடிக்கப்பட்டது.

— ஜாக் - 'பாபு'

பூஜ்யர் காயில் இரண்டு முரட்டுப் பாம்புகளை வளர்க்கிறார். தேர் வடம்போல் பதினைந்தடிக்குமேல் நீளமாக இருப்பவை. அவற்றுடன் பூஜ்யர் காயில், குழந்தைகளுடன் பேசுவது போலப் பேசுகிறார். தமிழில்தான் பேசுகிறார்: ''என்னடா!...உனக்குக் கோபமா? இப்படிப் பாருடா!'' என்கிறார் வலைகளின் இடுக்கு வழியாக.

இந்தக் கல்லூரியில் மாணவர்கள் கல்வியை மாத்திரம் பெறவில்லை. கட்டுப்பாடான வாழ்க்கையையும் தெரிந்து கொள்கிறார்கள். உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலுமாகச் சேர்ந்து ஏறத்தாழ ஐயாயிரம் மாணவர்கள் இங்கே தங்களை வருங்காலத்துக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கல்லூரியுடன் சம்பந்தப்பட்ட பூஜ்யர்கள் பார்பியர், பெஸ்னி ஸீவல், பெர்ட்ரம், வீ, கார்ட்டி, ஜெரோம்-டி-ஸௌஸா, ஹோனோர், எர்ஹார்ட் முதலிய மேதைகள் எப்படித் தங்களைக் கர்த்தரின் சேவைக்கு அர்ப்பணித்துக் கொண்டார்களோ, அப்படியே தங்களைப் புனிதமான கல்விப் பணிக்கும் அர்ப்பணித்துக் கொண்டவர்கள். கல்வி போதனையையே புனிதத் தொண்டாகக் கருதி வந்தவர்கள். ஆகவே, செயின்ட் ஜோசப் கல்லூரி ஒரு தனித்தன்மை பெற்று விளங்குவதிலும் அதன் மாணவர்கள் படுசூரர்களாக விளங்குவதிலும் வியப்பு ஒன்றும் இல்லை. எத்தனை முதல் வகுப்புகள்! எத்தனை முதல் ராங்குகள்! எந்தப் பாடம்தான் அங்கு போதிக்கப்படவில்லை?

செயின்ட் ஜோசப் கல்லூரி தேவாலயத்தின் ஸ்தூபி உயர்ந்து வானைத் தொடுவது போல நிற்கிறது. அதைப் போலவே இக்கல்லூரியும் வருங்கால மாணவ மணிகளின் உள்ளங்களையும், சிந்தனைகளையும், செயல்களையும் உயர வைக்கும் பணியைச் செய்து கொண்டுதான் இருக்கும்!

– கோமதி ஸ்வாமிநாதன்

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி



தமிழாக்கம்: ராஜாஜி

22

மனிதனுக்கு உள்ள ஆயுதங்களுக்குள் மகத்தான ஆயுதம் அஹிம்ஸை. படை வீரர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் அனைத்தையும் விடப் பலம் கொண்ட ஆயுதம்.

மானுட தர்மத்துக்குக் கொலை என்பது முற்றிலும் மாறுபட்டது. மனிதன் முன்னேற வேண்டுமானால் கொல்லுவதல்ல வழி. தன் உயிரை நீப்பதற்கு ஆயத்தமாக இருப்பதே வழி. ஒவ்வொரு கொலையும், வதையும் எந்தத் தனிக் காரணம் எந்த தனிச் சந்தர்ப்பத்தில் நடந்ததாயினும் அது உலகத்துக்கே செய்த ஒரு துன்பமாகும்.

(ஹரிஜன் 20-7-35)

சிலருக்கு ஒரு சந்தேகம், ஹிம்ஸையைக் கையாளும் எதிரிகளின் மேல் அஹிம்ஸை என்ன பயன்படும் என்று. அசத்தியம், ஹிம்ஸை, துவேஷம், கொடுமை இவற்றுக்கு எதிராக நின்று சோதனையில் வெற்றி பெற்றால் அல்லவோ, சத்தியம், அன்பு, அஹிம்ஸை, கருணை இவை வெற்றி பெற்றதாகும். ஒரு கொலையாளிக்கு முன் அஹிம்ஸையைக் கடைப்பிடித்த ஒருவன் நின்றால் சாவது நிச்சயம்தான். ஆனால் அதற்குத்தான் அஹிம்ஸை என்று பெயர். அந்தச் சோதனையிலும் பின்வாங்காமல் இருந்தாலேதான் அஹிம்ஸையாகும். ஆனால் என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்று பலவீனத்தினால் இறந்தவன் சோதனையில் வெற்றி பெற்றவன் என்று கருதப்பட மாட்டான். இறக்கும் போதும் தன்னைக் கொன்றவன் பேரில் கோபம் இல்லாமல் உயிர் துறக்க வேண்டும். ஏன்? ஆண்டவன் அவனை மன்னிப்பானாக என்று பிரார்த்தனையும் செய்ய வேண்டும். அதுதான் உண்மையான அஹிம்ஸை. இப்படியே செய்தான் என்று ஏகநாதனைப் பற்றிச் சரித்திரத்தில் சொல்லப்படுகிறது அல்லவா?


''எந்தையே! இவர்களை மன்னித்தருள். அறியாமையினால் செய்கிறார்கள்!'' என்று சொல்லி உயிர் நீத்ததாக எழுதப்பட்டிருக்கிறது அல்லவா? மற்ற மார்க்கங்களிலும் இதைப் போன்ற சம்பவங்கள் பல உண்டு. ஆனால் ஏகநாதரின் சரித்திரம் உலகப் பிரசித்தம். அதற்காகத்தான் அதை எடுத்துச் சொன்னேன்.

நம்முடைய அஹிம்ஸை உச்ச நிலை அடையவில்லை என்பதை ஒப்புக்கொள்ளலாம். அது நம்முடைய குற்றம் அல்லது அனுபவக் குறைவு. அதற்காக நாம் அஹிம்ஸா தத்துவத்தின் கொடியைத் தாழ்த்தவேண்டியதில்லை. தத்துவத்தின் பூரண அளவை அறிந்தால் தான் அந்த மார்க்கத்தில் நாம் எந்த முயற்சியையும் சரிவரச் செய்ய முடியும். அஹிம்ஸையின் பூரண சக்தியை ஆராய்ந்து உணரவேண்டியது அவசியம்.

(ஹரிஜன் 28-4-46)



பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான் !



நவ-தால்

நம்பிக்கையானது. அதனால் தான் பாங்குகளும் தொழிற் சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோ கிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப் பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற் கேற்ற முறையில் செய்யப் பட்டது நவ-தால். பித்தளை, எஃகினாலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்கு கிறது. தயாரிப்பவர்கள் : கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்ப தில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடைய வர்கள்.

4 சைஸ்கள் :
40 mm (5 லீவர்கள்)
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ் — எப்போதும் நம்பகரமான பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்



குடை ராட்டினம்

எஸ். ரங்கநாயகி

அத்தியாயம் 11

ரூபகுமார் ஸ்தம்பித்து நின்று விட்டான். வாசுவுக்கு ஆபத்தா? அப்படியானால் வாசுவுக்கு ஏதேனும் நேர்ந்து மீண்டும் ரமா அவனுக்குக் கிடைப்பாளோ? சீ! என்ன நைப்பாசை!

"என்னடா, சொல்லேன்!"

"இன்னைக்கு வாசு ஸார் ஆபீசுக்கு லீவு போட்டுட்டுக் காஞ்சிபுரம் கல்யாணம் ஒன்றுக்குப் போய்க்கிட்டிருந்தாங்களாம். நடுவழியிலே ஸ்கூட்டர் சக்கரம் கயண்டு ஆக்ஸிடெண்டாம். அந்த அம்மா வீட்டிலே போன் எடுக்க ஒருத்தரும் இல்லையாம். அதனாலே இங்கே போன் செய்து வாசு வீட்டிலே சொல்லச் சொல்லியிருக்காங்க...ஸார், வாசு ஸார் வீட்டுக்குப் போய் நீங்களே சொல்லிடறீங்களா? நான் சைக்கிள்ளே போறதுன்னு நேரமாயிடும். நீங்க காரிலே ஜல்தி போகலாமே..." ஒரு டைரக்டரை ஏவுகிறோம் என்ற நினைவு கூட இல்லாமல் அவன் கூறி விட்டான்.

"போடா, பைத்தியமே, இப்ப அவங்க வீட்டுக்குப் போய் நான் என்னடா செய்ய முடியும்? நீயே போய்ச் சொல்லிக்கோ!"

அருணாசலம் மனத்தோடு உறுமினான். 'டைரக்டர் பதவியில் இருக்கும் பணக்காரராகவே இருக்கட்டும், இப்படி இதயமற்றவராகவா இருக்கவேண்டும்?' அவன் சைக்கிளை எடுத்துக்கொண்டான்.

விருட்டெனக் காரில் அமர்ந்த ரூபகுமார் ஸ்விச்சைப் போட்டு விட்டு, அருணாசலத்தை நோக்கி, "இதோ பார், அருணாசலம்! இப்ப நேரே நான் விபத்து நடந்த இடத்துக்கே போகிறேன். அங்கே வாசுவுக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்யறதுதானே முக்கியம்? அவர்கள் வீட்டுக்குப் போய்ச் சமாசாரம் சொல்ற நேரத்திலே நான் பாதி வழியிலே இருப்பேன்" என்றான்.

அடுத்த கணம் அவன் கார் ஆபீஸ் வாசலைத் தாண்டிவிட்டது.

'இம்புட்டு நல்லவரைப் போய் நாம் எப்படித் தப்பாக நினைச்சுட்டோம்!' — அருணாசலத்தின் சிந்தனை புரண்டது.

விபத்து ஸ்தலத்தை ரூபகுமார் அடைந்தபோது வாசுவை அருகில் இருந்த ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டிருந்தார்கள். ரூபகுமார் ஆஸ்பத்திரியை அடைந்தான்.

அங்கு முன் வராந்தாவிலேயே ரமா நின்றிருந்தாள். ரூபகுமாரைக் கண்டதும் அவள் திடுக்கிட்டாள். அப்பொழுது அவள் அங்கே ரூபகுமாரை எதிர்பார்க்கவில்லை. ஆயினும் அந்த நேரத்தில், நிலைகுலைந்து தவித்து நின்ற நேரத்தில், தனக்குத் தெரிந்தவன் ஒருவன் அருகில் இருக்கிறான் என்ற தைரியம் ஓரளவு பிறந்தது.

"என்ன ரமா இதெல்லாம்? யதேச்சையாக வாசுவின் ஆபீஸ் பக்கம் போனேன். அங்கு இந்தச் செய்தி காதில் விழுந்தது. உடனே ஓடி வந்து விட்டேன். எப்படி நேர்ந்தது இதெல்லாம்? உனக்கு ஒன்றும் காயமில்லையே?" அவளைத் தலையிலிருந்து கால்வரை நோக்கிவிட்டு ரூபகுமார் கேட்டான்.

"தெய்வாதீனமாக எனக்குக் காயமில்லை. ஸ்கூட்டரின் சக்கரம் கழன்று விட்டதால் ஸ்கூட்டர் மரத்தில் மோதி வாசு அதிலிருந்து தூக்கி எறியப்பட்டார். அருகிலிருந்த பெரிய கல்லில் அவர் தலை மோதிவிடவே மண்டையில் நல்ல காயம். தம் நினைவில்லாமல் கிடக்கிறார். வீட்டுக்குப் போன் செய்ய முடியவில்லை. அப்பா ஊரில் இல்லை. காந்தியும்..."

"என்னது? மாமா ஊரில் இல்லையா?"

"ஆமாம். கல்கத்தாவுக்குப் போயிருக்கிறார்! இங்கு வாசுவோ பேச்சு மூச்சில்

லாமல் கிடக்கிறார். இவருக்கு உடனே இரத்தம் ஏற்ற வேண்டுமாம். இந்தச் சின்ன ஆஸ்பத்திரியில் இரத்தம் இல்லை'' என்றாள் ரமா.

''அப்படியா? நான்கூடப் பலமுறை ரத்த தானம் செய்திருக்கிறேன், ரமா!'' என்ற ரூபகுமார் தன் இரத்தம் வாசு வின் இரத்தத்துடன் சேருமா என்று உடனே பரிசோதிக்கச் சொன்னான். சரி யாகச் சேரும் என்பது தெரிந்ததும் மீண்டும் ரமாவிடம் வந்தான்.

''கருணை காட்டுங்கள், ரூபகுமார். ஓர் உயிர் தவித்துக் கொண்டிருக்கிறது. வாசுவைக் காப்பாற்றும் புண்ணியம் உங்களைச் சேரட்டும்...'' என்றாள் ரமா.

''ரமா! புண்ணியமும் பாவமும் இங்கு யாருக்கு வேண்டும்? ஓரே வார்த் தையில் சொல்லி விடுகிறேன். நீ என்னை மணப்பதாக வாக்களித்தால் நான் வாசுவுக்கு ரத்தம் தருகிறேன்!''

''ரூபகுமார்!... வேண்டாம் இந்தக் கொடுமை! என்மீது உண்மையான அன்பு உங்களுக்கு இருந்தால் ஒரு நிபந்தனையுமின்றி வாசுவைக் காப் பாற்றுங்கள்!''

''ரமா, நீ என்னை அரக்கனாக நினைத் தாலும் சரி. எனக்குக் கவலை இல்லை. என் நிபந்தனைக்கு நீ பணிந்தால்தான் வாசுவின் உடலில் இரத்தம் ஏறும்!''



சுவு இரக்கத்தை நன்றாகத் துடைத் தெறிந்து விட்டுக் கூறினான் ரூப குமார்.

''ஐயோ!'' தலையில் கை வைத்துப் பெரிதாக விம்மினாள் ரமா. 'என்ன இக்கட்டான நிலை! ...கடவுளே! இப் படியும் ஒரு சோதனையா?'

விம்மலுக்கும் கண்ணீருக்குமிடையே அவள் தலையைத் தூக்கியபோது ரூப குமார் தன் காரில் இருந்தான்.

ரமா அவன் அருகில் ஓடினாள். ''ரூபகுமார்! போய்விடாதீர்கள். வாசு வின் உயிரைக் காப்பாற்றுங்கள். உங்கள் அரக்க நிபந்தனையை ஒப்புக்...கொள்... கிறேன்'' என்றாள்.

ரூபகுமார் காரிலிருந்து வெளியே வந்தான். ''இது சத்தியம்தானே? உன் தந்தையைப் போல் நீ வாக்கை மீறினால் நான் சும்மா இருக்க மாட்டேன். இதுவரை நான் ரத்த வெறியில் இறங் கினவன் இல்லை. நீ வாக்கை மீறினால் என் ரத்தத்திலேயே பிழைக்கும் வாசுவை என் ரத்த வெறிக்கு ஆளாக்குவேன். அவன் உயிரைப் பலி வாங்கிவிட்டுப் போலீஸில் சரணடைவேன். மரண தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்பேன். ஆனால் உங்கள் இருவரையும் வாழ விடமாட்டேன். இது நிச்சயம்!'' என்று கூறிய ரூபகுமார் ரத்தம் கொடுக்க உட் புறம் சென்றான்.

''ஐயோ!'' அலறியபடி மூர்ச்சித்து விட்டாள் ரமா.

வெகு நேரம் கழித்து ரமாவுக்கு நினைவு திரும்பியது. அவள் கண் விழித்தபோது ஆனந்த் அருகில் நின்று கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் ரூபகுமார் இருந்தான்.

''ஆனந்த்!''

''எனக்குச் செய்தி தாமதமாக, ஆனால் யதேச்சையாகத் தெரிந்தது. பியூன் நேராக வாசுவின் வீட்டுக்குப் போயிருக்கிறான். ஆனால் தேவகி எங்கள் வீட்டில் இருந்தது அவனுக்குத் தெரி யாது. அவன் குழம்பியபடி ஆபீசுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். எதிர் பாராமல் என்னை வழியில் சந்தித்து விஷ யத்தைச் சொன்னான். தேவகிக்கோ, காந்திக்கோ, என் தந்தைக்கோ இன்னும் செய்தி தெரியாது. எனக்கு விமான நிலையத்துக்கு நேர மாகிவிட்டது ... வாசுவுக்கு ரத்தம் ஏற்றி விட்டார்கள். இனி உயிருக்கு ஆபத் தில்லை. கவலைப்படாதே. நாளைதான் கண் விழிப்பா னாம். நீயும் இப்போது நகரக் கூடாதாம். நாளை

வாசுவைச் சென்னை ஆஸ்பத்திரிக்கு மாற்றி விடுவார்கள். வாசு மகிழ்ச்சியோடு விடை கொடுத்து அனுப்ப நான் மேனாட்டுக்குப் புறப்பட முடியவில்லையே என்று எனக்கு வருத்தம்தான். இருந்தாலும் என்ன செய்வது? ஆண்டவன் எண்ணம் அதுவானால்...? மறக்காமல் எனக்குத் திருமணப் படம் ஒன்று அனுப்பி வையுங்கள்!'' என்று கூறி அவசரம் அவசரமாக விடைபெற்றான் ஆனந்த். திருமணம் என்னும் சொல் சம்மட்டியென மண்டையைத் தாக்கியது போன்ற உணர்ச்சியில் ரமா துடிதுடித்துப் போனாள்.

* * *

''ரமா! உனக்கு என்மேல் கோபமாக இருக்கும். அதற்கு நான் என்ன செய்யட்டும்?''

ரூபகுமார் காரை ஓட்டியபடியே கேட்டான்.

''நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். பேசாமல் மௌனமாக வந்தால் அதுவே போதும்!'' என்று சீறினாள் ரமா.

அவனுக்கு அப்போது தன் மீதே கோபம்.

'ஆஸ்பத்திரியில் ஏற்பட்ட இக்கட்டான நிலையில் வாசுவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அப்படி





ஒரு வாக்குக் கொடுத்து விட்டோமே! இந்த நிலையிலிருந்து நாம் தப்ப முடியுமா? ரூபகுமார் தான் தப்பவிடுவானா? வாசுவை மறந்துவிட்டு ரூபகுமாரின் மனைவியாக ஆவதா? ஐயோ!'

தலையில் கை வைத்து விசிக்கலானாள் ரமா.

ஆஸ்பத்திரியிலிருந்து ஆம்புலன்ஸில் வாசுவைச் சென்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று விடுவார்களாதலால், ரூபகுமார் காத்திருந்து ரமாவைத் தன் காரில் சென்னைக்கு அழைத்து வந்து கொண்டிருந்தான். அவன் புறப்பட்டபோதுதான் வாசுவுக்கு மெள்ள மெள்ள நினைவு திரும்பிக் கொண்டிருந்தது. அவனை அந்த நேரத்தில் பார்க்க டாக்டர் ஒருவரையும் அனுமதிக்கவில்லை.

''ரமா! ஆனந்த் உன்னிடம் எல்லாம் கூறியிருப்பான் என்று நினைக்கிறேன். நீ....''

''போதும்! நீங்கள் ரத்த தானம் செய்த நிகழ்ச்சியை வர்ணிக்க வேண்டாம். உங்கள் ரத்தம் வாசுவின் உடலில் ஏறி விட்டதே என்று தான் நான் வருந்துகிறேன்.'' இயலாமையின் கவட்டில் ஆத்திரமும் கோபமும் பிறந்தன.

ரூபகுமார் சடக்கென்று வண்டியை நிறுத்தி விட்டு, அவளைத் திரும்பிப் பார்த்து, ''ஏ, ரமா! என்ன சொன்னாய் நீ?'' என்று ஆங்காரத்துடன் கேட்டான்.

''உங்கள் ரத்த தானத்தின் பின்னே அடங்கியுள்ள கொடூரமான வாக்குறுதியை ஆனந்த் அறிந்திருந்தால் உங்களைச் சும்மா விட்டிருப்பாரா? ஐயோ! என் தலைவிதியை என்னவென்று சொல்வது? முதலில் ஆனந்த் வராமல் போனாரே, அவர் வந்திருந்தால் என்னை நீங்கள் இந்த வாக்குக் கொடுமைக்கு ஆளாக்கியிருக்க முடியுமா? ஆனந்தின் ரத்தம் வாசுவுக்குப் பொருந்தியிருக்கலாமல்லவா?'' அடக்க மாட்டாத கண்ணீரில் மிதந்தாள் ரமா.

ரூபகுமார் அதற்குமேல் பேசவே இல்லை. அவனைப் பிடித்த அதிர்ஷ்டம், ஆனந்த் விமானத்தைப் பிடிக்கும் அவசரத்தில் அவளிடம் அதிகமாக எதையும் கேட்டுக் கொள்ளவில்லை.

ரமாவோடு ஒரு நிமிடம் அவன் நின்று பேசியிருந்தால் எல்லாவற்றையும் கூறியிருப்பாள். அவள் கூற்றைக் கேட்டு ஆனந்த் ஆஸ்பத்திரி என்றும் பாராமல் ரூபகுமாரைத் திட்டித் தீர்த்திருப்பான். டாக்டர்களும் நர்ஸ்களும் விஷயம் அறிந்து எள்ளி நகைத்திருப்பார்கள். எத்தனை பெரிய இக்கட்டிலிருந்தும் அவமானத்திலிருந்தும் அவன் தப்பி விட்டான். ரமா அவனுடைய மனைவியாக இருக்க வேண்டும் என்ற நியதி. அதனால்தான் சந்தர்ப்பங்கள் அவனுக்குச் சாதகமாக இருந்திருக்கின்றன!

ஆனால் ரமா....? தான் கொடுத்துள்ள வாக்கினால் எவ்வளவு பெரிய துயர நிகழ்ச்சிக்கு அவள் இடம் கொடுத்து விட்டாள்! வாசுவின் உயிருக்காக அவள், தன் வாழ்க்கையையே அல்லவா தியாகம் செய்து விட்டாள்! வாசுவை அப்படி மரண நிலைக்கு அனுப்பி விட்டு அவள் நிம்மதியாக இருந்துவிட முடியுமா? அப்படி நேர்ந்தால் பாவம், தேவகி அம்மாள் எத்தனை துடித்துப் போவாள்? ஒரு தாயாருக்கு ஒரே மகன், அவனிடமே தன் உயிர் நிலையை வைத்திருக்கும் தாயார். அவளுக்காகவேனும் வாசுவைக் கண்டிப்பாகக் காப்பாற்றித்தானே ஆக வேண்டும்? ஆனந்த் முதலில் வந்திருந்தால் இப்படி ஒரு நிலையை ஒரு வேளை தவிர்த்திருக்கலாம்.

அவள் வாழ்வையே தலைகீழாக்கி விட்ட பயங்கரத்தை என்னவென்பது? தன் இக்கட்டான நிலையைக் கூறினால் வாசு நம்புவாரா?

வாசுவுக்கு இனி ஆபத்தில்லை என்கிறார்கள். அப்படியானால் தன் வாக்கிலிருந்து அவள் மீற முடியாதா?.... ரூபகுமார் அப்போது மௌனமாகி விடுவானா? அவனே கூறி விட்டான், ரத்த வெறி பிடித்து வாசுவை ஒழித்து விட்டுத் தானும் மரண தண்டனை ஏற்கச் சித்தமாயிருப்பதாக. தன் வாழ்க்கை கெட்டாலும் வாசுவின் வாழ்வு மலரக் கூடாது என்ற ஒரே எண்ணம் அவனுக்கு. முன்பே ஒரு முறை ஏமாற்றம் கண்டவன். இப்போதோ அவள் வாக்கும் கலந்துவிட்டது. இரண்டாவது முறையும் ஏமாற்றம் காண மாட்டான். அடிபட்ட பாம்பாகக் குமுறிக் கடித்து விஷத்தைக் கக்கி விட்டே மறு காரியம் பார்ப்பான்.

ரூபகுமாரின் கார் ரமாவின் வீட்டை அடைந்தது. ரூபகுமார் முதலில் இறங்கி ரமாவுக்குக் கதவைத் திறந்து விட்டான். ரமா விருட்டென்று காரிலிருந்து இறங்கினாள். அம்பு போல் உள்ளே நுழைந்து விட்டாள், ரூபகுமாரைத் திரும்பியும் பார்க்காமல்.

ரூபகுமார் மனத்தோடு சிரித்துக் கொண்டான். 'சிறகுகள் வெட்டிவிடப்பட்ட பறவை அவள். இனி அவனை மீறி அவள் எங்கும் போய்விட முடியாது....'

''ரமா! நான் நாளை வந்து பார்க்கிறேன்.'' வாசலிலிருந்தே கூவிவிட்டு ருபகுமார் புறப்பட்டான்.

காந்தியும் தேவகியும் வாசலிலேயே நின்று கொண்டிருந்தனர். ரமா விர்ரென்று உள்ளே செல்லவே அவர்களைக் கவலை பற்றிக் கொண்டது. 'ஒருகால் வாசுவுக்கு ஏதாவது....'

''ரமா, வாசுவுக்கு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே காந்தி அவள் அருகில் வந்தாள்.

ரமாவினால் பதில் சொல்ல முடியவில்லை. அழுத்தி அழுத்தி வைத்திருந்த பஞ்சு, பிரித்து வெளியே கொட்டும் போது விரிவடைந்து காணப்படுவது போல் அடக்கப்பட்டிருந்த அவள் துயரம் கண்ணீர்ப் பிரவாகமாக வெறித்து ஓடியது. நெஞ்சே வெடித்து விடும் போல் விம்மினாள்.

தேவகியும் அழ ஆரம்பித்து விட்டாள். 'மகனுக்கு ஏதோ அபாயக் கட்டம் நெருங்கி யிருக்க வேண்டும். இல்லாவிடில் இந்தப் பெண் இப்படி அழுவானேன்?'

காந்தி ரமாவின் அருகில் அமர்ந்து அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள். ''ரமா, விஷயத்தை விவரமாகச் சொல்லி விட்டு அழு. வாசு எப்படி இருக்கிறார்? ஆபத்துக் கட்டம் தாண்டி விட்டதாக ஆனந்த் சொன்னாரே! அப்படியிருந்தால் நீ ஏன் இப்படி அழ வேண்டும்?''

தான் அழும் காரணத்தை ரமா எப்படிச் சொல்லுவாள்? மேலும் விசித்து விசித்துப் பலமாக அழலானாள்.

♦♦



இதோ ஒரு

பந்து வீச்சு

நிபுணர்!

விளையாட்டுக்குள் ஒரு விளையாட்டு!

இங்கிலாந்திலிருந்து கிரிக்கெட் மன்னர் ஹட்டன் சமீபத்தில் சென்னை சேப்பாக்கம் மைதானத்துக்கு விஜயம் செய்தார்.

''விரைவாகப் பந்து வீசும் நிபுணர்களிலே லின்ட்வாலும் மில்லரும் அசகாய சூரர்கள். அந்தக் காலத்தில் 'பவுன்ஸரை' அனுப்பி என்னை 'அவுட்'டாக்க அவர்கள் பெரு முயற்சி செய்தார்கள். ஏன், என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கவே முயன்றார்கள்! இப்பொழுது இங்கிலாந்தில் விரைவாகப் பந்து வீசும் நிபுணர்கள் குறைவு. எளிதான வாழ்க்கையுள்ள நகரங்களில் வேகமாகப் பந்து வீசுவோர் தோன்ற மாட்டார்கள். கடினமான உழைப்புள்ள பகுதிகளிலிருந்துதான் விரைவாகப் பந்து வீசும் நிபுணர்கள் வந்திருக்கிறார்கள். உங்கள் நாட்டிலும் கடினமான உழைப்பாளர் பகுதியிலிருந்து 'பாஸ்ட்' பௌலர்கள் கிடைக்க வாய்ப்புண்டு'' என்று ஹட்டன் கூறினார்.

அவர் சொன்ன முகூர்த்தமோ என்னமோ, அன்றே வந்து கோப்பைக் கான பந்தயத்தில் 'இதோ நான் ஒரு சிறந்த பந்து வீச்சு நிபுணர் இருக்கிறேன்' என்று தமது 'ஹாட்ரிக்' சாதனையின் மூலம் புகழ் பெற்றிருக்கிறார் ஸிம்ஸன் கம்பெனி தொழிலாளர் ஜெயராமன்! 11.3 ஓவர் பந்து வீசி 15 ரன்களை மட்டும் கொடுத்து எதிர்த்தரப்பின் பத்து விக்கெட்களையும் தாமே எடுத்து அரிய சாதனை செய்திருக்கிறார்!

''பெரும்பாலும் தொழிலாளர்களைக் கொண்ட, ஸிம்ஸன் பிளாண்ட் 1பி கிளப் ஆடம்பரமின்றி 21-3-66 மன்று ஸிம்ஸன் போர்மன் அந்தோணி பெர்னாண்டஸினால் தொடங்கி வைக்கப்பட்டது. ஏழைகள் ஆட ஆசைப்படும் ராஜ விளையாட்டு. பிரபல கோச் கே. என். கண்ணன் எங்கள் கிளப்புக்குப் பயிற்சியாளர். நாங்களும் கம்பெனிகளுக்கான நிர்ந்து கோப்பை கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டு விட்டோம்'' என்கிறார் கிரிக்கெட் கிளப்பில் ஆர்வம் மிக்க கே. என். வரதன்.

''என் அப்பா ஸிம்ஸன் கம்பெனி வாட்ச்மேன். நான் சிந்தாதிரிப்பேட்டை பள்ளியில் எஸ். எஸ். எல். சி. படித்திருக்கிறேன். சிந்தாதிரிப்பேட்டை உடல் பயிற்சி ஆசிரியர் ஜான் பொன்னையா என் பந்து வீச்சு ஆர்வத்துக்குத் தூண்டுகோலாயிருந்தார். ஸிம்ஸன் கம்பெனியின் இயந்திரப் பகுதியில் பணி புரிகிறேன். கல்யாணமாகி ஐந்து குழந்தைகள் இருக்கின்றன. எனக்கு முப்பத்தைந்து வயதாகிறது'' என்று தம் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுகிறார் ஜெயராமன்.

கடினமான உழைப்பாளர் பகுதியிலிருந்து வேகமாகப் பந்து வீசும் நிபுணர் ஒருவர் கிடைத்திருக்கிறார். கிரிக்கெட் மன்னர் ஹட்டன் சொன்னது பொய்க்கவில்லை! ஜெயராமன் மேலும் பல ஜெயங்கள் பெறட்டும். —குண்டுமணி

படங்கள்:
இடது: கோச் கே. என். கண்ணன்
வலது: பௌலர் ஜெயராமன்

''வாசுவின் தாயாரைப் பார், உன் மௌனத்தின் காரணமாக எப்படிக் கண்ணீர் விடுகிறாள் என்று!'' காந்தி ரமாவைப் பிடித்து உலுக்கினாள்.

''அவளைத் தொந்தரவு செய்யாதே, காந்தி. என் மகனுக்கு ஏதோ ஆபத்துத்தான். ரமா அதைச் சொல்ல முடியாமல்தான் தவிக்கிறாள். ஒரு தாயாரின் மனம் அவளுக்கு நன்றாகப் புரிந்திருக்கிறது. புத்திர சோகத்தில் ஒரு தாயார் எப்படித் தவிப்பாள் என்பதும் அவளுக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் தான் மௌனமாக இருக்கிறாள். ரமா! நீ சொல்ல வேண்டாமம்மா! நான் துன்பத்தை அநுபவிக்கப் பிறந்தவள். வாசுவின் அப்பா காலமான போதுகூட எனக்கு வாழ்க்கையை உதறித் தள்ளும்படி நேர்ந்துவிட வில்லை. ஒரு மகன் இருக்கிறான், அவனை ஆளாக்கிக் குலத்தை விளங்க வைக்க வேண்டும் என்ற குறியுடன் இருந்தேன்.... இப்போதோ அந்தக் குலவிளக்கு அணையப் போகிற சுவடு தெரிகிறது. ஐயோ, கடவுளே, இனி எனக்கு எதற்கு வாழ்க்கை?'' தேவகி மெல்லிய குரலில் ஆரம்பித்து, அடித்து மோதி வரும் துயரப் பிரவாகச் சுழலில் சிக்கி இரைந்து கதறத் தொடங்கினாள்.

ரமா அப்போதுதான் தேவகி அங்கிருப்பதையும் தன் மௌனத்தின் காரணமாக அவளுக்கு ஏற்படுத்திவிட்ட துன்பத்தையும் உணர்ந்தாள். ஒரு தாயாருக்குப் புத்திர சோகம் தரக்கூடாது என்பதற்காகவல்லவோ அவள் ரூபகுமாரிடம் தன் வாழ்வையே பாழாக்கும் வாக்கைக் கொடுத்திருந்தாள்! இப்போது தன் மௌனத்தின் காரணமாகப் புத்திர சோகத்தை அதிகப்படுத்தினால்..?

ரமா உடனே எழுந்து தேவகியை அணைத்துக் கொண்டாள். ''அம்மா, அப்படியெல்லாம் உங்களுக்கு ஒரு குறையும் வராது. உங்கள் மகன் வாசுவின் உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லை. அவரை இங்கு ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு இந்த நேரம் அழைத்து வந்திருப்பார்கள். போன் செய்து கேட்டுக் கொண்டு நீங்கள் காந்தியுடன் போய்ப் பார்த்து வாருங்கள்!'' என்று கூறினாள்.


காயும் பயிருக்கு மழை நீரென ரமாவின் வார்த்தைகள் தோன்றின.

முதல் நாள் மாலை நிகழ்ச்சிகளெல்லாம் தேவகிக்கு நினைவு வந்தன.

ரமாவோடு விவாகத்துக்குச் சென்றிருந்த மகன் நேராக ஆனந்தின் வீட்டுக்கு வருவதாகச் சொல்லியிருந்ததால் தேவகி ஆனந்தின் வீட்டுக்கே சென்று காத்திருந்தாள். ஆனந்துடன் விமான நிலையம் வரை செல்வதாக இருந்தான் வாசு. ஆனந்துக்கு விடை கொடுக்கக் காந்தியும் வந்திருந்தாள். விமானத்துக்குச் செல்ல வேண்டிய ஆனந்த் சீக்கிரமே திரும்பி வருவதாகக் கூறி எங்கோ வெளியே சென்றிருந்தான்.

விமான நிலையத்துக்கோ நேரமாகிக் கொண்டிருந்தது. புறப்பட வேண்டிய ஆனந்தையும் காணோம்; வழியனுப்ப வேண்டிய ரமா வாசுவையும் காணோம். என்னவோ ஏதோ என்று எல்லாரும் அஞ்சினர். (தொடரும்)

படித்துப் பாருங்கள்




கந்தருவ கானம்


''கன்னலையும் தேனையும் சேர்த்து, நல்ல காற்றையும் வான வெளியையும் சேர்த்து, தென்னு தமிழ்ப் புலவோர்கள் நல்ல நிலவைக் காவியம் செய்து கொடுத்தார்...'' என்ற மகா கவி பாரதியார் கூற்றுக்குச் சான்று பகர வெளிவந்திருக்கிறது, ''கந்தருவ கானம்'' என்னும் கவிதை நூல். சொல்லாழம், பொருளாழம், கருத்தாழம் ஆகியவைகளோடு வேகமும் கொண்டு பிறந்திருக்கிறது. இப்புத்தகத்தில் ''கந்தருவ கானம்'' ''குருவிக் கூடு'', ''உடையவர்'' ஆகிய மூன்று கவிதைத் தொகுப்புக்களும் தனித் தனிக் காவியங்களாகவே திகழ்கின்றன.

இன்பத்தை அடிப்படையாகக் கொண்ட ''கந்தருவ கானம்'' மிகவும் நூதனமாகப் புனையப்பட்டிருக்கும் கவினுறு காவியம். அதில் முத்துச் சரமாக ஒளிவிடும் கவிதை வரிகள் கொத்துக் கொத்தாக மலர்ந்து நம்மைப் பரவசப்படுத்துகின்றன.

மகாபாரதப் போர் முடிந்து நெடுங் காலத்துக்குப் பின்னர் இந்திரப்பிரஸ்தத்தில் நிகழ்ந்ததாகப் புனைந்து கவிஞர் இயற்றியிருக்கும் புதுமைக் காவியம் ''உடையவர்'' என்னும் தலைப்பில் மலர்ந்திருக்கிறது. தனிக் கவிதைகளும் நிறைய இருக்கின்றன.

எழுதியவர்: கவிஞர் திருலோகசீதாராம்; பிரசுரம்: கலைஞன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை—17; விலை: ரூ. 3.00.





பொய்கள், மகத்தான பொய்கள்!

‘பொய்கள் - அபாண்டமான பொய்கள்’ என்று ஆங்கிலத்தில் புள்ளி விவரம் குறித்துக் கேலியாகக் குறிப்பிடுவதுண்டு. ஆனால் இன்று கல்வித் துறையில் ‘புள்ளி விவரம்’ ஒரு முக்கியமான பாடமாக எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் போதிக்கப்பட்டு வருகிறது. காரணம், இன்றைய வாழ்க்கைக்குப் புள்ளி விவரம் பல்வேறு துறைகளிலும் பெருமளவுக்குப் பயன்படுகிறது. ‘‘உதாரணமாக, தமிழ் மக்களின் சராசரி உயரம் ஐந்தரை அடி என்று கூறினால் தமிழ் நாட்டில் உள்ள அத்தனை பேருடைய உயரத்தையும் அளந்து அதனை மொத்த மக்களின் எண்ணிக்கையால் வகுத்துச் சராசரி உயரம் நிர்ணயிக்கப் பெறுகிறது என்பதன்று பொருள். அது சாத்தியமா, என்ன? இங்குதான் ‘புள்ளி விவரம்’ கைகொடுக்கிறது. எத்தனையோ துறைகளில் இன்றியமையாததாக உள்ள ‘புள்ளி விவரம்’ குறிப்பாக, விவசாயத் துறைக்குப் பெரிதும் பயன்படுகிறது’’ என்கிறார், பத்மபூஷண் டாக்டர் கலியம்புடி ராதாகிருஷ்ணராவ்.

‘‘இவ்வாண்டு அரிசி விளைச்சல் எவ்வாறு இருக்கும்? எவ்வளவு டன் தானியம் கிடைக்கும் என்று உத்தேசமாக அனுமானிக்க வேண்டுமாயின் நாடு முழுவதிலுமுள்ள எல்லா வயல்களையும் பயிர்களையும் பரிசோதனை செய்வது இயலாத காரியம். அறுவடை முடியும் வரை காத்திருக்க இயலுமா? குறிப்பாகச் சில இடங்களில் மட்டும் பயிர்களையும் கதிர்களையும் சோதனை செய்து, கடந்த ஆண்டுகளில் எவ்வளவு மழை பெய்தது, என்ன வகை உரங்கள் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டன, எந்த இன விதைகள் விதைக்கப் பெற்றன என்பன போன்ற விவரங்களைக் கொண்டு இவ்வாண்டின் நிலையோடு ஒப்புநோக்கி அனுமானிக்கும் முறையில் புள்ளி விவர இயல் பயன்படுகிறது’’ என்கிறார்.

தமிழ் நாட்டில் (செங்கல்பட்டு மாவட்டம்) பிறந்த திரு ராவ், ஆந்திரா பல்கலைக் கழகத்தில் கணிதத்தை முக்கிய பாடமாகப் பயின்று எம். ஏ. பட்டம் பெற்றுப் பின்னர் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் ‘புள்ளி விவர’த்தில் (Statistics) எம்.எஸ்ஸி. பட்டம் பெற்றவர்.

புள்ளி விவர நிபுணர்களின் சேவை பலப்பல துறைகளில் தேவைப்படுகிறது என்பதற்கு இன்னொரு உதாரணம் பாருங்கள்: வட ஆப்பிரிக்காவிலுள்ள ஜெபெல் மோயா என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்களின் எலும்புக் கூடுகளை ஆராயும் பொருட்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் டாக்டர் ராதாகிருஷ்ண ராவை அழைத்தது! இன்று கல்கத்தா புள்ளி விவர நிலையத்தின் இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ள திரு ராவ் 1967ல் லண்டன் ராயல் சொஸைட்டியின் ஃபெலோ (F. R. S.) என்ற சிறப்பையும் பல பல்கலைக் கழகங்களில் டாக்டர் பட்டமும் பெற்றவர். நாற்பத்தொன்பது வயதுக்குள் இவர் ஆற்றியுள்ள பணிகளும் பெற்றுள்ள பதக்கங்களும் விருதுகளும் பட்டங்களும் பிரமிக்க வைப்பவை. இத்தனை சிறப்புக்களும் கூடிய ராதாகிருஷ்ண

இது கம்ப்யூட்டர் யுகம். கம்ப்யூட்டர்களின் உபயோகத்துக்குப் புள்ளி விவரங்கள் பரவலாகப் பயன்படுகின்றன. கம்ப்யூட்டருக்குத் தரப்படும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் அது நாம் அறிய விரும்பும் சரியான முடிவுகளை அலசி ஆராய்ந்து சொல்கிறது.

இடது பக்கம்: சர்க்கரைக் கிழங்கு சர்க்கரையாக மாறுகிறது. ஆனால் அந்த ஆலையில் மனிதர்களுக்கு வேலை யில்லை; எல்லாவற்றையும் கம்ப்யூட்டர்கள் கவனித்துக் கொள்கின்றன! முழுக்க முழுக்கத் தானியங்கி இயந்திரங்கள் கொண்ட சர்க்கரை ஆலைகள் மேற்கு ஜெர்மனியில் நிறுவப்பட்டுள்ளன. நிபுணர்கள் சிலர் வெளியில் கையைக் கட்டிக் கொண்டு அமர்ந்தபடி மேற்பார்வையிட்டு வந்தால் போதும்.

வலது பக்கம்: அமெரிக்க ரயில்வேக்களில் கம்ப்யூட்டர்களின் பணியை இந்திய ரயில்வே அதிகாரிகள் ஆராய்கின்றனர்.

கீழே: புள்ளி விவர நிபுணர் கலியம்புடி ஸ்ரீ ராதாகிருஷ்ண ராவ்.



ரால் அடக்கமே உருவானவர். புள்ளி விவர இயல் குறித்து அவர் மேலும் சொல்கிறார்:

''ஒரு புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டால் அது எந்த அளவுக்குப் பயன்படும் என்பதை நிர்ணயம் செய்யவும் புள்ளி விவரம் உதவுகிறது. பூமிக்கு அடியில் எண்ணெய் கனிப் பொருள்கள் எந்த இடங்களில் கிடைக்கும் என்பதை உத்தேசமாகக் கணக்கிடலாம். கிடைக்கக் கூடிய பொருளின் மதிப்பு, செலவாகக்கூடிய தொகை இவைகளை முன் கூட்டியே நிர்ணயம் செய்து, அந்த முயற்சியில் ஈடுபடலாமா வேண்டாமா என்று நிர்மானிக்கப் புள்ளி விவரம் பயன்படுகிறது.

''அண்மையில் ஆந்திர மாநிலத்திலுள்ள செம்பு ஈயம் ஆகிய கனிகள், பற்றி ஆராய்வதற்காக ஜப்பானிலிருந்து நிபுணர்கள் வந்தனர். செலவினங்களைப் பற்றி ஆலோசனை வழங்க இக்குழுவில் புள்ளிவிவர நிபுணர்களும் இடம் பெற்றார்கள். கோலார் தங்க வயல் லாபகரமாகச் செயல்படவில்லை என்று தெரிந்ததும், அது லாபகரமாக இயங்குவதற்கான வழிமுறைகளை வகுக்கப் புள்ளி விவர நிபுணர்களின் உதவி கோரப்பட்டது. பொதுவாகக் கூறுமிடத்து, எந்த ஒரு திட்டமும் பொருள் விரயமின்றி, சிக்கனமாக நிறைவேறிச் செயல்படப் புள்ளி விவரம் இன்றியமையாத தெனலாம். தெரிந்த விவரங்களின் அடிப்படையில், தேவைப்படும் தகவல்களை ஊகித்தறியப் பயன்படும் விஞ்ஞானம் புள்ளி விவரம்.''

இன்று இவ்வளவு முக்கியத்துவம் பெற்று விட்ட புள்ளி விவரத் துறையை இனி, ''மெய்கள், மகத்தான மெய்கள்'' என்று வர்ணிக்கலாம் அல்லவா? பேட்டி: **'பாணன்'**

இரட்டையர் பிரச்னை

சாந்தாவும் காந்தாவும் இரட்டையர். இரண்டு வயதானபோது நிலைக்கண்ணாடியின் எதிரே போய் நிற்கும் சாந்தா அதில் காந்தாவின் முகத்தைப் பார்க்கிறாள்! ஆம், இருவருக்கும் அவ்வளவு உருவ ஒற்றுமை! ஒரு ஜோடியில் தான் ஒரு பாதி என்ற நினைவு அவளிடம் வேரூன்றி விடுகிறது. மற்ற சராசரிப் பெண்களைப் போலத் தனக்கு ஒரு தனித்துவம் கிடையாதா? இரட்டையரில் பலருக்கு இப்படி ஒரு பிரச்னையும் அதன் விளைவான மனச் சோர்வும் ஏற்பட்டு விடுவதுண்டு. சராசரி நான்கு ஜோடி இரட்டையர்களுள் ஒரு ஜோடி இரட்டையரிடம் பல விதங்களில் வியத்தகு ஒற்றுமை காணப் பெறும். இருவரில் யார் எவர் என்று அடையாளம் காண்பதே சிரமம். இரட்டையர் இருவருமே ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ இருப்பார்கள். விஞ்ஞான ரீதியாக இருவரின் இரத்தமும் ஒரே இனத்தைச் சேர்ந்ததாக இருக்கும். அறிவுத் திறனும் ஒரே தன்மையது. ஏன், கை விரல் ரேகைகள் கூட ஒரே மாதிரியாக இருக்கும்! ஒருவர் மனத்தை ஒருவர் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். இவ்வளவும் போதாதென்று ஒரு குழந்தைக்கு வலது கன்னத்திலும் இடது புறத்திலும் மச்சங்கள் இருந்தால் இன்னொரு குழந்தைக்கும் அதே இடங்களில் மச்சங்கள் அமைந்திருக்கும். பெற்றோர்களுக்கே குழப்பமாகவும் சங்கடமாகவும் இருக்கும்.

உங்களில் யாருக்காவது இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளனவா? இரட்டையரிடம் காலப் போக்கில் சில வேறுபாடுகள் தோன்றாமற் போகாது. ஆனால் அதற்கு முன்னால் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவம் உண்டு என்பதை உணர்ந்துகொள்ள நீங்களே குழந்தைகளுக்கு உதவலாம். இரு குழந்தைகளுக்கும் வெவ்வேறு விதமான உடைகளை அணிவித்தல், கூந்தல் அலங்காரமும் ஒருவருக்கொருவர் மாறுபட்டதாக இருத்தல், இருவரையும் வெவ்வேறு பள்ளிகளுக்கு அனுப்புதல் - இவையெல்லாம் பலன் அளிக்கும். சாதாரணமான நடைமுறையில் இருந்து வரும் வழக்கத்துக்கு மாறுபட்ட கருத்து இது. ஆனால் இதுவே நல்லது.



இயற்கையிலேயே மாறுபட்ட குணங்கள் அமைந்த இரட்டையர்களும் உண்டு. இரட்டையரில் ஒன்று தவழும் பருவத்தில் இன்னொன்று நடை பழக ஆரம்பித்துவிடும். உருவ வேறுபாடுகளும் மிகுதியாக இருக்கும்.

பெற்றோர்களுக்கு இறுதியாக ஒரு வார்த்தை. இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் ஏதோ நடக்கக் கூடாத அதிசயம் நடந்துவிட்ட மாதிரி பரபரப்பு அடைந்து அவற்றுக்கு விசேஷ சலுகை காட்டாதீர்கள். ஏனைய சாதாரண குழந்தைகளைப் போன்றவர்களே இரட்டையரும். அவர்களிடம் இயல்பாகவே பழகுங்கள். -ஐ. பி. எஸ்.

தமிழில்: ருக்மிணி
பாலகிருஷ்ணன்

படம்:
மாதவன் — முரளிதரன்

அத்தியாயம் 33

தீயவர்க்கும் நன்மை

சாருலதா பில்டிங்கை விட்டுச் சந்திரபாலும் மதுபாலும் வெளியே வந்தார்கள். இருவரிடமும் இரு தோல் பைகள் இருந்தன. ஒவ்வொரு தோல் பையிலும் ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய்.

மவுண்ட் ரோட்டில் அவர்கள் ஒரு டாக்ஸியைப் பிடிக்கும் நோக்கத்துடன் மெல்ல நடந்த போது சாலை ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு காரிலிருந்து வேணுகோபால் கீழே இறங்கிப் பிளாட்ஃபாரம் பக்கமாக வந்து பின்பக்கம் கதவைத் திறந்து பிடித்தான். அவர்களை ஏறிக் கொள்ளுமாறு சைகை காட்டினான்.

அவர்கள் விழித்தார்கள்.

" ஏறுங்கள் " என்றான் வேணுகோபால்.

"எதற்கு ?"

"எல்லாம் உங்கள் நன்மையை உத்தேசித்துத்தான்."

அவர்கள் மேலே நடந்தார்கள். கை நீட்டித் தடுத்த வேணுகோபால் கூறினான் : "நீங்கள் இரண்டு பேர். நான் ஒண்டி ஆள். நீங்கள் பல சாலிகள். என்னைப் பாருங்கள். உங்களை நான் என்ன செய்துவிட முடியும்? அநாவசியமாக எதற்குப் பயப்படுகிறீர்கள் ?"

தெம்பு பெற்று இருவரும் காரின் பின்பக்கம் ஏறிக் கொண்டார்கள்.

கார் கிளம்பியது.

" நாம் எங்கே போகிறோம் ?" மதுபால் கேட்டான்.

"பாங்குக்கு."

"எந்த பாங்குக்கு?"—சந்திரபால்.

"நீங்கள் சாருலதாவின் கல்யாண ஃபோட்டோ, நெகடிவ்களை எந்த பாங்கில் ஸேஃப் டெபாஸிட் வால்டில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறீர்களோ அந்த பாங்குக்கு."

"அது எந்த பாங்கு என்று உனக்கு எப்படித் தெரியும் ?"

"நீங்கள் சொன்னால்தான் தெரியும்."

கொச்சைத் தமிழும் ஆங்கிலமும் கலந்த மணிப் பிரவாள நடையில் மதுபாலும் சந்திரபாலும் மாறி மாறிப் பேசினார்கள். இடையில் சில இந்தி வார்த்தைகள் புகுவதையும் அவர்களால் தடுக்க முடியவில்லை.

"எந்த பாங்கு என்று நாங்கள் எதற்காக உனக்குச் சொல்லப் போகிறோம் ?"

"ஏனென்றால் நீங்கள் ஒரு தர்மசங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்! அதனால் கட்டாயம் சொல்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

சாருலதா

கி.ராஜேந்திரன்



"என்ன சங்கடம் வந்துவிட்டது எங்களுக்கு ?"

"பிளாக் மெயில் செய்வது பெரிய குற்றம். தெரியுமல்லவா ?"

அவர்கள் சிரித்தார்கள். "பயமுறுத்துகிறாயா ?"

"இல்லை. நான் போலீஸாரிடம் போகப் போவதுமில்லை. நீங்கள் யோக்கியமாக வாழ ஒரு சந்தர்ப்பம் அளிக்க விரும்புகிறேன்."

"அடாடா ! எவ்வளவு பெருந்தன்மை !" என்றான் மதுபால்.

"உன் அனுதாபம் தேவையில்லை" என்றான் சந்திரபால். "போலீசில் சொல்லிக் கொள். அவர்கள் எங்கள் மீது நடவடிக்கை எடுக்க எந்தவித சாட்சியமும் கிடையாது!"

"சாட்சியம் இருக்கிறது."

"என்ன அது ?"

''ஒரு டேப் ரிகார்டர். அதை இயக்கினால் நீங்கள் சாருலதாவைப் 'பிளாக் மெயில்' செய்து பேசுவது கேட்கும்.''

''யார் எங்கள் குரலைப் பதிவு செய்தது?'' திடுக்கிட்டுக் கேட்டான் மஹிபால். ''எப்படி எங்களுக்குத் தெரியாமல் நடந்தது இது?''

''உண்மையைச் சொல்வதானால், எதிர்பாராமல் நிகழ்ந்துவிட்ட செயல் தான். உங்களைத் தண்டிக்கத் தெய்வமே தீர்மானித்து இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்ததாக நினைக்கத் தோன்றுகிறது.''

''அந்த டேப் ரிகார்டரை வைத்துக் கொண்டு போலீஸார் என்ன செய்வார்கள் ?''

''அதைச் சாட்சியமாகக் கோர்ட்டில் சமர்ப்பிக்க முடியுமா என்பது எனக்குத் தெரியாது. ஒரு வேளை அது சாத்தியமாகலாம். இல்லா விட்டாலும் போலீஸார் உங்கள் மீது சந்தேகப்பட்டு நடவடிக்கை எடுக்க அது போதுமான ஆதாரமாகும். பெரிய அளவில் பிளாக்மெயில் செய்யத் துணிகிறவர்கள் ஏற்கனவே மோசடி, கொள்ளை போன்ற காரியங்களிலும் ஈடுபட்டிருக்கலாம் என்று கருதுவார்கள். லாக்அப்பில் தள்ளி விசாரிப்பார்கள். பூர்வோத்திரத்தைக் கேட்பார்கள். அது சம்பந்தமாய் விவரம் அறிய உத்தரப்பிரதேசப் போலீஸாருடன் தொடர்பு கொள்வார்கள்.''

''ஆனால் நீ போலீசுக்குப் போகப் போவதில்லை என்று சொன்னாயே ?'' என்றான் மஹிபால்.

''எப்படிப் போவான் ? அங்கே போனால் நம் கதையுடன் சாருலதாவைப் பற்றிய பழைய கதைகளும் வெளியாகி விடாதா ? இவன்தான் அவளைக் காதலிக்கிறானே! அவள் மனம் கஷ்டப்படுவதை இவன் விரும்ப மாட்டான். அதை இவனால் சகிக்க முடியாது!'' என்றான் சந்திரபால்.

''நீ தினந்தோறும் அவளுடன் காரில் ஊர் சுற்றுவதை நாங்கள் பார்க்கவில்லை என்று நினைக்கிறாயா ?'' என்றான் மஹிபால்.

''நீங்கள் தப்புக் கணக்குப் போடுகிறீர்கள். அவள் விதவை என்பது தெரிந்தும் நான் சந்தோஷத்தோடு அவளைக் கல்யாணம் செய்து கொள்ளக் காத்திருக்கிறேன். அவளும் சம்மதித்து விடுவாள் என்றே எதிர்பார்க்கிறேன். இன்னும் நாலு நாட்களில் பதில் சொல்வதாக வாக்களித்திருக்கிறாள்.''

''உனக்கு அவளைப் பற்றித் தெரியும் ; அது உலகுக்கும் தெரிய வேண்டுமா ?''

''அவள் ஒரு விதவை என்று வீதி வீதியாகப் போய்த் தம்பட்டம் அடியுங்கள்; கவலை இல்லை. நான் அவள் கணவனை பிறகு அவள் சுமங்கலித் தோற்றம் யார் கண்ணையும் உறுத்தாது. அவள் கல்யாணப் படங்கள் உங்களிடம் இருப்பதால் ஒரு நஷ்டமுமில்லை.''

சற்று நேரம் மௌனம் நிலவியது. மஹிபால், சந்திரபால் இருவருமே அவன் கூறியதை ஜீரணித்து உட்பொருளை உணர்ந்தார்கள்.



''நாங்கள் எந்த ஆதாரத்தின் மீது நின்று சாருலதாவைப் பிளாக் மெயில் செய்தோமோ அது நழுவிப் போய் விட்டது!'' என்று பரிதாபமான குரலில் சொன்னான் மஹிபால்.

''ஆனால் நாங்கள் பிளாக் மெயில் செய்தோம் என்பதற்கான ஒரு சாட்சியம் உன்னிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது'' என்று பயத்துடன் பேசினான் சந்திரபால்.

''ஆபத்தான நிலைமை'' என்று இருவரும் ஒரு சேர ஒத்துப் பாடினர்.''


''உங்களுக்கு ஓர் ஆபத்தும் இல்லை. ஆரம்பத்திலேயே நான் சொன்னேனே, போலீஸாரிடம் போகப் போவதில்லை என்று. உங்களுக்கு நன்மை செய்ய நினைக்கிறேன். டேப் ரிகார்டரை உங்களுக்கே தந்து விடுகிறேன்.''

''அதற்குப் பதிலாகச் சாருவின் கல்யாணப் படங்களையும் நெகடிவ்களையும் நாங்கள் உன்னிடம் தந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயா?''

''நான் ஒரு நிபந்தனையும் விதிக்கவில்லை. நீங்களாகவே நெகடிவ்களையும் ஃபோட்டோக்களையும் என்னிடம் கொடுத்தால் வேண்டாம் என்றும் சொல்லப் போவதில்லை. உங்கள் மனம் மாறி விட்டது. நீங்கள் நல்லவர்களாகி விட்டீர்கள் என்பதை அந்தச் செயல் எனக்கு உணர்த்தும். சந்தோஷம் அடைவேன்.''

''உன்னுடைய காரில் எதற்காக ஏறினோம் என்று வருத்தமாயிருக்கிறது. சாருலதாவைப் பார்க்க வரப் போகிறோம் என்று உனக்கு எப்படித் தெரியும்? வாசலில் காத்திருந்தாயே நீ?''

''சாரங்கனிடம் சொல்லி வைத்திருந்தேன். அவன் ஃபோன் பண்ணி



னான். மத்தியானம் இரண்டரை மணிக்கு உங்களைச் சாருலதா வரச் சொல்லியிருக்கிறாள் என்று தகவல் கொடுத்தான்.''

''அந்த டேப் ரிக்கார்டர் எங்கே இருக்கிறது?''

''நீங்கள் நெகடிவ்களைப் பத்திரப் படுத்தி யிருப்பது போல் நானும் டேப் ரிகார்டரை யார் கண்ணிலும் படாத இடத்தில் ரகசியமாய் வைத்திருக்கிறேன். அழைத்துப் போகட்டுமா, அங்கே ?''

''முதலில் பாங்குக்குப் போ !''

வேணுகோபாலின் உள்ளம் குதூகலத்தால் துள்ளியது. ''எந்த பாங்கு?'' என்று கேட்டான்.

''மயிலாப்பூர் ஸ்டேட் பாங்கு. நெகடிவ்கள், ஃபோட்டோக்கள் எல்லாவற்றையும் கொண்டு வருகிறோம். பிறகு டேப் ரிக்கார்டர் இருக்குமிடத்துக்குப் போவோம். பண்டமாற்று செய்து கொள்ளலாம்.''

'ஸேஃப் டெபாஸிட் வால்ட்'டிலிருந்து அவற்றை எடுத்துக் கொண்டு வந்தார்கள். வேணுகோபால் காரை



லைப்பாய்

இருக்குமிடம்: அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்

புத்துணர்ச்சி தருவதிலே ஈடிணையற்றது
லைப்பாய் ஸ்நானம். உற்சாகப் பெருக்கு,
உல்லாச ஊற்று, ஆரோக்கிய மிதப்பு,
நல்ல சோப்புக்குரிய நன்மைகள்
யாவும் பெறுவீர், மேலும் பெறுவீர்
லைப்பாய் துணையால்...

**அழுக்கிலுள்ள கிருமிகளைக்
கழுவிக் களைவது
லைப்பாய்**

லிண்டாஸ்-L. 63-140 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

அடையாறு, திருவான்மியூர் தாண்டி முத்துக்காடு சாலையில் ஓட்டிச் சென்றான். அவன் மனத்தில் உற்சாகம் கரை புரண்டதால் பிரபலமான சினிமாப் பாடல் ஒன்றினைச் சீழ்க்கை அடித்த படி வண்டியைச் செலுத்திக் கொண்டு போனான். காரின் வேகத்துக்கேற்ப கிலோ மீட்டர் கல்கள் ஒன்றன்பின் ஒன்றாய் காரை நெருங்கிப் பின்னால் சென்று மறைந்தன.

அத்தியாயம் 34

ஏமாற்றம் !

திருவான்மியூரிலிருந்து பத்தாவது கிலோமீட்டர் கல் தாண்டி இடது பக்கம் திரும்பியது கார்.

''இது என்ன அமானுஷ்யமான பிரதேசமாயிருக்கிறதே !'' என்றாள் மதிபாலா.

''ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கிளம்பி வந்தால், இருட்டுகிற சமயம் தான் இதை விட்டுப் புறப்படுவேன். அதுவரை கடலில் குளிக்க வேண்டியது, மணலில் நடக்க வேண்டியது, பின்னோடு கொண்டு வந்த சாப்பாட்டுப் பொட்டலங்களைக் காலி செய்ய வேண்டியது, படுத்தபடி படிக்க வேண்டியது, தூங்க வேண்டியது. விழித்துக் கொண்டதும் மீண்டும் கடல் ஸ்நானம், மறுபடியும் சாப்பாட்டுப் பொட்டலம்....''

''அன்றாட 'டல் ரொட்டீனி'லிருந்து ஒரு மாறுதல் !''

''போது விடிந்தால் போது போனால் நோயாளிகளைத் தட்டிக் கொட்டிப் பார்த்து அலுத்து விடுகிறது. வீட்டிலிருந்தால் ஞாயிற்றுக்கிழமை கூடச் சும்மாவிட மாட்டார்கள். அதனால் தான் ஓடி வந்து விடுகிறேன். இங்கே நான் டாக்டர் என்பது யாருக்கும் தெரியாது.''

''அந்த விஷயம் பரவி விட்டால் இங்கேயும் ஞாயிற்றுக்கிழமைகளில் நீண்ட 'கியூ' நிற்குமே!'' என்றாள் மதிபாலா.

''ஆமாம், சுற்று வட்டாரத்தில் உள்ள சேரி மக்களெல்லாம் குஞ்சு குட்டிகளுடன் திரண்டு வருவார்கள்'' என்றான் சந்திரபால்.

''கடற்கரையை ஒட்டினாற் போல் பத்து கிரவுண்டு நிலம் வாங்கினேன். நகரத்துடன் ஒப்பிடும்போது விலை மலிவுதான். ஆனால் நாளுக்கு நாள் இங்கேயும் கூடி வருகிறது. இரண்டே அறைகள் கொண்ட சின்ன வீடு கட்டி டினேன். தோட்டத்தைக் கவனிக்க ஓர் ஆள். வீட்டுக்குப் பெயர் என்ன தெரியுமா? 'வீக்கெண்ட்!' ''

''அச்சா ! பொருத்தமான பெயர் தான். ஆனந்தமாகப் பொழுது போகும் இங்கே.''

''போன ஞாயிற்றுக்கிழமை மட்டும் அத்தனை ஆனந்தமாக இல்லை.''

''ஏன் அப்படி ?''

''உங்கள் குரல் பதிவாகியிருந்த டேப் ரிகார்டரை இயக்கி முற்பகலில் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தேன். எப்படி உங்களிடம் மன மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று யோசித்தபடி இருந்தேன். வீடு திரும்பும்போது ரிகார்டரை எடுத்துப் போக மறந்து விட்டேன். இங்கேயேதான் இருக்கிறது.''

கரடு முரடான குண்டும் குழியுமான சாலையில் எவ்வளவு தூரம் முன்னேற முடியுமோ அவ்வளவு தூரம் சென்று விட்டது கார். ''இதற்கு அப்பால் சாலை இல்லை. நடந்துதான் போக வேண்டும்.'' வேணுகோபால் கீழே இறங்கினான்.

ஒரு சவுக்குத் தோப்பைக் கடந்து சென்றார்கள். ''இது குறுக்கு வழி. லே அவுட் பிளானில் சாலை இருக்கிறது. ஆனால் பாதை போட நான்தான் செலவழிக்க வேண்டும். ஏகப்பட்டது ஆகும்; அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டேன்.''

'வீகெண்ட்' என்று போர்டு போட்டிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். வேணுகோபால் பூட்டியிருந்த கேட்டைத் திறந்தான்.

''தோட்டக்காரன் இருப்பதாய்ச் சொன்னாயே ?''

''ஐயா ஞாயிற்றுக்கிழமைகளில்தான் வருவார் என்று அவனுக்குத் தெரியும். அப்படியிருக்க வேலை செய்ய உடம்பு வணங்குமா? வேறு எங்கேயாவது கூலி வேலை செய்யப் போயிருப்பான். அல்லது குப்பத்தில் தன் குடிசையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பான்.''

'' ஆகக்கூடி இந்தப் பிரதேசத்தில் நாம் மூவர்தான் இப்போது இருக்கிறோம் !'' என்று உறுதிப்படுத்திக் கொள்ள விழைவது போல் கேட்டாள் மதிபாலா.

''என்னைப் போலவே இந்தப் பக்கத்தில் வேறு பலரும் 'பிளாட்' வாங்கிப்

போட்டிருக்கிறார்கள். ஆனால் எல்லாருமே சனி, ஞாயிறில்தான் வருவார்கள். 'ஹாலிடே ரிஸார்ட்' இது.''

நாலு தூண்களை எழுப்பி அதன் மேல் உயரத்தில் அலங்காரமாய்க் கட்டப்பட்டிருந்தது வீடு. ஏணி போன்று ஆனால் வசதியாக அமைக்கப் பட்டிருந்தன படிகள்.

''மரத்துக்கு மேலே கட்டின வீடு மாதிரி, இது என்ன ஃபாஷன்?''

''பாப்பலை'ம் உண்டு. இந்தப் பக்கத்தில் ஓநாய், நரிகள் நிறைய இருக்கின்றன. சில சமயங்களில் சனிக்கிழமை இரவே இங்கே வந்து படுத்து விடுவேன். அதிகாலையில் சூரியோதயத்தைப் பார்க்க ரொம்ப ஜோராக இருக்கும். ஆனால் இரவு நேரத்தில் நரிகள் ஊளையிடுவது கேட்கச் சகிக்காது. பாம்புகளுக்கோ பஞ்சமேயில்லை. அதனால்தான் பாதுகாப்புக்காக இப்படித் தூண்களின் மேல் வீடு கட்டுவது.''

''உயரமாக இருந்தால் 'வியூ'வும் நன்றாக இருக்குமே?'' என்றான் மஹிபால்.

''ஆமாம், சவுக்குத் தோப்பு பார்வையை மறைக்காது. நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் கடற்கரை மணலும் அலைகடலும் நன்றாகத் தெரியும்.''

படிகளில் ஏறி வாசல் கதவு பூட்டைத் திறந்தான் வேணுகோபால். அந்த உயரத்தில் காற்று பிய்த்துக் கொண்டு போயிற்று. ''உள்ளே ஒரே இருட்டாக இருக்கும்; சற்று இருங்கள்; ஜன்னல் கதவுகளைத் திறக்கிறேன். இங்கே மின்சாரம் கிடையாது. இரவு நேரத்தில் தங்கினால் அரிக்கேன் விளக்குத்தான்.''

ஜன்னல்களைத் திறந்ததும் அந்தச் சிறிய அறையில் ஒளி வெள்ளம் பரவியதுடன் காற்றுச் சுழலும் நிரம்பியது. 'ஹோ'வென்ற அலைகடலின் ஆரவார இரைச்சலுடன் சவுக்குத் தோப்பில் புகுந்து செல்லும் காற்றின் 'உய்' என்ற அட்டகாசக் கூச்சல் போட்டியிட்டது.

''உட்காருங்கள்'' என்று அங்கிருந்த இரு நாற்காலிகளைக் காட்டிவிட்டுப் படுக்கை விரிக்கப்படாத நாடாக் கட்டிலில் அமர்ந்தான் வேணுகோபால். கட்டிலின் ஒரு மூலையில் டன்லப்பில்லோ தலையணை மட்டும் இருந்தது. அதன் மேல் முழங்கையை ஊன்றிச் சாய்ந்தான்.

''வாரத்தில் ஒரு நாள்தானே வரப் போகிறோம் என்பதால், சோபா, கட்டில் என்று எதையும் வாங்கிப் போடவில்லை நான். வசதியாக இராது. பக்கத்து அறையில் ஒரு ஸ்டவ் மட்டும் வைத்திருக்கிறேன். இன்ஸ்டண்ட் காப்பியும் பௌடர் பாலும் பயன்படுத்திக் காப்பி போட்டுக் கொள்ளலாம்.''

''அதெல்லாம் கிடக்கட்டும். டேப் ரிகார்டர் எங்கே? எதற்காக அதை இன்னும் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறாய்?''

தலையணையைத் தட்டி வேணுகோபால் சிரித்தான். ''காரியத்திலேயே கண்ணாய் இருக்கிறீர்கள்!''

''உன்னிடமிருந்து டேப் ரிகார்டரை வாங்கிக் கொண்டு பிறகு நெகடிவ்களையும் ஃபோட்டோக்களையும் கொடுக்காமல் ஏமாற்றி விடுவோம் என்று பயமா?''

''எனக்கு ஒரு பயமும் இல்லை. நான் தான் முன்பே சொன்னேனே. நீங்கள் நெகடிவ்களையும் ஃபோட்டோக்களையும் கொடுத்தால் சந்தோஷத்தோடு வாங்கிக் கொள்கிறேன். அவற்றை நீங்கள் தராவிட்டாலும் நான் டேப் ரிகார்டரை உங்களுக்குத் தந்துவிடப் போகிறேன்.''

''நீ ஒரு பைத்தியக்காரன்'' என்றான் மஹிபால்.

''இல்லை, இல்லை! இவன் காந்தித் தாத்தா கதையைப் பேசுகிறான்'' என்றான் சந்திரபால்.

''ஓ தீயவர்க்கும் நன்மை செய்யும் நோக்கமா?''

''எவ்வளவு கர்வத்தோடு உட்கார்ந்திருக்கிறான், பார்த்தாயா?''

அவர்கள் மாறி மாறிப் பேசிக் கொண்டேயிருக்கையில் வேணுகோபால் தலையணையைத் தூக்கித் தரையில் போட்டான். அதனடியில் பாட்டரியால் இயங்கும் சின்னஞ்சிறிய டேப் ரிகார்டர் இருந்தது. அதை இயக்கினான். சாருலதா, மஹிபால், சந்திரபால் ஆகியோர் குரல்கள் ஒலித்தன. அதைக் கேட்டு அவ்விருவர் முகத்திலும் கலவரம் நிலவியது. ரிகார்டரை நிறுத்திவிட்டு எழுந்து அவர்களை நெருங்கி டேப் ரிகார்டரை நீட்டினான் வேணுகோபால். மஹிபால் வாங்கிக் கொண்டு, ''இது ஒரிஜினல் டேப்தான், டியூப்ளிகேட் இல்லை என்பதற்கு என்ன அத்தாட்சி?'' என்றான்.

வேணுகோபால் பெரிதாக ஏளனமாகச் சிரித்தான். ''நீங்கள் சாருலதாவை ஏமாற்றியது போல் நானும் இதற்கு நகல் எடுத்துக் கொடுத்து உங்களை ஏமாற்றுவேன் என்று நினைத்



சிந்தால்
CINTHOL
அதிக மணம், அதிக மென்மை
சிந்தால்
CINTHOL
ஜி-11 கொண்ட சிந்தாலைப் போல வேறெந்தப் பவுடரும் உங்களைப் பாது காப்பதில்லை
மென்மை, அன்றலர்ந்த மலரின் புதுமை, நறுமணம்
ஒப்பற்ற கிருமிநாசினியாகிய ஜி-11 (ஹெக்சாகுளோரோஃபின்) கொண்ட சிந்தால் டாய்லெட் பவுடரின் நீடித்து நிற்கும் நறுமணமும், பட்டுமென்மையும் உங்கள் உடலைத் தழுவி, சருமத்திற்கு நாள்முழுவதும் பாதுகாப்பளிக்கட்டும்.
INTERPUB/GP 17A TAM



கண்ணைக் கவர்கிறது!
ஆந்திரப் பிரதேஷ் பேப்பரில்
எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட
வார்த்தை நன்ருகப் பதிகிறது

mcm/app/2a

தீர்களா! கவலைப்படாதீர்கள். இது ஒரிஜினல் டேப்தான். சத்தியம்.''

''நீ ஒரு முட்டாள்'' என்றான் சந்திரபால்.

''பாங்குக்குப் போய் நெகடிவ்களையும் புகைப்படங்களையும் எடுத்து வந்தோமே ஒழிய அதை உன்னிடம் கொடுக்கும் உத்தேசம் எங்களுக்கு ஆரம்பத்திலிருந்தே இல்லை'' என்றான் மஹிபால்.

''நிஜமாகவா ?'' என்றான் வேணுகோபால். அவன் ஏமாற்றம் முகத்தில் தெரிந்தது.

இப்போது அவர்கள் சிரித்தார்கள். ''இங்கே வந்த பிறகு நீ ஏதாவது முரண்டு பிடிக்கப் போகிறாயே என்பதால் எதற்கும் கையில் இருக்கட்டும் என்று கொண்டு வந்தோம். ஆனால் தரப் போவதில்லை.'' — மஹிபால்.

''நீதான் அதனால் பரவாயில்லை என்று சொன்னாயே?'' — சந்திரபால்.

''படங்களும் நெகடிவ்களும் எனக்குக் கிடைக்கவில்லையே என்ற கவலை இல்லை எனக்கு. என்னை நீங்கள் நம்பவில்லையே என்பதுதான் ஏமாற்றம். இங்கு வந்த பிறகு நெகடிவ் — ஃபோட்டோ எங்கே என்று கேட்டுத் தகராறு செய்வேன் என்று நினைத்தீர்கள் அல்லவா ? அதைவிடப் பெரிய ஏமாற்றம்: உங்கள் மனத்தை மாற்றி நல்லவர்களாக்கி விட்டதாக நினைத்து அவசரப்பட்டுச் சந்தோஷமடைந்து விட்டேன்.''

''நாங்களாவது மனம் மாறுவதாவது ?'' — மஹிபால் கேட்டான்.

''எங்களைப் பற்றி உனக்கு ஒன்றும் சரியாகத் தெரியாது'' என்றான் சந்திரபால். இவ்விதம் சொல்லிக் கொண்டே சரேலென்று வலது முழங்காலை உயர்த்தி வேணுகோபாலை அவனது தொடைகளுக்கிடையில் தாக்கினான். வேணுகோபால் துடிதுடித்துக் குனிந்தபோது அவன் கழுத்தில், விரிந்த உள்ளங்கையின் ஓரத்தால் ஒரு வெட்டு ; முதுகில் ஒரு குத்து. கீழே விழுந்து தரையில் உருண்டவனைக் காலால் உதைக்க ஆரம்பித்தான்.

மஹிபாலும் டேப் ரிகார்டரை நாற்காலி மேல் வைத்து விட்டுச் சந்திரபாலுடன் சேர்ந்து கொண்டான். லாடம் அடிக்கப்பட்ட கனமான பஞ்சாபி ஸாண்டல்கள் அணிந்த இருவரது கால்களும் மாறி மாறிக் கண் மூக்கு என்று பாராமல் வேணுகோபால் மீது விழுந்தன.

''ஐயோ ! என்னை ஏன் வதைக்கிறீர்கள்? நான் உங்களுக்கு நன்மை தானே செய்தேன் ?'' என்று வேணு கேட்ட போது அவன் வாயிலிருந்து ரத்தம் வழிந்தது.

''எதுடா நன்மை ? அயோக்கிய ராஸ்கல் ! நாங்கள் இந்தப் பிளாக் மெயில் டீலில் ஐந்து லட்சமாவது பணம் பண்ணத் திட்டமிட்டிருந்தோம். அதைக் கெடுத்தாயே, நாயே! இன்னும் ஐம்பதாயிரம்கூட முழுசாகக் கைக்கு வரவில்லையே!'' என்றான் மஹிபால் உதைத்துத் துவைத்தபடியே.

''உனக்குக் காதலும் கல்யாணமும் இப்போ என்ன கேடு ! உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டால் எங்களுக்குப் பணம் எப்படிக் கிடைக்கும்?'' என்று கேட்ட சந்திரபால் வேணுகோபாலின் நெஞ்சிலே அளவற்ற ஆத்திரத்துடன் மேலும் உதைத்தான்.

'மளுக்'கென்று ஓர் ஓசை. விலா எலும்பு ஒன்று முறிந்துவிட்டதென்பது டாக்டராகிய வேணுவுக்குப் புரிந்தது. ஆனால் அந்த அசுரர்களுக்கு அது தெரியவில்லை. அதை உணர்ந்திருந்தாலும் இரக்கம் காட்டியிருக்கப் போவதில்லை. அவர்களுக்குக் கிடைக்காத ஐந்து லட்சம் ரூபாய்களுக்காக ஐந்து லட்சம் உதைகளைக் கொடுக்கத் தீர்மானித்து விட்டவர்கள் போல் அளவற்ற கோபவெறியுடன் மூர்க்கத்தனமாகச் செயல்பட்டார்கள்.

சில நிமிஷங்கள் கழித்துக் களைத்துப் போய் அவர்கள் கிளம்பினார்கள். நெகடிவ்களும் புகைப்படங்களும் அடங்கிய உறை பாக்கெட்டில் பத்திரமாக இருக்கிறதா என்று தட்டிப் பார்த்துக் கொண்டான் மஹிபால். டேப் ரிகார்டரைக் கையில் எடுத்துக் கொண்டான் சந்திரபால். பணம் இருந்த தோல் பைகளுடன் படிகளில் இறங்கிச் சென்றார்கள்.


வேணுகோபால் அழுவதற்குக்கூடச் சக்தியற்றுக் கிடந்தான். (தொடரும்)

லேட்டாக வருவதைத் தடுக்க

சிப்பந்திகள் அடிக்கடி லேட்டாக வருவதைத் தடுக்க பிரிட்டிஷ் கம்பெனி ஒன்று புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளது. நேரப்படி அலுவலகம்வரும் சிப்பந்திகளின் மனைவிமார்களுக்கு 'போனஸ்' கொடுக்கப் போவதாக அறிவித்தது! இதற்கு நல்ல பலன் ஏற்பட்டுள்ளது. மனைவியர் போனஸ் பெறுவதற்காகத் தங்கள் கணவன்மாரை நேரத்துடன் வீட்டிலிருந்து துரத்துகிறார்கள் அலுவலகத்துக்கு!

ஆதாரம்: டிட்பிட்ஸ் - 'கரிகாலன்'


இன்ப வாழ்வு, இனிய குடும்பம், இந்நலமெலாம் விவசாயி முருகனுக்கு வாய்த்தது எப்படி?



ஏராள விளைச்சல் தாராளமாக அளித்திடும் ஓர்த்திங்டன்- சிம்ப்ஸன் பம்புசெட் அளித்த வளமையிது.

முருகன் வாழ்வில் ஈடில்லாத இன்பநாள், ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்புசெட் பொருத்திய அந்தநாள். குறைந்த செலவில் நிறைந்த பயன் தரும் முதலீடு, ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்புசெட். பெஸ்ட் அண்ட் கம்பெனியின் ஓர் ஒப்பற்ற தயாரிப்பு அது.

ஈடு இணையற்றது என்று புகழ் பெற்ற 'மானேபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்டிரிப்யூகல் பம்புகளையும் **பெஸ்ட்** அளிக்கிறது. ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படுபவை. விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப்பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது **பெஸ்ட் !**



பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.

(ஸ்தாபிதம்: 1879)
13/15 நார்த் பீச்ரோடு, சென்னை-1.

தமிழ் நாட்டில் கிளைகள்:
6/434, திருச்சிரோடு, கோயமுத்தூர்.
49-D, மதுரைரோடு, திருச்சி-1.


Focus-BC-193 Tam (a)

பக்கத்தில் உள்ள எண்ணில் என்ன விசேஷம் தெரியுமா?

அந்த எண் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆகிய எண்களால் சரியாக வகுபடும்!

[தகவல்: மோகன்





நாங்கள் திருடர்கள் அல்ல!

கல்கத்தாவில் காரில் வந்த இரண்டு பேர்களை வழிமறித்த சிலர் "65 ரூபாய் வேண்டும், கொடு" என்றார்கள். "எங்களிடம் இல்லை" என்று அவர்கள் சொல்லவும், "ஒருவர் இறங்கிக்கொண்டு இன்னொருவர் போய் எடுத்து வாருங்கள்" என்றனர். அதற்குக் காரில் இருந்த ஒருவர் "என் கைக்கடிகாரத்தைத் தருகிறேன்" என்று சொல்லவும், வழி மறித்தவர்களில் ஒருவர் கேட்டாராம் - "எங்களைத் திருடர்கள் என்று நினைத்தீர்களா?" என்று.

- 'ஸ்டேட்ஸ்மன்'


- 'பாலி'

"கடலிலே போய்ச் சேர்ந்த ஆற்றுத் தண்ணீர் திரும்பி வர்றதா இருந்தா கடல் தண்ணீராகத்தான் வருமே தவிர ஆற்றுத் தண்ணீரா வராது. அது போல, கடவுளோடே சேர்ந்துட்ட மஹான்கள் மறு பிறப்பு எடுத்து எக் காரணத்தினாலேயாவது திரும்பி வந்தால் கடவுளாத்தான் இருப்பாங்க.. அதுபோன்ற மஹான் தான் தியாகராஜர். அதனாலேதான் 'ப்ரம்ம' சப்தம் போட்டு 'பிரம்மம்'னு—'பரப்ரம்மம்'னு குறிப்பிட்டாங்க."

- தியாக ப்ரம்ம ஆராதனை விழாவில் கிருபானந்த வாரியார். - "தேஜு"

கடலும் கடவுளும்





விசாரணையின் போது ஒரு கைதி தனக்கு ஒரு வக்கீல் வைத்துக் கொள்ள அனுமதி கேட்டான்.

"உன்னை நகைக் கடையில் இரு போலீஸார் பிடித்தார்கள் கையும் களவுமாக. ஏற்கனவே 43 தடவை தண்டிக்கப் பட்டவன் நீ. இப்போது வக்கீல் வைத்தாலும் அவர் என்ன சொல்லப் போகிறார்?" என்று கேட்டார் நீதிபதி.

"அவர் என்ன சொல்லி என் சார்பில் வாதாடுவார் என்பதைக் கேட்கத்தானே நானும் துடியாய் இருக்கிறேன்?" என்றான் கைதி.

இங்லீஷ் டைஜஸ்ட் - 'ரேவதி'

அதிகம் படித்தால்....
அதிகம் தெரிந்து கொள்ளலாம்.

அதிகம் தெரிந்து கொண்டால்....
அதிகம் மறக்கலாம்.

அதிகம் மறந்தால்....
கொஞ்சமே தெரியும்.

கொஞ்சம் தெரிந்தால்....
எதற்காகப் படிக்க வேண்டும்?

- மோகன்





ஆதாரவல்லி பவுடர்



"உலர்ந்த சேறுக் களிமண், மக்னீசியம் கார்பனேட், துத்தநாகம் அல்லது மக்னீசியம் கலந்த சோப்புத் தூள், ஜிங்க் ஆக்ஸைடு, மாக்கல் மாவு இவைகளைப் பொடித்துத் தூளாக்கிச் சலித்து முகப் பவுடராக உபயோகித்தால்....."

"ஐயங்கோ !"

"என்ன ஐயங்கோ? நம்புங்கள்! இந்தப் பொருள்களோடு வாசனை சேர்த்துத்தான் 'ஃபேஸ் பவுடர்' தயாரிக்கிறார்கள்." ஆதாரம் உண்டு! - "தேஜு"

சிறைப் பறவை

கௌசிகன்



அன்று எனக்கு விடுதலை...

இருந்தும், ஊமைக் காயமாக உள்ளத்தில் ஏதோ இனம் புரியாத வேதனை. மகிழ்ச்சி இல்லாமலில்லை. ஆனால் அதை அமுக்கிக் கொண்டு ஒரு வலியும்கூட. சிறைச்சாலை அதிகாரி வாஞ்சையோடு என் கைகளைப் பற்றிக் குலுக்கி விடை கொடுத்தார்.

"சேகர், உனக்கு இருபத்தாறு வயதுதான் ஆகிறது. நீ வாழ வேண்டிய நாட்கள் நீண்டு கிடக்கின்றன. அதைப் பயனுள்ளதாக்கிக்கொள்." அந்தச் சிறை அதிகாரி தம் கடமைக்காக அந்த வார்த்தைகளைச் சொல்லவில்லை. அவர் என்னிடம் உண்மையிலேயே அன்பு கொண்டிருந்தார். நான் சீமான் வீட்டுப் பிள்ளை என்பது மட்டும் அதற்குக் காரணம் இல்லை.

அவருக்கு நான் பதிலேதும் கூறவில்லை. என் உடல்தான் அங்கு அவர் முன் நின்று கொண்டிருந்ததே தவிர, உள்ளம் அந்த நெடிதுயர்ந்த மதில் சுவருக்கு அப்பால் போய் அலைமோதிக் கொண்டிருந்தது.

மூன்று வருஷங்களுக்குப் பிறகு நான் வெளி உலகத்துக்குள் காலடி எடுத்து வைக்கப் போகிறேன். ஏதோ ஒரு விதப் பயம், அச்சம், கூச்சம் என்னைக் கவ்விக் கொள்ள ஆரம்பித்தது.

ரயில் வண்டியில் உட்கார்ந்திருப்பது எனக்கு ஏதோ புதுமையாகத் தோன்றியது. எல்லாமே, எல்லாருமே என்னை அநுதாபத்தோடு ஒளிந்திருந்து எட்டி எட்டிப் பார்ப்பது போன்றதொரு விநோதமான உணர்வு. பேச வேண்டும் என்ற எண்ணத்தையே இதயத்திலிருந்து துடைத்து விட்ட மாதிரி ஒரு 'விரக்தி. இருபத்து மூன்று வருஷங்களாக நான் பார்த்து வாழ்ந்த உலகம் அன்று எனக்கு ஏதோ புதுமையாக, புதிராக இருந்தது. வெறும் ஆர்வமற்றதோர் பக்கம் நெஞ்சைப் பாறையாக அழுத்திக் கொண்டிருந்தது.

ஸ்டேஷனுக்கு என்னைக் காண வரப்போகிறவர்கள் அப்பாவும் அம்மாவும்தான். அவர்களிடம் பேசவாவது நான் வார்த்தைகளைத் தயாரித்துக் கொண்டாக வேண்டும். அடுத்து என் எண்ணத் தடாகத்திலே நீந்தி வந்து நின்றவள் பாரு — பார்வதி! கடந்த மூன்று வருடங்களாக என் நினைவிலிருந்து விரட்ட முடியாதவள் பார்வதிதான். என்றாலும் அவளை எப்படி மறக்க முடியும்?

நான் வண்டியிலிருந்து இறங்க அவசரப்படவில்லை. நிதானமாகவே இறங்கினேன். என்னைத் தேடித் தவிக்கும் இரு ஜோடிக் கண்கள் என்னை எதிர் கொண்டன. என் தாயின் விழிக் குழி நீரால் நிறைந்து ஜ்வலித்துக்கொண்டிருந்தது. எந்த விநாடியும் அது கரையை உடைத்துக் கொண்டு அழுகையாகப் பெருக்கெடுத்து விடலாம். தகப்பனார் எதுவுமே பேசவில்லை. ஆண்மையின் ஆவேசத்தோடு என் வலக் கையைப் பற்றித் தம் கரங்களுக்குள் பொதித்துக் கொண்டு அழுத்தினார். எனக்கு வலித்தது. அந்த வலியில் அந்த அடிபட்ட

இதயத்தின் பாசத்தையும் பரிதவிப்பையும் அறிந்துகொள்ள முடிந்தது.

என் உள்ளத்தின் ஏதோ ஒரு மூலையில் ஏற்பட்டதொரு நெகிழ்ச்சி அவர்களின் பாசத்துக்கு என்னைப் பணியச் செய்து அழுகையில் கரைக்கவும் முயன்றது. ஆனால் என்னால் அப்படி இளக முடியவில்லை. ஏனோ என் உள்ளம் உறை பனியாகிக் கிடந்தது. அதை உருகச் செய்ய வேண்டும் என்ற அவர்களின் உள்ளக் குமுறலை என்னால் உணர முடிந்தது. அவர்களது அந்த ஆசை நியாயமானதும்கூடத்தான்.


எங்கள் வீட்டில் எந்த வித மாற்றமும் இல்லை. மூன்று வருஷங்களுக்கு முன் நான் அங்கிருந்து போனபோது எப்படி இருந்ததோ அப்படியேதான் இன்றும் இருந்தது. உள்ளே நுழைந்தவன் மாடிக்குப் போகப் படிகளில் ஏறினேன். என்னைத் தனியாகப் போகவிட்டு அப்பாவும் அம்மாவும் கீழேயே இருந்து விட்டார்கள். அப்படி அவர்கள் என்னைத் தனியாக விட்டது எனக்கு ரொம்ப ஆறுதலாக இருந்தது. மாடியில் என் அறைக்குள் சென்றேன். அத்தனை நாட்களுக்குப் பிறகும் என் அறைக்குள் எவ்வித மாற்றமும் இல்லை.

என் டிராயரைத் திறந்தேன். மேலாக இருந்தது பாருவின் படம். மகிழ்ச்சி கொப்பளிக்கச் சிரித்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் ஒளி சிந்திக் கொண்டிருந்தது. அது பார்வதியின் அழகான படம். எனக்குப் பிடித்தமான படம். இந்த மூன்று வருஷங்களாக இந்தத் தோற்றத்திலேயேதான் அவள் என் நினைவுகளை ஆட்சி புரிந்து கொண்டிருந்தாள். அந்தக் கூந்தல் இப்போது இன்னும் நீண்டு அடர்த்தியாக வளர்ந்திருக்கும். பாரு அதை முன் போலப் பின்னிக் கொண்டிருப்பாளோ அல்லது வனப்பும் வாளிப்பும் வெளிப்படக் கொண்டை போட்டுக் கொண்டிருப்பாளோ? நான் அவளிடமிருந்து வெகு தூரத்திலிருந்தபோது அவள் என் நெஞ்சத்தில் நெருக்கமாக இருந்தாள். இப்போது நெருங்கி வந்திருக்கிறேன். ஆனால் அவள் எங்கோ எட்டத்தில் இருப்பதாக என்னுள் ஒரு பிரமை உறுத்தலாயிற்று. அவள் என்னைச் சந்தித்தால் முன்போலப் பேசுவாளா? அந்த அன்பும் ஆர்வமும் வழியும் கண்களோடு என்னைக் கண்டதும் தவிப்புடன் ஓடி வருவாளா?

அந்த நாட்கள்....?

அவளும் நானும் சந்தித்துச் சல்லாபிக்காத நாட்களே கிடையாது. என்னை விட மூன்று வயதுதான் சிறியவள் பாரு. அடிக்கடி சந்தித்துக் கொள்ளுவோம். காதலிப்பது என்றால் அதுதானோ? கல்யாணத்தைப் பற்றி நாங்கள் தீவிரமாகப் பேசிக் கொண்டதில்லை. உள் மனத்தின் ஓரத்தில் அப்படியோர் எண்ணம் இருந்திருக்கலாம். ஆஹா, எங்களை மறந்து மயங்கிக் கிடந்த அந்த நாட்கள்...?

பிறகு பேரிடியாக — சாபக்கேடாக வந்தது அந்த இரவு. சிரிப்பும் கேளிக்கையும், கண்ணாடித் தம்ளர்களில் தகதகத்த வெப்பத் திரவம்... நான் காரை ஓட்டிக் கொண்டு வந்தது. திடீரென்று ஒரு குலுக்கல்.... நடைபாதையிலிருந்து 'வீல்' என்று ஓர் அலறல்! 'குழந்தைதான் காரின் முன் ஓடி வந்தது' என்று வாதாடிய என் வக்கீலின் பேச்சு தோல்வி கண்டது.... அதன்பின் — உலகமே என் கண் முன் சுழன்று பூதாகாரமாக என்னை அழுத்தி மூச்சுத் திணற வைத்த அந்தச் சம்பவத்துக்குப் பின் — மறக்க முடியாத மூன்று வருஷங்கள்... அது இப்போது இன்று ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. பார்வதி ஆரம்பத்தில் எனக்குச் சில கடிதங்கள் எழுதினாள் — நான் சிறையில் இருக்கும்போது. ஆனால் அப்போது அவைகளுக்குப் பதில் எழுதும் மனோநிலையில் நான் இல்லை. இடிந்து போயிருந்த என்



னும் அவனுக்கு எப்படி எழுத முடியும்? அதன் பிறகு அவள் எனக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டாள். அதன் பிறகுதான் நான் அவளைப் பற்றி அதிகமாக நினைக்கலானேன். ஆனால் நான் அவளுக்குக் கடிதம் எழுதவில்லை. நாட்கள், வாரங்கள், மாதங்கள் — அவள் நினைவு ஏதோ ஒரு வெறியாக என்னுள் நிறைந்து நெருப்பாக என்னைத் தகிக்கலாயிற்று. அவளை நான் மறுபடியும் சந்தித்த பிறகுதான் அந்தத் தகிப்பின் தன்மையை என்னால் புரிந்து கொள்ள முடியும். பாருவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் என்னுள் அலை அலையாக எழும்பிக் கொண்டிருந்தது. இந்த என் நிலையிலேயே அவளும் இருப்பாளா?

கூடத்தில் உள்ள சோபாவின் விளிம்பில் பொறுமை இழந்து போய் உட்கார்ந்திருந்தாள் என் தாயார். அப்பாவோ ஜன்னலுக்கருகே நின்றபடி வெளியே எங்கோ தொலை தூரத்தில் பார்வையை வீசிவிட்டு வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவ்விருவரும் எனக்காக, என் வருகைக்காகத்தான் அப்படிக் காத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். நான் மாடியிலிருந்து இறங்கி வந்ததும் அம்மா ஆவலோடு என்னை நோக்கினாள்.

என் மௌனம் என் பெற்றோரின் முகங்களை மங்கச் செய்து தலை குனிய வைத்து விட்டது. அவர்களின் ஏமாற்றத்தை நான் புரிந்து கொண்டேன். அவர்கள் என்னைப் பேச வைக்க — கலகலப்பாக்க — சகஜ நிலைக்குத் திருப்பத் தவிக்கிறார்கள்.

''அம்மா, நான் கிளப் வரை போய் வருகிறேன்'' என்றேன். அப்பா திடுக்கிட்டுத் திரும்பினார். அம்மாவின் கண்கள் குளமாகிப் பரிதாபமாகப் பளபளத்தன. 'கிளப்' என்றதும் அவர்கள் சிந்தனையிலே எத்தனைய காட்சிகள் வந்து நிற்கும் என்று எனக்குத் தெரியும். அப்படியிருந்தும் நான் ஏன் அதைச் சொன்னேன்?

அந்தக் கிளப்பில் அங்கத்தினராகச் சேருவதற்கே அப்பா அந்த நாளில் எனக்கு ஆட்சேபனை தெரிவித்தார். பணக்கார வீட்டுப் பிள்ளைகளின் உல்லாசக் கேளிக்கைகளுக்குத் தாராளமாக வழி வகுத்துக் கொடுத்த அந்தக் கிளப்பில், மதுவருந்த அரசாங்க அனுமதி பெற்றுள்ள பலர் இருந்தனர். 'அந்த' வசதியைப் பெர்மிட் இல்லாதவர்களும் தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். நானும் அதன் வயப்பட்டிருந்தேன் என்பதே என் தந்தையின் வேதனைக்குக் காரணம். அவர் அது பற்றி என்னை ஆரம்பத்தில் கேட்டபோது நான் மறுத்தேன். அவர்களுக்கு நான் ஒரே பிள்ளை. செல்லப் பிள்ளையுங்கூட. ஆகவே, கண்டிப்பும் கட்டுப்பாடும் என் மீது திணிக்கப்படவில்லை. நான் மறுத்ததைப் பொய்யாக்கியது என் அன்றையச் செயல். சட்டம் எனக்குத் தண்டனையும் விதித்தது.

அங்கு நான் மறுபடியும் போக விரும்புகிறேன் என்பது அவர்களுக்கு அதிர்ச்சியளிப்பதில் நியாயமிருக்கிறது.

''அப்படிப் பார்க்காதீர்கள் அப்பா. ஏதோ ஒரு பலவீனமான சூழலில் எதிர்பாராத ஒன்று நிகழ்ந்து விட்டதற்காக அதையே நினைத்துக் கொண்டிருப்பதா?'' என் பேச்சு எனக்கே விசித்திரமாகப் பட்டது. அவர்கள் பேச வேண்டிய வார்த்தைகள் இவை. எனக்கு அவர்கள் சொல்ல வேண்டியதை நான் அவர்களுக்குச் சொல்லும் அந்த விசித்திரமான சூழல் எனக்கே வியப்பாக இருக்கிறது. பேச முடியாத அவர்கள் நிலையை மாற்ற நினைத்தவன், ''நீங்கள் விரும்பவில்லையானால் நான் கிளப்புக்குப் போகவில்லை'' என்றேன், ஜன்னலருகே நின்றபடி வெளியே பார்த்துக் கொண்டு. விநாடிக்கு விநாடி கனத்துக் கொண்டு வரும் அந்தச் சூழ்நிலையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எப்படியாவது அதை இலேசாக்கி அதிலிருந்து விடுபட நினைத்தேன்.

'பார்வதிக்கு டெலிபோன் செய்து என் வருகையைத் தெரிவித்தால் என்ன?' என்று எண்ணியதை உடனே செயல்படுத்தத் தயாரானேன்.

நான் டெலிபோனில் டயல் செய்த மறு விநாடியே பார்வதியின் குரல் மறுபக்கத்தில் ஒலித்தது.

''ஹலோ!'' பாருவின் குரல்தான். எத்தனை இனிமையாக இருக்கிறது.

நான் என் பெயரைக் கூறினேன். கொஞ்ச நேரம் பதில் ஏதுமில்லை. நான் மறுபடியும், ''பார்வதி! நான்தான் சேகர் பேசுகிறேன். மூன்று வருஷங்களுக்குள் என்னை மறந்துவிட்டாயா?'' என்றேன்.

''மறந்துவிடவில்லை. ஆனால் நீங்கள் என்னை நினைவு வைத்துக் கொண்டு அழைப்பீர்கள் என்றுதான் எதிர்பார்க்கவில்லை.''

''மறந்துவிடக் கூடியவளில்லையே நீ!'' அதற்கு அவளிடமிருந்து பதில் இல்லை. மேலே என்ன பேசுவது என்று எனக்கும் தெரியவில்லை. டெலிபோனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் பாருவை என்னால் கற்பனை செய்து காண முடிந்தது. என்னிடமிருந்து எப்படி விடுபடலாம் என்று அவள் சிந்தித்துக் கொண்டிருக்கலாம்.

''பார்வதி, இன்று மாலை நான் உன்னைக் காண வரட்டுமா? நீ அதை விரும்புவாயா? உனக்கு வேறு ஏதாவது வேலை இருக்கிறதா?''

சிறிது நேரத் தாமதத்துக்குப் பிறகு பாரு சொன்னாள் — ''வாருங்கள். மாலை உங்களை எதிர்பார்க்கிறேன்.....''

நான் வருவதைத் தூரத்திலேயே பார்த்திருக்க வேண்டும். பார்வதி என்னை வரவேற்க வாயிற்படியிலேயே நின்று கொண்டிருந்தாள். படியேறி அவள் அருகில் சென்று நின்ற என்னால்தான் ஏதும் பேச முடியவில்லை. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தோம். அவளிடம் என்னென்ன பேச வேண்டும் என்று உள்ளத்தினுள் ஒத்திகை பார்த்துக் கொண்டு வந்ததெல்லாம் அவளைக் கண்டதும் உதட்டடியிலேயே மடிந்து விட்டன. என் கற்பனையில் எப்படி வாடாமலிருந்தாளோ, அதே வடிவழகுடன் காட்சி அளித்தாள் பாரு — பூத்த புது மலர் போல். நீண்ட கருங்கூந்தல், உள்ளத்தைத் திருடி எடுக்கும் ஒய்யாரச் சிரிப்பு. வளைந்த புருவங்கள், நிமிர்ந்த உடல்.

பாருவின் அம்மா முறுவலித்து வரவேற்புக்குப் பிறகு முறையான குசலம் விசாரித்து

விட்டு எங்களைத் தனியே விட்டு விட்டுப் போய் விட்டாள். பாருவின் அப்பா ஊரில் இல்லை. சிறிது நேரம் பார்வதியும் நானும் அவள் அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். தன் கடிதங்களுக்கு நான் ஏன் பதில் போடவில்லை என்று பாரு என்னைக் கேட்கவில்லை. என்னைப் பற்றி அதிகம் எதுவுமே கேட்கவில்லை அவள்.

ஏதாவதொரு திரைப்படத்துக்குப் போகலாம் என்றாள் பார்வதி. நானும் சம்மதித்தேன். அவள் உடை மாற்றிக் கொண்டு வரும்வரை நான் கூடத்தில் காத்திருந்தேன். தயாராக வந்த பார்வதி போர்டிகோவில் நிறுத்தி இருந்த ஃபியட் வண்டியினுள் தாவி ஏறி டிரைவர் ஆசனத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். மறுபக்கத்துக் கதவை எனக்காகத் திறந்து விட்டாள். அவள் செய்கை என்னை என்னவோ செய்து விட்டது. இதை அவள் அவசரமாகச் செய்ததாகவும் எனக்குப் பட்டது. அது அவள் வண்டிதானென்றாலும்கூட அவளும் நானும் போகும் போது அவர்கள் வீட்டு வண்டியை நானே ஓட்டிக் கொண்டு போவதுதான் வழக்கம். என் அருகில் பாரு உட்கார்ந்து வருவாள். இது மூன்று வருஷங்களுக்கு முந்தைய நிலைமை.

இன்று காரை ஓட்டிச் செல்ல நான் விரும்பவில்லை. காரோட்டும் தகுதி பறிக்கப்பட்டிருந்த இந்நிலையில் நான் காரை ஓட்டிச் சென்று சட்டத்தின் பார்வையில் அது பதிவுமானால் அதன் விளைவுகள் என்னாகும் என்பதை என் உள் மனம் உணர்த்திக் கொண்டிருந்தது. ஆனால் பார்வதியின் அந்த வேகம், அடிபட்ட இடத்தில் இடித்துக் கொண்டது போன்றதொரு வலியை உண்டாக்கிற்று.

நான் என் வேதனையை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. நாங்கள் தியேட்டருக்குள் நுழைந்த போது செய்திச் சுருள் ஓடிக்கொண்டிருந்தது. கொட்டகைக் காவலாளி காட்டிய பாட்டரி விளக்கின் வழியே போய் உரிய ஆசனங்களில் அமர்ந்து கொண்டோம். செய்திப் படம் முடிந்து பிரதான படம் ஆரம்பமாகியது. பார்வதி படத்தில் லயித்திருந்தாள். நான் அவளிடம் லயித்திருந்தேன். எனக்குப் படத்தில் ஈடுபாடு இல்லை. அந்த மங்கிய ஒளியில் அருகில் உள்ள பாருவை, நிழலுருவாகத் தெரியும் அவளது பக்கத் தோற்றத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தக் கருங்குழலை அடுத்துப் பிறை நுதல், பிஞ்சு மூக்கு, மொட்டிதழ், பட்டுக் கன்னம், சிமிழ் போன்ற முகவாய் — ஒளிக் கோடாக அவள் உருவம் என் உள்ளத்தில் கதகதப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது. உரிமையோடு அவள் தோள் மீது கை போட்டு அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஓர் அசட்டு ஆசை. அதைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன். என் தலையை மட்டுமாவது சரித்து அந்தப் பட்டுக் கன்னத்தோடு என் கன்னத்தைப் பதித்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு தாபம்.

[illegible] இந்த ஆசைகளுக்கு அணை போட்டுத் தடுத்தாலும் என்னை அறியாமல் என் விரல் அவளது கதுப்புக் கன்னத்தைத் தொட்டு விட்டது. அவள் திடுக்கிடவில்லை. திகைப்படையவில்லை. மௌனமாக என்னைத் திரும்பிப் பார்த்தாள். என் கண்களினுள் தன் பார்வையைச் செலுத்தினாள். என் எண்ணத்தை அவள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அந்த மகிழ்ச்சியில் நான் இலேசாகிப் போனேன். அவளும் என்னையே, என் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். அது காதல் பார்வையல்ல. நம்பிக்கை இழந்ததோர் உள்ளத்திடம் காட்டும் பரிவு தான் அந்தப் பார்வை. சஞ்சலமுற்றுத் தவிக்கும் ஒரு மனிதனை எப்படிக் கையாள வேண்டுமென்று அறிந்த அழகி என் பாரு.

அவளோடு எவ்வளவோ பேச வேண்டும். உள்ளங்களை உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்று துடிப்போடு உள்ள என்னால் அந்தச் சலனப் படக் கொட்டகையினுள் சலனமின்றி உட்கார்ந்திருக்க முடியவில்லை. என் கருத்துக்குப் பாருவும் மறுப்புக் கூறவில்லை. ஆகவே இருவரும் பாதிப் படத்திலேயே எழுந்து வெளியே வந்து விட்டோம். பாருவிடம் தொடர்பு கொள்ளாமல் ஒதுங்கி வாழ்ந்தது எத்தனை பெரிய தவறு என்பதை இப்போது உணரத் தலைப்பட்டேன். திடீரென்று தோன்றிய விதியின் கரங்கள் என்னைத் தன் அசுரப் பிடிக்குள் சிக்க வைத்து மூன்று ஆண்டுகளுக்கு எல்லாவற்றிடமிருந்தும் என்னைப் பிரித்து வைத்திருந்ததே அந்தச் சாலை விபத்து; அதற்கு முன்னரேயே நான் பாருவுடன் இன்னும் நெருக்கமாகப் பழகி இருக்க வேண்டும், காதலித்திருக்க வேண்டும். அப்போதெல்லாம் நான் பாருவைப் பிரமாதமாக நினைக்கவில்லை. இன்று — இப்போதோ எனக்கு அவள் அன்பு தேவைப்படுகிறது; அவள் என்னைக் காதலிக்க வேண்டும் என்று துடிக்கிறது நெஞ்சம்.

நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம். காரைப் பாதையோரத்தில் நிறுத்திவிட்டுக் கால்கள் மணலில் புதைய நடந்து சென்று ஏகாந்தத்தில் அமர்ந்து கொண்டோம். என் நம்பிக்கையைப் போல வளர்ந்து கொண்டு வரும் பாதிச் சந்திரன் வான வீதியிலே தாரகைகளோடு கண் சிமிட்டிச் சரசமாடிக் கொண்டிருந்தான்.

''அன்று அந்த வேதனைக்குரிய விஷயம் நடந்த அன்றிரவு எல்லாரும் நினைத்திருந்த



ஸென்ஸெஸ் எடுப்பவர்: ''உங்களுடைய வீட்டில் இருப்பவர்கள் பெயர்களைச் சொல்றீங்களா.''

''ஓ! தாராளமாக எழுதிக் கொள்ளுங்கள். லதா, மீனா, ராம், சீதா, ரமேஷ்.''

''உங்களுடைய குழந்தைகளின் பெயர்களா?''

''இல்லை; நாய்களுடைய பெயர்கள்.''

''நாய்களா? அதை யார் கேட்டது? உங்களுடைய குழந்தைகளின் பெயரைச் சொல்லுங்கள்.''

''டாமி, ரோஸி, ஜில்லி, ஜிம்மி ஜிக்கி!''

தைப் போல் நான் அப்படியொன்றும் குடித்திருக்கவில்லை'' என்றேன் நான்.

பார்வதி கூறினாள்: ''எனக்குத் தெரியும் சேகர். நாங்கள் யாருமே உங்களைச் சந்தேகிக்கவில்லை. ஏதோ ஒரு கெட்ட கனவாக நடந்ததை மறந்து விடுங்கள். மறுபடியும் அதைப் பற்றி நினைப்பானேன்?...'' நீங்கள் மனதார விரும்பும் ஒரு பெண்ணிடமிருந்து இதைவிட அதிகமாக என்ன எதிர்பார்க்க முடியும்? சோர்ந்து கிடந்த உள்ளத்துக்கு ஒரு புதிய தெம்பு வந்தது போல் இருந்தது பாரு காட்டிய பரிவு. வெகு நேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அந்த மூன்று வருடச் சிறை வாழ்க்கையைப் பற்றி.... எதைப் பற்றியெல்லாம் நான் பேசவே கூடாது என்று நிச்சயித்திருந்தேனோ அதைப் பற்றியெல்லாம் பேசினேன். பிறர் என்னிடம் எந்தக் கேள்விகளைக் கேட்கக் கூடாது என்று எண்ணினேனோ அந்தக் கேள்விகளுக்கெல்லாம் பாருவுக்குப் பதில் அளித்தேன். இனி என்னிடம் கேட்கப்படவோ, நான் பதில் சொல்லவோ ஏதுமில்லை என்ற நிலை வரையில் பேசித் தீர்த்தேன். அப்படியொரு வெறி. பேச வேண்டும், சொல்ல வேண்டும் என்று ஒரு தவிப்பு.

நேரம் போனதே தெரியவில்லை. அவள் நினைவுபடுத்தியபிறகுதான் எழுந்திருந்தோம். நட்சத்திரங்களின் சல்லாபத்திலே சலிப்படைந்த சந்திரனும் எங்கோ ஒளிந்து கொண்டு விட்டான். ரத்தினக் கற்களாக மினுக்கிக் கொண்டிருக்கும் விண்மீன்களையும், உயர்ந்த கட்டடங்கள் ஓடி ஒதுங்கும் பாங்கையும் ரசித்தபடியே பாருவின் அருகே அவளது இடது பக்கத்தில் அமர்ந்திருந்தேன். 'டிராபிக் சிக்னல்'லுக்காகக் கார் நின்ற போது பாரு என்னைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள். அந்தச் சிரிப்பின் கவர்ச்சிக்கு, ஆழத்துக்கு உவமையாக எதையுமே கூற முடியாது.

நாங்கள் வீட்டை அடைந்த போது எல்லாரும் உறக்கத்தில் இருந்தார்கள் என்பதை வீட்டின் அமைதி கூறிற்று. காவல்காரன் கேட்டைத் திறந்து போர்ட்டிகோ விளக்கைப் போட்டுவிட்டு, விட்ட தூக்கத்தைத் தொடரப் போய்விட்டான். பாரு அவள் பெற்றோர்களுக்கு ஒரே செல்லப் பெண். அவள் தகப்பனார் ரொம்ப முற்போக்குக்காரர். பாருவுக்குச் சகல வசதிகளும் சுதந்திரமும் வழங்கியிருந்தார். தம் அருமைப் பெண்ணிடம் அத்தனை பாசமும் நம்பிக்கையும் அவருக்கு. தாயாருக்கும் தன் பெண்ணிடம் தனி மதிப்பு.

வராந்தாவின் வலதுபுறத்திலேதான் இருந்தது பாருவின் அறை. தலைவாசல் கதவைத் திறக்காமலேயே, உள்ளே தூங்குபவர்களுக்குத் தொல்லை தராமலேயே பாரு தன் அறை வழியே உள்ளே போகலாம். அப்படித்தான் அவள் உள்ளே நுழைந்தாள். நானும் தொடர்ந்தேன் — அவளிடம் விடைபெற. பாரு தன் கைப் பையை அறையின் நடுவிலிருந்த டீப்பாயின் மேல் வைத்தாள். நான் மௌனமாக நின்றேன், அவளையே பார்த்துக் கொண்டு. அவளும் என்னையே பார்த்துக் கொண்டு சில விநாடிகள் நின்றாள். அவள் இடது கைவிரல்கள் கழுத்திலிருந்த முத்துமாலையுடன் விளையாடிக்கொண்டிருந்தன. ஜப்பான் நாட்டுச் செயற்கை வெண் முத்துக்கள் பகட்டாக இருந்தன. பிறகு மெள்ள என் அருகே நெருங்கி வந்தவள் நான் சற்றும் எதிர்பாராத வகையில் என் மார்பிலே தன் பட்டுக் கன்னம் பதியச் சாய்ந்தாள். அவள் கேசத்தின் 'ஷாம்பூ' வாசனையை என்னால் நுகர முடிந்தது. ஒருசில விநாடிகள்தான். அந்தப் போதில் இந்த உலகத்தையே — என்னையே மறந்துவிட்டேன். என் அணைப்பிலிருந்து பாரு விலகியபோது அந்த முத்துமாலை என் சட்டைப் பொத்தானில் மாட்டிக் கொண்டிருந்தது போலும். அது அறுந்து அந்த வெண் முத்துக்கள் அறை விரிப்பின் மீது சிதறியோடின. அந்த முத்துக்களுக்கு நிகரான தன் வெண் பற்கள் ஒளி சிந்தக் கடகடவென்று சிரித்துக் கொண்டே ஓடும் முத்துக்களை ஒன்றுசேர்க்கத் தரையில் குனிந்தாள் பாரு.

''அடடா! நல்ல மாலை அறுந்துவிட்டதே'' என்று கூறியபடி நானும் அவளுக்கு உதவ முன் வந்தேன். பாருவின் சிரிப்பும் என் பேச்சும் அந்த வீட்டின் மௌனத்தைக் குலைத்திருக்க வேண்டும். அடுத்த அறை என்றுதான் நினைக்கிறேன். போர்வைக்குள் புரண்டு கொடுக்கும் மொற மொற ஒலியைத் தொடர்ந்து ஓர் இளம் பெண்ணின் குரல் கேட்டது.

''பாரு... நீயா?...''

''ஆமாம், லல்லி நான்தான்! உன் தூக்கத்தை 'டிஸ்டர்ப்' செய்ததுக்கு மன்னித்துக் கொள்'' என்று கூறியவள், மெதுவாக என் காதருகே, ''லல்லி என் அத்தை பெண். ஊரிலிருந்து வந்திருக்கிறாள்'' என்று கிசுகிசுத்தாள்.

உள்ளே கட்டிலில் சௌகரியமானதொரு நிலையில் லல்லி புரண்டு படுத்துக்கொள்வதனால் ஏற்படும் ஓசையைத் தொடர்ந்து அவள் குரல் கேட்டது. ''என் தூக்கம் கெட்டது இருக்கட்டும். அந்தச் சிறைப் பறவையோடு இன்று உன் மாலைப் பொழுது எப்படிக் கழிந்தது?''

பொறுக்கி எடுத்த வெண் முத்துக்கள் உள்ளங்கையில் உடைந்து நொறுங்கிவிடும்போல என் விரல்கள் அதை இறுக்கின. மௌனமாக எழுந்து நின்றேன். என் உடலின் உள்ளே ஒரு பூகம்பம். ஆனால் நான் அசையாமல் சிலையாக உறைந்து போய் நின்று கொண்டிருந்தேன். திடீரென்று அந்த அறையில் அதிகமானதோர் அமைதி, இறுக்கம், கனம் கப்பிக் கொண்டது. வீதியிலே சற்றைக்கொரு தடவை கேட்டுக் கொண்டிருந்த போக்குவரத்து வாகனங்களின் ஒலிகூட ஓடி ஒளிந்து கொண்டு விட்டது.

அன்று மாலை இந்த அறையில் என்ன நடந்திருக்கும்? அந்தக் காட்சி என் மனக் கண் முன்னே மலர்ந்தது. இரண்டு பருவப் பெண்கள் பேசிச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் ஒருத்தி மற்றவளைக் கேலியும் கிண்டலுமாகப் பரிகசிக்கிறாள். அன்று தான் சிறையிலிருந்து வெளிவந்த தன் காதலனுடன் அவள் மாலையில் வெளியே போகப் போவதைக் குறித்துத்தான் அந்தக் கிறு கிறுப்பு. பாருவிடம் நான் என் சிறை அநுப



தோற்றம் : 11-10-1905   மறைவு : 1-3-1970

அன்னையுள்ளம் கொண்டு எங்கள் அனைவரிடமும் கருணை காட்டி
எங்களுக்கு இடுக்கண் வந்த காலத்து உதவியளித்து வந்த

செட்டிநாடு ராணி

ஸ்ரீமதி மெய்யம்மை ஆச்சி அவர்களுக்கு

மலர் சாத்தி அஞ்சலி செலுத்துகிறோம்

அன்னாரின் நினைவு நம் நெஞ்சை விட்டகலாமல்
என்றென்றும் நிலைத்திருக்கும்

அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுக !

பின்கண்ட நிறுவனங்களின் ஊழியர்களும்
நிர்வாகங்களும் வெளியிட்டது


ராணி மெய்யம்மை உயர்நிலைப்பள்ளி, காந்தி நகர், சென்னை
ராணி மெய்யம்மை பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை
செட்டிநாடு கார்ப்பொரேஷன் பிரைவேட் லிமிடெட்
மதுரை சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் பிரைவேட் லிமிடெட்
சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் பிரைவேட் லிமிடெட்
லோட்டஸ் மில்ஸ் லிமிடெட்
சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (திருவாங்கூர்) பிரைவேட் லிமிடெட்
ஸ்ரீ கருணாம்பிகை ஜின்னிங் பேக்டரி & வேஸ்ட் ஸ்பின்னிங் மில்ஸ்

போரி குரூப் எஸ்டேட்ஸ்   மேபிளவர் எஸ்டேட்
தொட்லகுண்ட எஸ்டேட்   சேஷகிரி எஸ்டேட்
குண்ட்ஹல்லி எஸ்டேட்   கொடகிபைல் எஸ்டேட்

CHARI

Bensons/2868/JTAM

உங்களுக்கு சுவையுள்ள, கெட்டியான, ஸ்ட்ராங்கான மற்றும் உடனே தயாராகும் காபி வேண்டுமோ...



இதோ **ப்ரூ** இருக்கிறது



கெட்டியான,
ஸ்ட்ராங்கான
காபி-சிக்கரி கலவைதான் ப்ரூ.
உடனடியாக தயாராகிவிடுகிறது!
புத்துணர்ச்சியளிக்கும்
மிகச் சிறந்த பானம்.

ப்ரூக் பாண்ட்
ப்ரூ இன்ஸ்டன்ட்
காபி சிக்கரி ப்ளெண்ட்

மாதம் ஒரு சிறுகதைச் சிறப்பிதழ்

ஒவ்வொரு மாதமும் கடைசி வாரக் கல்கி 'சிறுகதைச் சிறப்பிதழா'கத் திகழும். பாரத நாட்டில் பல்வேறு மொழிகளிலும் எழுதும் பிரபல சிறுகதைச் சிற்பிகள் இச் சிறப்பிதழ்களில் தங்கள் படைப்புக்களை வழங்குகிறார்கள்.

முதல் சிறுகதைச் சிறப்பிதழ்

ஏப்ரல் 26

வங்களை எப்படி விஸ்தாரமாக வருணித்துக் கொண்டிருந்தேன். மிக உத்ஸாகமாக, நம்பிக்கையோடு ஏறிய மலையுச்சியிலிருந்து இப்போது தலைகுப்புற விழுந்து கொண்டிருந்தேன் நான்.

பாதி திறந்த வாயோடு பயம் நிறைந்த பார்வையோடு, பாரு, என்னைத் தன் நடுங்கும் கரங்களால் தொட்டாள். அவள் குரலும் உடைந்து நடுங்கிக் கொண்டிருந்தது. ''அப்படிப் பார்க்காதீர்கள் சேகர். நீங்கள் இந்த அறையில் என்னோடிருப்பது அவருக்குத் தெரியாது. இன்று மாலை அவரோடு சினிமா போக இருந்தேன். அதை முறித்துக் கொண்டு உங்களுடன் வந்ததில்... நீங்கள் நினைக்கிறபடி அப்படி யெல்லாமில்லை. அவர் ஓர் அசடு.'' இதை எனக்கு மட்டுமே கேட்கும்படி மெதுவாகத்தான் கூறினாள் பாரு. உரத்துப் பேசும் நிலையில் அவள் இல்லை.

நான் எதுவும் பேசவில்லை. பேச முடியவில்லை. கையின் இறுக்கத்தில் திணறிக் கொண்டிருந்த முத்துக்களைக் குனிந்து மௌனமாக டீப்பாயின் மீது வைத்தேன். பாரு தவிப்போடு, ''இருங்கள், இதோ வந்து விடுகிறேன்'' என்று கூறி உள்ளே ஓடினாள். 'எங்கே போகிறாள்? கணவனைச் சண்டை பிடிக்கவா?'

இனி எதைப் பற்றியும் சிந்திக்கத் தெம்பில்லை எனக்கு. தூக்கத்தில் நடப்பவனைப் போல நகர்ந்தேன். பாருவின் கைப்பை டீப்பாயின் மீது கிடந்தது. கார் சாவி அதனுள் இருக்கும். ஏதோ ஒரு வேகம். அந்தச் சாவியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன். காரில் ஏறி உட்கார்ந்தேன். ஸ்டார்ட் செய்தேன். காவல்காரன் கதவைத் திறந்து விட்டான். அவனுக்கு என் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருக்கும் எரிமலை பற்றித் தெரியாது. மூன்று வருஷங்களுக்குப் பிறகு முதல் தடவையாகக் காரை ஓட்டினேன். லாகவமாக வளைத்துத் திருப்பி நெடுஞ் சாலைக்கு வந்தேன். கால் ஆக்ஸிலேட்டரை அழுத்தியது. வண்டியின் வேகத்தைக் குறிக்கும் முள் 'ஜிவ்'வென்று ஏறிக் கொண்டிருந்தது. ஐம்பது... ஐம்பத்தைந்து....அறுபது.. அறுபத்....

பாருவைத் தேடி நான் ஓடியது, அன்று மாலை நிகழ்ச்சிகள், சிறைப் பறவையான என்னோடு பாரு கழித்த அந்த மாலைப் போது, எல்லாம் என் மூளைக்குள் அவுட்டாக வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தன. வெறுப்பும் வேதனையும் வயிற்றினுள் பந்தாகச் சுருண்டன. மூச்சுவிட முடியாததொரு திணறல். பாருவைப் பற்றிய தவறான கற்பனையில் எப்படிக் கரைந்து போனேன்?

மற்றொருவருக்குச் சொந்தமான காரை, காரோட்டும் உரிமை பறிக்கப்பட்ட நான் இந்த நிலையில் இவ்வளவு வேகமாக ஓட்டிக் கொண்டு போகிறேனே, ஏன்? குற்றமென்று தெரிந்தே இதைச் செய்வதன் நோக்கம்? வேண்டுமென்றேதான். மறுபடியும் சங்கடத்தில் மாட்டிக் கொள்ள வேண்டும். போலீஸ் என்னைக் கைது செய்ய வேண்டும். மறுபடியும் நான்கு வருஷங்கள் நான் சிறைப் பறவையாக முடங்கிவிட வேண்டும். இந்தச் சமூகத்தின்மீது அப்படி ஒரு வெறுப்பும் துவேஷமும் என்னை வந்து மூடிக் கொண்டுவிட்டன. இந்தச் சமூகத்து மக்களில் ஒருவனாக மறுபடி வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசையே கருகிப் போய்விட்டதா? இப்படிக் கண்மூடித்தனமாக நான் ஏன் காரை ஓட்டிக் கொண்டு போகிறேன்?

என்னை நானே குத்திக் குதறிக் கொண்ட இந்தக் கேள்விக்கு எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை. மூளை அப்படி மரத்துப் போயிருந்தது. திடீரென்று என் பின்னால் ஹுங்காரமிட்டு எழுந்த போலீஸ் ஜீப்பின் அந்த சைரன் ஒலியைக் கேட்ட பிறகுதான் உறை நிலையை உதறிக் கொண்டு நான் விடுபட்டேன். என் சிந்தனை, உணர்வு எல்லாமே அப்போதுதான் செயல்படலாயிற்று. என்னை நானே வரைந்து கொண்டதொரு சித்திரம்

என் கண் முன்னே வந்து நின்றது. தாழ்வு மனப்பான்மையில் தவிக்கப்பட்டு நிற்கும் என் உருவத்தைக் காண எனக்கே பிடிக்கவில்லை. வாழ்க்கையின் சவாலை ஏற்கவோ, அதன் பிரச்னைகளை நேருக்கு நேராகச் சந்திக்கவோ துணிவில்லாத ஒரு கோழை நான். உண்மையை ஏற்கும் மனோபலம் எனக்கில்லை. பொறுப்பான எந்த முடிவையும் எடுக்க நான் பயப்படுகிறேன். என்னைப் பற்றிய இந்த உண்மைகளெல்லாம் ஒவ்வொன்றாக விசுவரூபம் கொண்டு — நான் பலவீனமானவன், கோழை என்று ஆர்ப்பரிக்கலாயின. லில்லி தூக்கக் கலக்கத்தில் தன் அறையிலிருந்து தன் தோழி பாருவிடம் என்னைப் பற்றிச் சாதாரணமாகக் குறிப்பிட்ட அந்த வார்த்தைகளைக் கேட்டு நான் அதிர்ந்து விட்டதாக எண்ணியதே ஒரு கற்பனை. வாழ்க்கையில் நான் காட்டிய வெறுப்புக்கும் அசிரத்தைக்கும் அது மட்டும் ஒரு பெரிய காரணமாகிவிடாது. பாரு என்னிடம் எவ்வளவோ பெருந்தன்மையோடு நடந்து கொண்டிருக்கிறாள். வருங்காலத்தை வளமுள்ளதாக்கிக் கொள்ள வாய்த்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நான் இப்படித்தான் நிர்த்தாட்சிண்யமாக அலட்சியப்படுத்தி உதைத்து உதறி இருக்கிறேன்.

பின்னால் வரும் காட்சிகளை முன்னால் காட்டி நிற்கும் கண்ணாடி வழியாகப் பார்த்தபோது போலீஸ் வண்டி நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். 'இனித் தப்ப வழியே இல்லை. இதோடு தொலைந்தோம்' என்ற முடிவோடு வண்டியின் வேகத்தைக் குறைத்தேன். சாலையின் ஓரமாக ஒதுக்கினேன்.. போலீஸ் ஜீப்பை ஒட்டி மோட்டார் சைக்கிளில் வரும் போலீஸ் போக்குவரத்து இன்ஸ்பெக்டர் எந்த நிமிடமும் என் காரை மறிக்கலாம். என் காரோட்டும் லைசென்ஸைக் கேட்பார். என்னிடம் அது கிடையாது. நான் அதை வைத்துக் கொள்ளும் உரிமையை இழந்தவன். குறைந்தபட்சம் நான்கு வருஷங்களுக்காவது சிறைக்கனுப்பும் அந்தச் சட்டத்துக்கான செயலை — என்னைக் கைது செய்வதை - எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

சைரன் ஒலி மிக மிக அருகே வீரிட்டது. 'விஷ்' என்ற உந்துதலோடு என் காரைத் தாண்டி ஜீப்பும் மோட்டார் சைக்கிளும் பேரிரைச்சலோடு சென்று இருளில் மறைந்தன. அவர்கள் துரத்தி வந்தது என்னையல்ல! கடத்தல் பொருளோடு போகும் லாரி எதையோ துரத்திப் போகிறார்கள் போலும்.

வியர்வை என் உடலைக் குளிப்பாட்டியிருந்தது. சில விநாடிகள் கழித்துத்தான் - சில்லென்ற காற்றினால் வியர்வை குளிர்ந்த போதுதான்—அதையே என்னால் உணர முடிந்தது. என் மன அழுக்குகள் அந்த வியர்வையோடு கரைந்து வெளிப்பட்டிருக்க வேண்டும். மனத்திலே கனம் குறைந்து உடலிலே ஒரு புதுத் தெம்பு பிறந்திருப்பதை உணர்ந்தேன்.

பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு எங்கிருந்து அந்தக் காரை எடுத்து வந்தேனோ அதே இடத்தில் கொண்டு போய் நிறுத்தினேன். காவல்காரன்தான் கேட்டைத் திறந்து விட்டான். வீட்டினுள்ளே யாரும் விழித்துக் கொள்ளவில்லை. பாருவை எழுப்பும் எண்ணமும் எனக்கில்லை. கார்ச் சாவியை போர்ட்டிகோவின் ஓரத்திலிருந்த தபால் பெட்டியினுள் போட்டேன். காலையில் பாருவுக்கு டெலிபோன் செய்து அவளுடைய கார்ச் சாவி இருக்கும் இடத்தைச் சொல்லும்போது அவள் வியப்படைவாள். என்ன நடந்தது என்றறியும் ஆவலிருந்தாலும் அதைப் பற்றிக் கேட்க மாட்டாள். அத்தனை உயர்ந்த பண்பாடுள்ளவள் என் பாரு.

நான் மறுபடியும் நாளை பாருவைச் சந்திக்கத்தான் போகிறேன் — முற்றிலும் புதிய மனிதனாக, சகிப்புத் தன்மை கொண்டவனாக, சமூகத்தில் எல்லோராலும் மதிக்கப்படுபவனாக, வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் மிக்கவனாக, எதையும், எல்லாவற்றையும் நேசிக்கும் உள்ளப் பாங்கு கொண்டவனாக.

மாறுபட்ட மனோபாவங்களுடைய மாறுபட்ட ஒரு மனிதனை ஒரு டாக்ஸி என்னை என் வீட்டு வாசலில் இறக்கியது. மோன இருளில் அந்த என் பழைய வீடு மனத்துக்கு இதத்தையும், வாழ்வுக்கு நம்பிக்கையையும் தருவதற்காகக் காத்துக் கொண்டிருந்தது. வாசல் கதவு சாத்தியிருந்தாலும் தாளிடப்படவில்லை. தொட்டதும் திறந்து கொண்டது. நான் வருவேன் என்றே அம்மா அப்படித் திறந்து வைத்திருக்கிறாள்.

ஓசையின்றிப் பூனை போல் மாடிப் படிகளில் ஏறினேன். என் அறைக் கதவைத் திறக்கும்போது அடுத்த அறையிலிருந்து என் தாயின் குரல் மெல்லக் கேட்டது. ''சேகர், நீயாப்பா?''

என்னைப் பற்றிய கவலையில் என் நினைவாகவே என் தாய் தூங்காமல் படுக்கையில் உட்கார்ந்திருக்கிறாள். அன்று காலையிலிருந்து என் பெற்றோருக்குத்தான் எத்தகைய மனக் கிலேசத்தைக் கொடுத்து விட்டேன், நான்?

உள்ளே மேஜை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவள் மடிமீது ஒரு புத்தகம் கவிழ்ந்து கிடந்தது. தகப்பனார் மறுபுறம் திரும்பிப் படுத்திருந்தவர் முழங்கையை ஊன்றிப் பாதி உடலைத் தூக்கி வாயிற்படியில் நிற்கும் என்னைப் பார்த்தார்.

நான் அம்மாவின் அருகில் போய் உட்கார்ந்துகொண்டேன். ''இன்றைய மாலையை மகிழ்ச்சியாகக் கழித்தேன் அம்மா. பாருவும் நானும் ஒரு சினிமாவுக்குப் போயிருந்தோம்'' என்றேன்.

''நிஜமாகவா? அப்படித்தான் இருக்கணும்'' என்றாள் தாய். ஆகா, அந்தக் கணத்தில் அந்த முகத்தில் ஏற்பட்ட மாறுதல், மகிழ்ச்சி, பூரிப்பு... இன்னும் நான் அந்த மாலைப் பொழுதைப் பற்றி நிறையச் சொல்ல வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எல்லாம் பழைய நிலைக்குத் திரும்பி விட்டது என்ற திருப்தி ஏற்படும்படியாக நானும் சொல்லத் துடித்தேன்.

நான் அந்த அறையை விட்டு வெளியேறும்போது அப்பாவின் குரல் கேட்டது என் பின்னால்: ''குட் நைட் சேகர்! நிம்மதியாகத் தூங்கு.''

ஆமாம். என் உள்ளத்தில் அமைதி ஏற்பட்டுவிட்டது. நான் நிம்மதியாகத் தூங்கத்தான் போகிறேன்.



சித்தியின் மனம்

கஸ்தூரி பஞ்சு

அடம் பிடித்து அழும் பிடிவாதக்காரக் குழந்தையைப் போல், விடாமல் அலறிற்று கடிகாரத்தின் அலாரம்.

விடியற்காலை வேளை. அதுவும் மார்கழி மாதம். ஊசியாக உடலைத் துளைக்கும் ஊதக்காற்றைத் தடுக்கும் கணப்புப் போன்ற தடித்த கம்பளிப் போர்வைக்குள் ஆனந்தமான நித்திரையில் ஆழ்ந்திருந்த முரளிக்கு, கடிகாரத்தின் தலையில் ஓங்கி ஒரு தட்டுத் தட்டி விட்டுத் திரும்பத் தூங்கிவிட வேண்டும் என்கிற வேகம் எழுந்தாலும்கூட, விவேகம் அதை அமுக்கி மறைத்தது.

பரீட்சை எழுத வந்த இடத்தில் படிப்பதற்குப் பதில் படுப்பதாவது என்கிற கடமை உணர்வு உந்த, உள்ளத்தைக் கவ்வியிருந்த சோம்பலை, உடல் மீதிருந்த போர்வையுடன் சேர்த்துத் தூக்கித் தூர எறிந்துவிட்டு, 'விருட்'டென்று எழுந்துகொண்டான்.

அதே சமயம் அடுத்த அறையில் பேச்சுக் குரல் கேட்டது.

''சித்தி! இன்னிக்கு உங்க பிள்ளை சீக்கிரமாக வெளியே போகணும். நாலரைக்கெல்லாம் பால் வாங்கிக் கொண்டு வந்து விடுங்கள் என்று நேற்றே சொல்லியிருந்தேனே. மணி ஐந்தடிச்சு விட்டதே! இன்னும் போகவில்லையா நீங்கள்?'' என்ற கிரிஜாவின் குரலுக்குப் பதிலாக, ''இதோ... இதோ... ஒரு நிமிஷத்தில் வாங்கிண்டு வந்துடறேன்டியம்மா. என்னையும் மீறிக் கண் அசந்து விட்டேன்'' என்று பரபரப்புடன் சொன்ன ருக்மிணி, பால் பாட்டில்களுடன் ஓடினாள்.

முரளிக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அவன் இங்கு வந்த இந்த ஒரு வார காலத்துக்குள் இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகள் அவன் பார்வையில் பட்டுவிட்டன. வாலிப வயதினனான அவனையே அச்சுறுத்தும் இந்தக் கடுங் குளிரில், முதிய வயதும், வசதிகள் பல கொண்ட ஒரு பெரிய அதிகாரியின் அன்னை ஸ்தானத்தில் இருப்பவளுமான ருக்மிணி இந்த மாதிரி பால் பாட்டில்களுடன் ஓடும் காட்சி, பார்க்க மிகவும் கண்ணறாவியாக இருந்தது அவனுக்கு.

அந்த வீட்டுக்குரியவனான ரமணி அரசாங்கத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றுபவன். ஆயிரக்கணக்கில் ஊதியம். அழகான, கோட்டை போன்ற பிரும்மாண்டமான பங்களா. கைகட்டிச் சேவகம் செய்யக் கணக்கற்ற வேலையாட்கள். இப்படிச் செல்வத்தின் சிகரத்தில் வீற்றிருக்கும் அவன், குணத்திலும் குன்று என்று சுற்றம், சிநேகிதம் ஆகிய எல்லா வட்டாரங்களிலும் அவனுக்குப் பெயர். அப்படித்தான் முரளியும், ரமணியைப் பற்றி இது நாள் வரையில் இங்கு வருவதற்கு முன்பு வரையில் அபிப்பிராயம் வைத்திருந்தான்.

ஆனால் உள்ளே இருந்து பார்த்தால்தானே ஊழல் தெரிகிறது? அவனும் அவன் மனைவி கிரிஜாவுமாக அந்த ருக்மிணியை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறார்கள்! அடிநாளில் ஆயிரம் மனஸ்தாபங்கள் இருக்கலாம். அதையெல்லாம் மறக்காமல் மனத்தில் வைத்துக்கொண்டு, அதற்கு வட்டியும் முதலுமாகப் பழி வாங்குபவன், ஊரும் உலகமும் கொண்டாடும் உயர்ந்த மனிதனாக எப்படி இருக்க முடியும்? சராசரி மனிதனுக்கும் கீழாகச் சறுக்கி இறங்கி விட்டவனாகத்தானே ஆகிவிடுகிறான்? அவனுக்குப் போய்ப் பிரமாதமான புகழும், பெரிய பெயரும் என்ன வேண்டிக் கிடக்கிறது. முரளி மனம் புழுங்கினான்.

ருக்மிணி ரமணிக்கு மாற்றுத்தாய். உலக நியதிக்கு முரண்பாடில்லாதபடி அவன் சிறுவனாக இருந்த போது, அவள் சிற்றன்னை ஸ்தானத்தில் கொடுமையாக நடந்து கொண்டிருந்தாள் என்று முரளி கேள்விப்பட்டிருந்தான். பிறகு ரமணியின் தாய் மாமா, ரொம்ப வருடங்களாக மலேயா பக்கமிருந்தவர், இங்கு வந்து ரமணியைத் தம்முடன் அழைத்துக் கொண்டு போய் இப்படியொரு நல்ல நிலைமைக்கு அவனை உருவாக்கி விட்டார்.

இதற்கிடையில் ரமணியின் தந்தை காலமாகி விடவே, ஆதரிப்பவர் யாருமில்லாமல் ருக்மிணி தன்னந்தனியாகக் கிராமத்தில் திண்டாடு

றாள் என்பதைக் கேள்விப்பட்ட மணி, அங்கு விரைந்தோடிப் போய், அவளைத் தன்னுடன் தங்கிவிடவேண்டும் என்று வற்புறுத்தி அழைத்து வந்து விட்ட பெரும் போக்கை இன்னும்கூட முரளியின் பெற்றோரும், மற்றவர்களும் வாய் ஓயாமல் சொல்லும் விந்தையை முரளி தன் செவிகளாலேயே கேட்டிருக்கிறான். அது அவர்களும், அவனும் நினைத்துக் கொண்டிருக்கிறமாதிரி கருணையினால் அல்ல, எட்டு ஆட்களுக்குக் கொடுக்கும் சம்பளப் பணத்தை ஒருத்திக்குப் போடும் சாப்பாட்டில் சரிக்கட்டிவிட்ட சாமர்த்தியத்தின் பிரதிபலிப்பு என்பது இப்போதுதானே புரிகிறது ?

விடியற்காலை பால் வாங்குவதில் தொடங்கும் அவள் வேலை ரமணியின் குழந்தைகளைக் கான்வெண்டுக்குக் கொண்டுவிட்டு அழைத்து வருவது, காய்கறிகள் வாங்கி வருவது, கிரிஜாவும் அவனும் வெளியேபோகும் போது குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது என்று இரவு படுக்கும் வரையில் வேலைகள் இருந்து கொண்டே இருந்தது.

முரளி மனத்துக்குள் ஒரு முடிவுக்கு வந்தான். இன்னும் பத்துப் பதினைந்து நாட்களுக்கு அவனுக்கு இங்கே வேலை இருக்கிறது. ஆகவே, ஊருக்குப் புறப்படுவதற்குள், ருக்மிணியின் விடுதலைக்கு ஒரு வழி செய்துவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டான்.

அதன்படி, கிரிஜாவும் ரமணியும் ஒரு விருந்துக்குப் போய்விட்டசமயம் மெதுவாக ருக்மிணியை நெருங்கினான். வழக்கம்போல், ஏகப்பட்ட வேலைகளில் மூழ்கியிருந்த ருக்மிணி அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''ஏன் மாமி, இந்தக் குளிரில் நீங்கள் ஏன் பால் வாங்கப் போகணும்? வேலைக்காரியை அனுப்பிவிடக் கூடாதோ? அதுதான் வீட்டிலேயே ஒருத்தி இருக்கிறாளே!'' என்று தன் முதல் அஸ்திரத்தைப் பிரயோகித்தான் முரளி.

அதற்கு ருக்மிணி சொன்ன பதில் அவனை அயர வைத்தது.

''வேலைக்காரியையெல்லாம் இந்தக் காலத்தில் நம்ப முடிகிறதா? முக்கால் பாட்டில் பாலுடன் கால் பாட்டில் தண்ணீர் கொட்டிக் கொண்டு வந்து விடுகிறார்கள். எங்க ரமணிக்குக் கள்ளிச் சொட்டுப் போலப் பால் இருந்தால்தான் காப்பியே உள்ளே இறங்கும். 'நீங்க வந்த பிறகுதான் அவர் காப்பியை ருசித்துக் குடிக்கிறார் சித்தி' என்று கிரிஜாகூட வாய்க்கு வாய் சொல்லுகிறாள்'' என்று பதில் சொன்ன போது, எள்ளத்தனை கள்ளத்தனத்தின் கலப்படம்கூட இல்லாத அந்த வெள்ளை உள்ளத்தை எத்தனை நயவஞ்சகமாக அந்தத் தம்பதிகள் வஞ்சித்திருக்கிறார்கள் என்பதை நினைத்து மிகவும் வேதனைப்பட்டான் முரளி. அவனுடைய அந்த அப்பாவித்தனம், அவளை விடுவிக்க வேண்டும் என்கிற அவனுடைய எண்ணத்தை இன்னும் தீவிரமாக்கிற்று.

இன்னொரு நாள், ''ஏன் மாமி, ரமணி சொன்னால் கான்வெண்ட் பஸ்ஸே வீட்டுக்கு வந்து குழந்தைகளை அழைத்துப் போகுமே. அனாவசியமாக நீங்களும், குழந்தைகளும் நடப்பானேன்?'' என்று அவன் இரண்டாவதாகக் கேள்வி கேட்ட போது, ''போறும்டாப்பா, போறும். கான்வெண்ட் பஸ்ஸில் குழந்தைகள் ஏறலாமோ? அதற்கு எப்போ பார்த்தாலும் விபத்துத்தானாமே! குழந்தைகளை நான் அழைத்துக் கொண்டு போக ஆரம்பித்த பிறகுதான் ரமணியும், கிரிஜாவும் நிம்மதியாக இருக்கிறார்களாம்'' என்று ருக்மிணி சொல்லி விட்டதும், இனி இந்த வழிகளில் இவளை அசைக்க முடியாது என்று உணர்ந்த ரமணி மூன்றாவதாக வேறு முறையில் தன் முயற்சியை ஆரம்பித்தான்.

''மாமி! உங்க ரமணிக்கு எத்தனை பெரிய உத்தியோகம் என்பது உங்களுக்குத் தெரியுமோ?'' என்று கேட்டான்.

முகம் மலர, பற்களெல்லாம் வெளியில் தெரிய, ''ஓ, தெரியுமே! ஓர் ஆபீஸே அவனுக்குக் கீழே இருக்கிறதாமே!'' என்று பூரிப்புடன் ருக்மிணி சொன்னபோது, முரளிக்கு ரொம்பவும் பரிதாபமாக இருந்தது.



''ஆமாம், அப்படிப்பட்ட பெரிய உத்தியோகஸ்தனுக்கு நீங்க என்ன உறவு ஆகணும்? சொல்லுங்கோ'' என்று கேட்டான்.

''என்ன கேள்விடா கேட்கிறே முரளி நீ? எத்தனை வருஷங்களாக, உனக்கும் நம்ம வீட்டுக்கும் பழக்கம்! அவனுக்கு நான் என்ன ஆகணும்னு உனக்குத் தெரியாதா ? நான் அவனுக்கு அம்மாடா'' என்றாள் பூரிப்புடன்.

'' அப்படியா உங்களை அவன் நடத்துகிறான்?'' என்று மனத்துக்குள் பொருமின முரளி, ''தெரிந்துதான் இப்படிச் செய்கிறீர்களா ?'' என்று கேட்டான்.

''எப்படிடா, செய்கிறேன்?'' என்று பதற்றத்துடன் கேட்டாள் ருக்மிணி.

''பெரிய அதிகாரிக்கு அம்மாவாக வீட்டிலே உட்கார்ந்து அதிகாரம் செய்து கொண்டிருக்காமல், எடுபிடி ஆளைப் போல், இப்படித்தான் பாலுக்கும் பள்ளிக்கூடத்துக்கும் அலைவதா ? பார்ப்பவர்கள் ரமணியைத்தானே குறை சொல்வார்கள்? அவனுக்கு மனசுக்கு எத்தனை வருத்தம் தெரியுமா?'' என்று ஒரு போடு போட்டான் முரளி.

முகம் வெளுத்துப் போயிற்று ருக்மிணிக்கு. ''என்னடா முரளி, ரமணி அப்படியா வருத்தப்படுகிறான்? ஆமாம், பாலுக்கு நான் போகா விட்டால் கள்ளிச் சொட்டுப் போல் பால் கிடைப்பதும், குழந்தைகளை நான் அழைத்துப் போகா விட்டால், அவர்கள் ஜாக்கிரதையாகப் போய்ச் சேருவதும் ரொம்பக் கஷ்டம் என்று ரமணியும் கிரிஜாவும் அடிக்கடி சொல்கிறார்களே, அதெல்லாம்....''

''சுத்தப் பொய்'' என்றான் முரளி உற்சாகமாக. அவன் முயற்சி வெற்றி பெற ஆரம்பித்துவிட்ட ஆனந்தம் அவனுக்கு.

''உங்களுக்காக அந்த மாதிரி சொல்லுறார்களோ என்னவோ. ஆனால் உண்மை அதுவல்ல. நீங்கள் வருவதற்கு முன்னால் பால் வாங்காமல் குழந்தைகள் பள்ளிக்கூடம் போகாமலா இருந்தார்கள் ?'' என்றான்.

தலையைக் குனிந்து கொண்டு யோசனையுடன் அந்த இடத்தை விட்டு அகன்றாள் ருக்மிணி. வயதான ஒருத்தியை, வஞ்சகமாக வருத்துவதிலிருந்து மீட்டுவிட்ட திருப்தியுடன் தூங்கப் போனான் முரளி.

மறு நாள். அடுத்த அறையில் கிரிஜாவின் குரல் கேட்கிறது. ''சித்தி, மணி ஐந்தடித்து விட்டதே ! உங்க பிள்ளை இன்னிக்குச் சீக்கிரமாக வெளியே போகணும்னு சொன்னாரே'' என்ற கிரிஜாவுக்குப் பதிலாக, ''இதோ... இதோ... கிளம்பி விட்டேன்'' என்று சொல்லாமல், ''கிரிஜா! நான் பால் வாங்கப் போகலே. வேறே யாரையாவது அனுப்பி விடு'' என்று ருக்மிணி சொன்னதும், கிரிஜாவின் முகத்தை முரளி பார்க்காவிட்டாலும் கூட அதில் பரவிப் பாய்ந்த திகைப்பை அவனால் நன்கு ஊகித்தறிய முடிந்தது.

அதன் பிறகு, கான்வெண்டுக்கும், ரமணியின் காரில்தான் குழந்தைகள் கிளம்பினர்.

கிரிஜாவுக்கும், முரளிக்கும் முகத்தில் ஈயாடவில்லை. குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள். குட்டி போட்ட பூனையைப் போல் இப்படியும் அப்படியும் அர்த்தமில்லாமல் நடந்தார்கள்.

பிறகு முரளியின் அருகே வந்த ரமணி, அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''முரளி! சித்தி இன்றைக்குப் பாலுக்குப் போகலேடா. குழந்தைகளையும் ஸ்கூலுக்கு அழைத்துக் கொண்டு போகவில்லை'' என்றான்.

முரளியின் மனத்தில் பாசியாகக் கசப்புப் படர்ந்தது. 'அட, கஞ்சப் பயலே! பணத்துக்கு இப்படியா பேயாகப் பறப்பது ?' என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்டவன், ''வாங்கிக் கொண்டு வராவிட்டால் போகட்டுமே, ரமணி ! அதற்கு அனுப்பவா உன்னிடம் ஒரு வேலையாள் இல்லை?'' என்றான்.

''ஒன்று என்னடா முரளி? ஆயிரம் வேலையாட்கள் என்னிடம் இருக்கிறார்கள். ஆனால் இந்த மாதிரி ஒரு சித்தி எனக்கு இருக்க வேண்டாமா ?'' என்று அவன் சொன்னது, முரளிக்குப் புரியவேயில்லை.

''என்னடா, சொல்லறே ரமணி?''

''முரளி! அந்த நாளில் என்னைக் கொடுமைப்படுத்தின நிகழ்ச்சிகளை, இப்போது நினைத்து நினைத்து மனம் மருகிப்போகிறாள் என் சித்தி. அதனால்தான் என் தந்தை காலமானதும், தனியாக அவள் கிராமத்தில் திண்டாடிக் கொண்டிருந்த போது, போய்க் கூப்பிட்ட என்னுடன் புறப்பட்டு வரப் பிடிவாதமாக மறுத்து விட்டாள். 'முரளி, உன்னைப் படுத்தினதற்கான பாவங்களை நான் அனுபவித்துத்தான்டா ஆகணும். ஆகையால் என்னைச் சௌக்கியமாக வைத்துக் கொள்ளும் எண்ணத்தில் கூப்பிடும் உன்னுடன் நான் வரவே மாட்டேன்' என்று சித்தி சொன்னதும், சட்டென்று எனக்கொரு யோசனை தோன்றிற்று. உடனே நான், '' சித்தி! உண்மையைச் சொல்லி விடுகிறேனே. உன்னை நான் அழைத்துப் போவது பூராப் பூரா உன் சுகத்துக்காக மட்டுமில்லை. என்னுடைய சுயநலத்துக்காகவும்தான். பால் வாங்க, பிள்ளைகளை அழைத்துப் போக, பொறுப்பாக வீட்டைப் பார்த்துக் கொள்ள, நம்பிக்கையாக யாருமேயில்லை, சித்தி. அதனால்தான்....'' என்று நான் சொன்னதும், என்னுடன் மறு வார்த்தை பேசாமல் புறப்பட்டு வந்துவிட்டாள் சித்தி. அதை ஊர்ஜிதம் செய்யும்வகையில்தான், ஒரு நாளைக்குப் பல முறைகள், நானும் கிரிஜாவும் பாலின் கலப்படம், பஸ்ஸின் விபத்து இவற்றைப் பற்றிப் பேசிப் பேசி, சித்தியின் இருப்பு எத்தனை அவசியம் என்கிற நம்பிக்கை அவளுக்கு நிலைத்திருக்கப் பாடுபட்டு வருகிறோம். ஆனால் திடுமென்று இன்றைக்குச் சித்தியின் நடத்தையில் மாறுதலைப் பார்க்கும் போது, இங்கிருந்து கிளம்பி விடுவாளோ என்று நடுக்கமாக இருக்கிறதடா, முரளி'' என்று நாத் தழுதழுக்க ரமணி சொன்னதும், உடம்பின் நாடி நரம்புகளிலெல்லாம் பாய்ந்து பெருகிய உத்வேகம், முரளியின் வாயிலிருந்து வார்த்தைகளாக வெடித்துச் சிதறின.

''கவலைப்படாதே, ரமணி. உன் சித்தியை இந்த வீட்டுடன் நிலைத்து நிற்கச் செய்யும் பொறுப்பு என்னுடையது'' என்றான்.

நியாயம்தானே? உறவு பிரியக் காரணமாக இருந்தவன்தானே மீண்டும் அது. ஒன்று சேருவதற்கான பாலம் அமைக்கும் கர்த்தாவாகவும் இருக்க முடியும்?

முகஸ்துதிக்கு ஒரு முற்றுப் புள்ளி!



மயிலை மூர்த்தி

உலகம் தோன்றிய நாள்தொட்டு இன்று வரை மனித இனத்தினிடையே, வெவ்வேறு நிலைகளில் தெரிந்தோ, தெரியாமலோ ஒட்டிக் கொண்டு விட்ட 'முகஸ்துதி' என்ற பழக்கம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் எவ்வளவு தூரம் ஆக்கிரமித்திருக்கிறது! அதனால் ஏற்படும் சொற்ப அனுகூலங்கள் ஒரு பக்கம் இருக்க, கூடவே பிரதிகூலங்களும் இருக்கத்தானே செய்கின்றன. அந்தப் பல்வேறு நிலைகள் தொடர் காட்சிகளாக, இதோ கண் முன் தோன்றுகின்றன!



காலை நேரம்: பல் தேய்க்க முரண்டு செய்கிறது மூன்று வயதுக் குழந்தை. தாயார் ஏதேதோ சமாதானம் செய்து பார்க்கிறாள். முடிவில் மிரட்டுகிறாள். ம்ஹூம், குழந்தை தன் குரலால் ஊரையே கூட்டுகிறது. ''இதோ பார், முன்னாடி வீட்டுக் கமலி இருக்கிறாளே, அவள் ஒரே அசடு. இந்த ஊரிலேயே ஒரே ஒரு சமர்த்துப் பாப்பாதான் இருந்தது. அதைக் காணோமென்று ஊரெல்லாம் தேடிண்டிருக்கா. அது என்னடான்னா, இதோ இங்கே நம்ம வீட்டிலேயே இருக்கு. எங்கே, சமர்த்துப் பாப்பா சீக்கிரமா பல் தேய்ச்சுக்கறதான்னு பார்க்கலாம்.''

''கமலிதான் அசடு, இல்லேம்மா?'' — மழலை மொழிந்தவாறே குழந்தை பல் தேய்க்கச் சம்மதிக்கிறாள். குழந்தைப் பருவத்தில் ஆரம்பிக்கிறது முகஸ்துதி.

பள்ளி மாணவன் ஒருவன்; அவன் எல்லோரையும் போல் எல்லாவற்றிலும் மேதாவியாக விளங்கவேண்டுமென்பது அவன் தகப்பனாரின் அளவில்லாத ஆசை. நியாயமானதுதான். அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. பள்ளியில் ஒரு பேச்சுப் போட்டி. கட்டபொம்மன் வசனத்திலிருந்து ஒரு சம்பவம். வீரம் செறிந்த வசனங்கள். தகப்பனாரே எடுத்துக் கொடுத்துப் பையனை 'ஸ்பெஷ'லாகக் கவனிக்கிறார். ஆனால் பையனோ, அவ்வளவு வசனங்களையும் செய்யுள் ஒப்புவிப்பது போல், இரண்டு கைகளையும் கட்டிக் கொண்டு ஒப்பிக்கிறான். தகப்பனாரின் முகம் வேதனையால் வாடுகிறது.



''டேய், ராமாயணத்திலே சொல்வார்கள்: ஆஞ்சநேயருக்குத் தன்னுடைய பலம் எவ்வளவுன்னு தெரியாதாம். கூட இருப்பவர்கள் அடிக்கடி ஞாபகப்படுத்தணுமாம். இன்னிக்குப் பார்க்கப் போறேன், இந்தக் குட்டி ஆஞ்சநேயரின் சக்தியை.'' — பையனை முகஸ்துதி செய்து முதுகைத் தட்டிக் கொடுத்து, கூடவே பள்ளிக்கு அழைத்துக் கொண்டு செல்கிறார் தகப்பனார்.

பத்திரிகை நிருபர் ஒருவர். பிரபல நடிகர் ஒருவரைப் பேட்டி காணப் புறப்படுகிறார். நீண்ட நாள் பிரயாசைக்குப் பிறகு நடிகரை வீட்டிலேயே சந்திக்கிறார் நிருபர். நினைத்ததற்கு மாறாக, சாந்தமே உருவாக விளங்குகிறார் நடிகர். 'இவரா, படங்களில் எப்படியெல்லாமோ நடிக்கிறார்?' தமக்குள்ளேயே வியக்கிறார் நிருபர்.

பேட்டி தொடங்குகிறது.

''எல்லாவற்றையும் என் சகோதரரிடமே கேட்டுக் கொள்ளுங்கள். என்னைப் பாடுபட்டு வளர்த்து முன்னுக்குக் கொண்டு வந்து, இந்த நிலையில் நான் இருப்பதற்குக் காரணமானவரே அவர்தான். நீங்கள் அவரைப் பேட்டி காண்பதுதான் முறை.''

''அப்படியில்லை. இன்று திரைவானில் சுடர் விடும் பிரபல நட்சத்திரம் நீங்கள். உங்கள் வாயிலிருந்து உதிரும் சொல் முத்துக்களை அப்படியே சேகரித்து எழுதினால், அதைக் கண்ணாடி போட்டு மாட்டிக்கொள்ளும் ரசிகர்கள், பல்லாயிரக் கணக்கில் இந்தப் பேட்டியை விரும்பிப் படிக்கக் காத்திருக்கிறார்கள். அதற்காகவாவது ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் நீங்களே பதில் சொல்லி விடுங்கள்.''



நடிகரின் முகத்திலே இனம் புரியாத ஒரு மலர்ச்சி.

''நீங்கள் மறக்க முடியாத உண்மைச் சம்பவம் ஏதாவது கூற முடியுமா? இருக்கும். கட்டாயம் இருக்க வேண்டும். அப்படிச் சம்பவங்கள் எதுவுமே இல்லாமல் இப்படி ஒரு நிலைக்கு வந்திருக்கவே முடியாது.'' நிருபர் கேள்விக்கு ஸ்திரத்தன்மை கொடுக்கிறார். ஒரு விநாடி. தயங்குகிறார் நடிகர். அடுத்த விநாடி அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வருகின்றன.

''உங்களுக்குத் தெரியாது. பக்கத்து ஊரிலே ஒரு நாடகம். கதையிலே வில்லன் நான்தான். கதாநாயகனைத் துப்பாக்கியைக் காட்டி மடக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் விளக்குகள் திடீரென்று அணைந்துவிடுகின்றன. வெளியே கூட்டத்தில் சந்தடி, அடிதடி, கலவரம், கூக்குரல்கள். சுமார் அரை மணி நேரத்தில் விளக்குகள் எரியத் தொடங்கின. ஒரே ஒரு குரல், அலறல் என்னை இழுக்கிறது. கூட்டத்தில் மிதிபட்ட ஒரு சிறுவனின் ஓலம் அது. ஆபத்தையும் பொருட்படுத்தாமல் மேடையிலிருந்து குதித்து ஓடி...

மயிலாப்பூரில் கபாலீசுவரர் கோயிலும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சாமி கோயிலும் இப்பொழுது புதிய இடத்தில் இருக்கின்றன. சுமார் இருநூறு ஆண்டுக ளுக்குமுன் கடல் தண்ணீர் உள்ளே வந்த தால் நகருக்கு உள்ளே பாதுகாப்பாகக் கொண்டு வரப்பட்டவை இந்தக் கோயில்கள்.

ஆதாரம்: ''சரித்திரம்''
தகவல்: ''முத்து''

அந்தப் பையனை அப்படியே அள்ளி எடுத்து என் காரில் போட்டுக் கொண்டு அருகிலிருந்த ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். விஷயமறிந்த பையனின் பெற்றோர் ஆஸ்பத்திரிக்கே வந்து விட்டனர். எனக்கு மறுநாள் ஷூட்டிங். ஊருக்குத் திரும்ப வேண்டும். இருந்தாலும் பையன் கண் விழிக்கும்வரை தங்கிவிட்டு, அருகில் இருந்த பெற்றோரிடம் ஆயிரம் ரூபாய்க்கு 'செக்' ஒன்று கொடுத்துவிட்டு இதை வெளியில் சொல்ல வேண்டாம் என்று கூறிவிட்டு ஊருக்குத் திரும்பி விட்டேன்.''

முத்துக்களைச் சேகரித்துக் கொண்டு விரை கிறார் நிருபர். தம்பியின் நடிப்புத் திறனைக் கண்டு அருகிலிருந்த அண்ணன் வியக்கிறார்.

தேர்தலில் பெருவாரியான வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்த பிரமுகர் ஒருவருக்குப் பாராட்டு விழா ஒன்று. மைதானம் கொள்ளாத கூட்டம். பேச்சாளர் ஒருவர் வார்த்தைக்குவார்த்தை கரகோஷம் பெற்றுத் தம்மை மறந்த நிலையில் பேசிக் கொண்டிருக்கிறார். கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர் கண்கள் அங்குமிங்கும் அலை பாய்கின்றன. கூட்டத்தின் முன் வரிசையில் அமர்ந்திருந்த அந்த நபர் மீது அவர் கண்கள் நிலைக்கின்றன. விரைந்து அந்த நபரை நோக்கிச் செல்கிறார் அவர்.



''ஐயா, நீங்க இங்கேயா இருக்கீங்க? மேடைக்கு வாங்க. ரெண்டு வார்த்தை யாவது இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் பேசணும்.''

''நான் எதுக்குங்க. பெரியவங்க எல்லாம் பேசிக்கிட்டு இருக்காங்க.''

''அப்படிச் சொல்லக் கூடாது. அந்தக் காலத்தில் 'சிம்ம கர்ஜனை சிங்காரவேலு' என்றால் ஊரே நடுங்குமே! எவ்வளவோ வருஷங்களுக்குப் பிறகு ஜனங்களுக்கு உங்கள் குரலைக் கேட்க ஒரு வாய்ப்பு அளிக்கக் கூடாதா? வாங்க.'' பெரியவர் எழுந்து பின் தொடர்கிறார். பேச்சாளர் அமர்ந்ததும், சிம்ம கர்ஜனை எழுகிறது. பேச்சு எதிலோ தொடங்குகிறது. சரித்திர வரலாறுகள், புராணங்கள் இவற்றிலெல்லாம் வெற்றி பெற்ற வீரர்கள் எல்லோரையும் ஒவ்வொருவராக உதாரணம் காட்டி விவரித்துக் கொண்டே வருகிறார் சிங்காரவேலு. நேரம் ஓடிக் கொண்டிருக்கிறது. கூட்டத்திலிருந்து கைதட்டல் கிளம்புகிறது. தொடர்ந்து, தம் நாற்பது வருட அனுபவங்களில் தாம் பெற்ற வெற்றிகளை யெல்லாம் விவரமாக எடுத்துச் சொல்லுகிறார் அவர். தொடர்ந்து கைதட்டல் ஆரவாரம், அவரை அமரும்படி சொல்லி. விழாவை ஏற்பாடு செய்தவ ருக்குப் புதுத் தலைவலி. செய்வதறியாது திகைக்கிறார் அவர். கடைசியாக, வேறு வழியே இல்லாமல், திருவாளர் சிங்கார வேலுவின் காதுகளில் ஏதேதோ சொல்லி அவரை இழுத்து உட்கார வைப்பதற்குள் கூட்டம் கலைய ஆரம்பித்து விடுகிறது. 'சிம்மகர்ஜனை'க்குத் தாங்கொணாத வருத்தம். வேண்டா வெறுப்பாக இடத்தில் வந்து அமருகிறது. யாரைக் குறை கூற முடியும்?

எழுதிக் கொண்டே போன என் பேனா முரண்டு செய்கிறது. தலையை நிமிர்த்தியவன் கடிகாரத்தை நோக்குகிறேன். மணி 9.30 ஆயிற்று. அலுவலகத்துக்குப் பறக்க வேண்டியதுதான். குளியல் போயிற்று, பூஜை போயிற்று, சாப்பாடு இல்லாமல் போக முடியாது. கூடவே மனத்துக்குள் ஒரு தீர்மானம். இவ்வளவையும் கண்ட பிறகு இந்த முகவுரைக்கு நாலாவது ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

சமையல் அறையை நோக்கிக் குரல் கொடுக்கிறேன். ''ஜானகி! ஆபீசுக்கு நேர மாயிடுத்து. பிளேட்டைக் கழுவி வை, ம், சீக்கிரம்.''

''ரொம்ப விரட்டாதேங்கோ; காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டுதான் பம்பரமா சுத்தறேன். இதற்கு மேல் என்னால் பறக்க முடியாது.''

ஒரே ஒருவி நாடி தயக்கம். அடுத்து என்னை யறியாமலே என் கால்கள் சமையலறையை நோக்கி இழுத்துச் செல்கின்றன.

''ஏய் ஜானகி, நேற்றைக்கு நீ ஆபீசுக்கு டிபன்பாக்ஸில் போட்டுக் கொடுத்த புளி யோதரை சர்க்கரைப் பொங்கல் மாதிரி பறந்து போயிடுத்து. என்னமாப் பண்ணி ருக்கேள். அதென்னவோ, நம்ம வீட்டு டிபனுக்கு என் விக்குமே டிமாண்ட் தான்!''



சமையலறையில் குளிர்ந்த தென்றல் ஒன்று வீசுகிறது: ''போறும் போகட்டும், போங்கோ. அலாதித் இட்டாதேங்கோ.. என்ன பிரமாதம், இன்னொரு நாள் நிறையப் பண்ணித் தரேன். எல்லாருக்கும் ஆசை தீரக் கொடுங்கோ. சீக்கிரம் சாப்பிட உட்காருங்கோ, நாழிகையாகலை?'' குளிர் காற்றுக மாதிய தென்றலில் ஜில்லிப்பாக உருகுகிறேன்.

முகவுரைக்கு முற்றுப்புள்ளியாவது, நாலாவது வைப்பதாவது!

ஒரு சொட்டுக் கண்ணீர்

கோமதி நாகராஜன்

''உயிரே... உயிரே... நீ எங்கே போகிறாய்?''

''போகும் போது ஏன் இப்படித் தடுக்கிறாய்?''

''ஐம்பத்தெட்டு வருடங்கள் என் நிழலில் இருந்தவன், போவதற்கு முன்பு, 'போய் வருகிறேன்' என்று ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போனால் குறைந்து போய்விடுவாயா? போகிற போக்கிலே கேட்கிறேன். ஒரு நாழிகைகூட இருந்து விட்டுப் போ.''

''ஊஹூம் .... முடியாது.''

''என்ன முடியாதா? இத்தனை வருடங்கள் நான் நிழல் ஈந்த நன்றிக்காகவாவது என் கடைசிக் கோரிக்கையைக் கேள்.''

''ஆ...ஹாஹ்....ஹா....?''

''என்ன சிரிக்கிறாய்? நன்றி கெட்டவனே! எண்ணியதை ஏவுமுன்னே செய்து முடிக்கப் பஞ்ச பாண்டவர்கள் போல் ஐந்து வேலையாட்கள் உனக்கு ஏவல் செய்த நன்றி கூடவா மறந்து போய் விட்டது?''

''அந்த ஐம்பொறிகளையும் வேலைக்காரர் ஸ்தானத்திலா வைத்திருந்தாய்? அவர்கள் எஜமானர்களாகி அவர்கள் விருப்பத்துக்கு உன்னை ஆட்டி வைத்தார்களே! அந்த ஐவர் வழியே அடிமையாகி நீ அழிந்து போனதுமல்லாமல் என்னையும் எப்படிச் சீர்வதை செய்தாய்?''

''எப்படியோ ஐம்பத்தெட்டு வருடங்கள் நம் உறவு வளர்ந்து விட்டது. நீ இந்த உறவைத் துண்டித்துக் கொண்டு வெளியேறத் துடிக்கும் இந்த நிமிடத்தில் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒரு நாழிகை இருந்து விட்டுப் போ.''

''இனி அரை நிமிஷம்கூட இந்த நிழலில் தங்க மாட்டேன்.''

''கேவலம் பகுத்தறிவில்லாத விலங்குகளுக்குக்கூட நன்றி உணர்வை வைத்திருக்கிறான் இறைவன்.''

''நன்றி...நன்றி... அந்த நன்றிப் பெருக்கினால்தான் இந்த மாளிகையை மூலமாக வைத்து நீ இடம் இடமாகச் செய்த அட்டூழியங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தேன்.''

''பழியைப் போடாதே, என் மேல்.''

''தூய ஒளியை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் இந்த விநாடிகூட அதை எண்ணிப் பார்த்தால் அனுவாகக் குன்றி விடுகிறேன்.''

''அப்படி என்ன ஐயா, நான் ஊரில் இல்லாத அக்கிரமம் செய்தேன்?''



''கூப்பாடு போட்டு விட்டால் செய்த குற்றம் மறைந்து விடுமா? முப்பத்து மூன்று வருடங்களுக்கு முன்பு நீ இளைஞனாக இருந்த பொழுது....''

''தெரிகிறது......''

''பெரியப்பாவின் சொத்துக்கு நீதான் வாரிசு என்று இறுமாந்திருந்த பொழுது; கையிலே மூன்று வயதுக் குழந்தையுடன் உரிமையுடன் அவள் நுழைந்தபொழுது நீ எவ்வளவு சீற்றம் கொண்டாய்?''

''இருக்காதா பின்னே?''

''அந்தக் குழந்தையைப் பார்க்கும் பொழுதெல்லாம் உன்னுள்ளே உருவான சபதங்கள்தான் எத்தனை?''

''ஏது? ஒற்றன் போல் வெகுவாகக் கண்காணித்திருக்கிறாயே! பலே..... பலே!''

''போகட்டும். ஒரு நாள் அந்தக் குழந்தையை மாடு பாய்ந்து முட்ட வந்தபோது 'ஓடு... ஓடு... குழந்தையைக் காப்பாற்று' என்ற எனது உள் குரலைப் புறக்கணித்துவிட்டு உன் நடிப்பு...காரிய தாமதம் குழந்தையின் குரலையும் உள்ளடக்கிய உன் அலறல்;....ஆ...அபாரமான சாதனை!

பற்றுக்கோலே இழந்து வெளியேறிய தாயா ரிடம் பரிவு கொண்டவன்போல நீ கொட்டிய கண்ணீர்...வாழ்க்கையின் முதல் படியிலேயே உனக்கு வெற்றிதான்!''

''என் வெற்றியின் விளைக்களிலே உன்னையும் ஊட்டி வளர்த்ததை மறக்க வேண்டாம்.''

''சிறையிலே அடைபட்டுக் கிடந்த எனக்கு ராஜபோகம் வேறு கேடா? அடுத்து, கட்டிய மனைவியையே வீட்டை விட்டு விரட்டிய இரண்டாவது அத்தியாயத்தைக் கூறட்டுமா?''

''அந்த விஷயத்தை மட்டும் எடுக்காதே. வாழ்நாளிலே நான் புழுவாகச் சிறுத்த அந்த விபத்து மட்டும் நடந்திருக்கா விட்டால்...''

''அந்த விபத்துக்குப் பின் டாக்டர் கூறிய உண்மையும் அதிர்ச்சியும் சேர்ந்து உன்னை அதமனுக்கியதா?''

''அந்த டாக்டர் இதயத்திலே எப்பேர்ப் பட்ட சாட்டையை வீசினார் தெரியுமா? அதை என்றுமேயே தாங்கிக் கொள்ள முடியாத பொழுது; ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டுமென்று ஏங்கிக் கொண்டிருந்த அவள்..... எப்படி..... எப்படி?''

''குடும்ப வாழ்க்கைக்கு லாயக்கற்ற வன் என்று சொன்னதும், நீ அந்தரங்கத் தில் எவ்வாறு திட்டமிட்டு ஜோடித்தாய்?''

''இறப்பினும் ஏற்பட்ட துயரமும், வெட் கமும் தூண்ட அவள் உறவை ஒரு நொடியில் கத்தரித்து எறிந்தேன். உண்மைதான்.''

''ஏட்டைத் திருப்பிவிட்டு, அவள் நடத் தையில் சந்தேகம் கொண்டு விரட்டினாய்.''

''அப்படியில்லே... மாடியில் முன்னிரவில் நின்றுகொண்டு அந்த இளைஞனோடு உரை யாடிய காட்சியைக் கண்டு என் இரத்த நாளங்களே வெடித்தாற்போல் துடித்துப் போனேன்... நான் பூரண ஆண்மையுடன் உலாவி வந்தபோது அவை என் மனத்தைக் கடிக்கவில்லை...ஆனால் அந்தப் பரம்பர உற வில் முடமான பின் நான் எப்படிப் பொறுத் துக்கொள்வேன்?''

''அதற்காக ஊரைக் கூட்டி அமர்க்களம் செய்து நள்ளிரவிலேயே வெளியேற்றினாய்! ஏழு வருடங்கள் உன்னோடு வாழ்ந்தவளுக்கு அந்த ஓரிரவுகூடத் தங்க அனுமதிக்காது.... அவளை....''

''போதும்... நிறுத்து... அதை ஏன் இப் பொழுது ஊரறிய அம்பலப்படுத்துகிறாய்?''

''எனக்கேன் இந்த வம்பு? நான் போகி றேன். நீ இப்படி வாழ்க்கைப் பாதையின் பல திருப்பங்களில் பம்மிப் பதுங்கியபொழு தெல்லாம் நான் இருந்தும் இறந்தவன்போல அடங்கிக் கிடந்தேன். கடைசியாக ஒன்றை மட்டும்.....''

''என்ன அது?''

''ஆடி அடங்கிக் கிடக்கிறாய். உறக்கப் போக வேண்டாம். ஊருக்கெல்லாம் பெரிய மனிதனாக நியாயாதிபதியாக இருந்தாயே. அதைமட்டும் நிலைப்படுத்தி விட்டு...''

''அடே அதிகப்பிரசங்கி! போகிற சமயத் திலும் என் நிம்மதியைப் பறிக்கும்படி நான் என்ன செய்தேன்?''

''செய்ததைச் சொல்லி விடுகிறேன். கோவிலிலே களவு போய் மீட்ட நகைகளைச் சட்டம் உன் பாதுகாப்பில் வைத்ததே அதைத்தான் சொல்ல வந்தேன். ஆசாரியைக் கைக்குள் போட்டுக் கொண்டு விலையுயர்ந்த கற்களை அப்புறப்படுத்திவிட்டுப் போலிக் கற் களைப் பதித்து நகாஸ் வேலை செய்தாயே, அது யாருக்குத் தெரியும்?''

''ரொம்ப யோக்கியன்தான் போ. ஐம் பொறிகளைப் பூட்டிக் கொண்டு ஆசைக்கு அடிமையாகி அலையும் மனிதனுக்கும் உலகம் துறக்கும் அன்பருக்கும் வித்தியாசம் வேண் டாமா? அந்தக் கற்களைதான் வாய் திறந்து பேசுமா?''

''வேண்டாம், இந்த வாதம். இதோ நான் புறப்பட்டு விட்டேன். இறைவன் தந்த விலை மதிப்பில்லாத பிறவியிலே கடந்ததை எண்ணி, இந்த இறுதி விநாடியிலே ஒரு சொட்டுக் கண்ணீர் விடு. தாகத்தோடு தவித்து வெளியேறும் நான் இந்த ஐம்பத் தெட்டு வருடங்கள் உன்னை இயக்கி உழைத்த தற்குக் கூலியாக அதைக் கொண்டு சென்று இறைவனுக்குப் படைக்கிறேன்.''

''உயிரே நீ போய் வா..... அரை நாழிகை கூட நீ தங்கக் கிடைத்தது... என் கடந்த காலத்தைத் திருப்பிப் பார்க்க...விக்...விக்''

உறவினர்களும் நண்பர்களுமாகக் கூட்டம் கசக்கிப் பிழிந்தது. ''அரை நாழிகைக்கு முன் போக வேண்டிய உயிர். கடைசி நிமிஷம் கண்களிலே கண்ணீரைப் பார். இந்த உடல், உயிர் சம்வாதம் ஒரு விடுதலைப் போராட்டம் ஐயா!'' முதியவர் ஒருவர் விழிகளை இழுத்து மூடினார்.

செல்வ விநாயகர் கோயில் திருப்பணி

கலிகாலத்தில் தும்பிக்கையான் பாதத்தை வழிபடுபவர்களுக்குத் தீராத வினைகளெல்லாம் தீர்ந்து விடும். சென்னை தாம்பரத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள சதானந்தபுரத்தில் வாழும் பக்தர்கள் செல்வ விநாயகருக்குக் கோயில் எழுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நான்குபுறமும் சுவரும், மேல் கோபுரமும் எழும்பியுள்ளன. இன்னும் திருப்பணி வேலைகளான பூச்சு வேலை, கதவு வேலை, பிள்ளையார் பிரதிஷ்டை, நவக்கிரகப் பிரதிஷ்டை ஆகியவை பாக்கி யுள்ளன. இந்தக் கைங்கரியம் பூர்த்தியுற ஆறாயிரம் ரூபாய்களுக்குமேல் தேவைப் படுகிறது. இந்தச் செல்வ விநாயகர் ஆலய நிர்மாணப் பணிக்குக் காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் பரிபூரண ஆசியை வழங்கியுள்ளார்கள். இந்தப் புண்ணிய கைங்கரியத்தில் பங்கு கொள்ள விரும்பும் ஆஸ்திக பக்தர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு நிதி அனுப்பி வைக்கலாம்.

திரு கே. நித்தியானந்தம், பொருளாளர், செல்வ விநாயகர் கோயில் ஆலயம், மறைமலை யடிகள் தெரு, சதானந்தபுரம், சென்னை - 63.

கலைமகள் ஏப்ரல்'70

தமிழ் புத்தாண்டு இதழில் ஆரம்பம்



காதல் பெரிதா? கீதம் பெரிதா? - இது சிக்கலான கேள்வியாகத் தோற்றுகிறதல்லவா? சுத்த ஏழையாக இருந்த ஒருவனைக் குருநாதர் அபாரமான சங்கீத வித்துவானாக்குகிறார். அவன் இசைப் பயிற்சியில் முன்னேறுகிறான். அவனிடம் காதல் கொள்வதில் சில பெண்கள் போட்டி யிடுகிறார்கள். கடைசியில்—? அதுதானே நாவலின் சுவையான முடிவு.


புல்லின் இதழ்கள்

கே. பி. நீலமணி எழுதியது

☆

உங்கள் பிரதிக்கு
ஏஜண்டினிடம் பதிவு செய்யவும்

கலைமகள் மயிலாப்பூர் சென்னை-4.



பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

இங்கு போன வாரம் 8 தியேட்டர்களை 'நக்ஸல்பாரிகள்' என்று புதுப் பெயருடன் அழைக்கப்பட்டு வரும் கம்யூனிஸ்ட் 'குண்டர்கள்' தாக்கி மிக மோசமான நிலையில் திரை, பிலிம், புரொஜக்டர் முதலியவைகளை ரோட்டில் போட்டுத் தீ வைத்துச் சாம்பலாக்கி விடுகிறார்கள். தியேட்டர் முதலாளி, மானேஜர் முதலியவர்களையும் தாக்கி விடுகிறார்கள்.

இவர்கள் உபயோகித்த ஆயுதங்கள், கத்தி, கடப்பாரை, வெடிகுண்டுகள். இதிலிருந்து மக்கள் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் இந்த நாட்டில் கம்யூனிசம் வந்தால் எப்படி இருக்கும் என்பதாகும். மற்றவர்கள் கருத்தை அவர்கள் ஏற்கமாட்டார்கள். பலாத்காரத்தை மட்டுமேதான் நம்புவார்கள். கம்யூனிஸ்டுகளின் 'வேலைகள்' இப்பொழுது மிகத் தீவிரமாக நடக்க ஆரம்பித்து விட்டன. தனியாக மாலை ஆறு மணிக்கு மேல் சில இடங்களுக்குப் போகவே முடியாது. திடீர் என்று நாலைந்து பேர்களாக வருவார்கள். கத்தி, துப்பாக்கி, வெடிகுண்டுடன் பயம் காட்டி, கையிலுள்ளதைப் பறித்துக் கொண்டு போய் விடுவார்கள். போலீசும் அவர்கள் கையில். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். எப்பொழுது எங்கு என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரிவதில்லை.

இந்தக் கம்யூனிஸ்டுகளின் வேலைகளை ஒடுக்க வங்காளத்தில் ராணுவத்தைத்தான் கொண்டு வர வேண்டும். வேறு வழி இல்லை.

கல்கத்தா,
8-3-70 வி. ஏ. நாராயணசாமி

தமிழ் நாடு சர்க்கார் தற்போதுள்ள நில உச்ச வரம்பை முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து பதினைந்து ஏக்கராகக் குறைக்க முடிவு செய்துள்ளது.

தற்போது விவசாய அபிவிருத்தி என்பது உடல் உழைப்பால் மட்டும் நடைபெறுவதல்ல. இயந்திரங்கள், பம்பு செட்டு, டிராக்டர் கருவிகள் மூலம் நடைபெறுவதாகும். ஆதலால், பொருளாதார வசதியற்ற விவசாயிகளிடம் சிறு சிறு துண்டுகளாக நிலங்களை ஒப்படைப்பதன் மூலம் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்க ஏதுவாகும். இதுமட்டு மல்ல, விவசாயத்துக்கு வேண்டிய பண உதவியும் மகசூல் காலம் வரை அவர்கள் குடும்பச் செலவுக்கும் சர்க்கார் உதவ வேண்டும். இதற்கெல்லாம் சர்க்காரிடம் போதிய நிதி வசதி ஏது? அப்படியே கொடுப்பதாக இருப்பினும் விவசாயத்தில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படுமானால் அதை ஈடு செய்ய வாய்ப்பேது? இதனால் அடுத்த மகசூலுக்கும் தடை ஏற்பட வழியுண்டு.

இதையெல்லாம் யோசித்துப் பார்ப்போமானால், உபரி நிலத்தை ஓரளவு வசதி படைத்த நிலமற்ற விவசாயிகளிடம்தான் ஒப்படைக்க வேண்டு மென்பது புலப்படும். ஏழை விவசாயிகளுக்கு நில விநியோகம் என்பதெல்லாம் அவர்களை ஏமாற்றுவதோ அல்லது பொருளாதாரச் சீர்குலைவை எதிர்நோக்குவதோ ஆகும்.

ஆதலால், அரசும், சட்டசபை அங்கத்தினர்களும் வறட்டு சித்தாந்தத்தை நீக்கி யதார்த்தமான நிலையை உணர்ந்து ஏழை விவசாயிகளுக்கு உதவக் கிராமந்தோறும் குடிசைத் தொழில்களை ஏற்படுத்தி அதில் நவீனத்தைப் புகுத்தி, வேலை வாய்ப்பளிக்கச் சிந்திக்க வேண்டும். விவசாயப் பணிகளுக்கான ஊதியத்தை இரு சாரார்களுக்கும் பாதகமின்றி நிர்ணயிக்க வேண்டும். அவர்கள் குடும்பங்களுக்குக் கல்வி, வைத்தியம், கூட்டுறவு பண்டகசாலை, சிறு தொழில்களுக்கான போதிய வசதிகள் போன்றவைகளில் கவனம் செலுத்தி உதவலாம்.

ராசிபுரம்,
2-3-70 வி. மாரப்ப கவுண்டர்


சமீபத்தில் வெளியான மத்திய பட்ஜெட் சோஷலிஸமா என்பதை ஏழை மக்கள் சிந்தித்து உணர வேண்டும். ஏழை விவசாய மக்களுக்கும் அன்றாட அத்தியாவசியமான பொருள்களாகிய டீ, சர்க்கரை, மண்ணெண்ணெய், டாய்லெட், சோப் போன்ற பொருள்களின் விலையை உயர்த்தும் விதமாக வரி விதித்து மத்திய சர்க்கார் ஏழைகளை வதை செய்துள்ளதுதான் சோஷலிஸமா?


இப்படிப் பல உருவங்களில் வரியை உயர்த்தி வறுமையில் வாடும் ஏழை மக்களின் மனத்தைப் புண்படுத்திக் கஜானாவை நிரப்புவது எதற்கு? கண்மூடித்தனமாகச் செலவு செய்ய, பயன் பெறாத திட்டங்களில் வீணடிக்க, லாபகரமில்லாத சர்க்கார் துறையில் முதலீடு செய்ய. உற்பத்தியைப் பெருக்க வழிசெய்யாமல், வர்த்தகர்களின் மேல் பழியைப் போட்டு ஆட்சிபீடம் ஏமாற்றி வருவதைப் பொது மக்கள் உணர்வார்களா?

மேட்டூர் அணை — 1
2-3-70 கே. ஸ்ரீநிவாசன்


உங்கள் எண்ணங்
களில் உதிக்கும்
வண்ணங்கள்,
கற்பனையில் பிறக்கும்
ரகங்கள், சரிகை
யிலிருந்து ''ச்சா ச்சா''
புடவைகள் உட்பட.
சேலைகளின் சோலை
கலா மந்திர்
கண்டேன்
மையல் கொண்டேன்
தரித்தேன்
கலா
மந்திர்
175/1, மவுண்ட் ரோடு
சென்னை-2.
Criterion KM 2344

டி வி எஸ்
கட்டும் பாடிகள்
பலவகையான
டிசைன்களை
உங்களுக்கு
அளிக்கிறது





டிவிஎஸ் — இந்தியாவிலேயே மிகப்பெரிய பாடிகள் கட்டும் ஸ்தாபனம்.



TVS

உங்கள்
நம்பிக்கைக்குரியது
டிவிஎஸ்

சுந்தரம்-இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை (இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

29—3—70 முதல்
சென்னை எழும்பூரில் துவங்கும்

16-வது அகில இந்திய கைத்தறி
பொருட்காட்சிக்கு
வருகை தாருங்கள்.

ELEGANT

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்



10% தள்ளுபடி

உங்கள் உயர்வான விருப்பத்தை
நிறைவேற்றிக் கொள்ளுங்கள்

கைத்தறி துணிகள் உங்களுக்கும்
உங்கள் குடும்பத்திற்கும்,
இல்லத்திற்கும் மதிப்பையும்
அழகையும் தருகின்றன.

இந்த் விசேஷ தள்ளுபடி எல்லா
''கோ-ஆப்டெக்ஸ்''
விற்பனை நிலையங்களிலும்.
பிரதம நெசவாளர் கூட்டுறவு
சங்கங்களிலும் கிடைக்கும்.

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
எழும்பூர், சென்னை-8, போன்: 82121 & 82122

எஸ். கே. சம்பந்தன் பி.ஏ.,எம்.பி. தலைவர்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



காலமெதுவாயினும் கோலாகலம் தரும் கோகா-கோலா!

மனத்தை ஈடுபடுத்தி விளையாடுவதன் மகிழ்ச்சியே வேறுதான்!
கூடவே கோகா-கோலா இருந்தால், ஆட்டம் களைகட்டும்; உற்சாகம்
துள்ளும்! கோகா-கோலாவின் சுவை, உள்ளத்தைக் கிறுகிறுக்க வைக்கும்
விறுவிறுப்பான சுவை...பருகப் பருகத் தெவிட்டாத தீஞ்சுவை!
கோகா-கோலா...மீண்டும் கோகா-கோலா...மறுபடியும் கோகா-கோலா!
உலகெங்கும் கோகா-கோலா அருந்துவோரின் எண்ணிக்கை பெருகி
வருகிறது. ஏனெனில், கோகா-கோலாவைப் போல
புத்துணர்வூட்டுவது வேறு எதுவுமே இல்லை!

Enjoy Coca-Cola

கோகா-கோலா, கோகா-கோலா கம்பெனியின் ரெஜிஸ்டர்டு ட்ரேட்மார்க்.

CMCC-13-162 TAM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon